வாரவெளியீடு

# ஆதவன்

ATHAVAN ආදවන්

ளி :1 18.6.2000 விலை ரூபா 12.00 ராவய வெளியீடு

உள்ளே....

- தமிழ் தேசிய அரசியல்...
- திம்பும் தீர்வும்...
- மலையக அரசியல்...
- காதல் உயர்வானது...



## சந்திரிக்கா, ரணில் இணக்கப்பாடு தீர்வொன்றைக் காணுமா?



## இந்தியாவின் நோக்கம் என்ன?



## சந்திரிக்கா, ரணில் முன்வைக்கும் தீர்வை

# பிரபாகரன் ஏற்பாரா?

## உரத்த சிந்தனை

# புரட்சி காலத்து இலக்கியம்

**லூசுன்**

> ஏப்ரல் 8, 1927 இல் இலக்கிய மேதை லூசுன் ஹாங்பு இராணுவக் கல்வி நிலையத்தில் "Literature Of a Revolutionary Pariod" என்னும் பொருளில் ஆற்றிய உரையின் சுருக்க வடிவம் இது.

இன்று இங்கு "புரட்சிக் காலத்து இலக்கியம்" என்னும் பொருளில் சிற்றுரை ஆற்ற வந்துள்ளேன். இந்தக் கல்லூரி என்னைப் பல தடவைகள உரையாற்ற அழைத்திருந்த போதிலும் நானே இதனை ஒத்திப்போட்டும் வந்துள்ளேன். எதற்காக? நான் சில சிறுகதைகளை எழுதியிருக்கிறேன் என்றும்- இலக்கியம் பற்றி என்னிடத்திலிருந்து ஏதாவது கேட்க விரும்பியுமே அழைத்ததாக நம்புகிறேன். உண்மையில் நான் அத்தகைய சிறுகதையாசிரியனுமல்ல. அதைப் பற்றிய விசேட அறிவும் எனக்கில்லை. நான் முதலாவதாக சிரத்தையோடு கற்றுக் கொண்டது சுரங்கத்தொழில் பற்றியேயாகும். எனவே இலக்கியத்தை விட கரிச்சுரங்கம் அகழ்தலைப்பற்றிய சிறந்த உரையை என்னால் வழங்க முடியும் என நான் கருதுகின்றேன். உண்மையில் இலக்கிய விருப்பின் காரணமாகத்தான் நான் கணிசமான அளவு வாசித்துள்ளேன். ஆனால் உங்களுக்குப் பயன்படத்தக்கதான எதனையும் நான் அந்த வாசிப்பிலிருந்து கற்றுக் கொள்ளவில்லை. அண்மைக் காலங்களில் பீக்கிங் நகரில் எனது அனுபவங்கள் நான் வளர்ந்து வந்த பழைய இலக்கிய கோட்பாடுகளின் மீதான எனது நம்பிக்கையை படிப்படியாக சிதைத்தே வந்துள்ளன. இது எப்போதெனில் மாணவர்கள் சுடப்பட்டு இறந்தபோதும் கடுமையான தணிக்கைகள் அமுலிலிருந்த போதும் இலக்கியத்தைப்பற்றிப் பேசுபவர்கள் மிகவும் பலவீனமான- எதற்கும் லாயக்கற்றவர்களேயென எனக்குப் படுகிறது. உறுதியானவர்கள் பேசுவதில்லை. அவர்கள் போராடுபவர்கள். நசுக்கப்படுபவர்கள் சில வார்த்தைகளை எழுதவோ பேசவோ கூடும். அதன் விளைவாக அவர்கள் உயிரிழக்கவும் கூடும். அவர்கள் பிழைக்கக் கூடிய அதிர்ஷ்டசாலிகளாக இருந்தால் அவர்கள் செய்யக் கூடியதெல்லாம் உரக்கச் சத்தமிடுதலோ அல்லது கண்டனம் செய்வதோ தான். அதேவேளை பலம் வாய்ந்தவர்கள் அவர்களை நசிக்கியவாறும் மோசமாக நடத்தியவாறும் கொன்ற வண்ணம் இருக்கிறார்கள். அப்படியானால் இந்த மக்களுக்கு இலக்கியத்தால் ஏற்படும் நன்மைதான் என்ன?

எப்படியிருந்த போதிலும் இன்றைய புரட்சிக் காலகட்டத்து எழுத்தாளர்கள் இலக்கியம் புரட்சியில் பெரும்பங்கினை வகிக்கமுடியுமென்று கருதுகிறார்கள். ஆனால் எனக்கு இவ்வகை இலக்கியங்களில் வீரியம் இருப்பதில்லையென்றே படுகின்றது.

புரட்சிக்கு புரட்சிவாதிகளே தேவை. புரட்சி இலக்கியங்கள் தாமதித்தும் வரலாம். ஏனெனில் புரட்சிவாதிகள் எழுத ஆரம்பிக்கும் போது தான் புரட்சி இலக்கியங்கள் உருவாகின்றன. என்னைப் பொறுத்தமட்டில் புரட்சிதான் இலக்கியத்தில் பாரிய பங்கினை வகிக்க முடியும். புரட்சிகர காலத்து இலக்கியம் என்பது சாதாரண காலகட்டத்தின் இலக்கியங்களிலிருந்து வேறுபட்டனவே. புரட்சியின் போது இலக்கியங்களும் மாறுதல்களுக்குள்ளாகின்றன. ஆனால் பாரிய புரட்சிகளே இவ்வாறு மாற்றங்களைக் கொண்டு வரவல்லது. சிறுசிறு கிளர்ச்சிகளால் இத்தகைய மாற்றங்கள் சாத்தியமில்லை.

புரட்சி என்ற பதத்தை இங்குள்ள ஒவ்வொருவரும் கேட்டுப் பழக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் இதே பதத்தை கியாங்சு அல்லது செக்கியாங்கில் பாவித்தீர்களானால் நீங்கள் மக்களை பயமுறுத்தியவர்களாவீர்கள். புரட்சி என்பது ஒன்றும் வினோதமானதல்ல. சகல சமூகமாற்றங்களும் புரட்சியிலிருந்தே பிறக்கின்றன. இவ் வகையிலேயே மனுக்குலம் மெதுவாக வளர்ச்சியடைந்து காட்டுமிராண்டி நிலையிலிருந்து நாகரிக நிலைக்கு தன்னை உயர்த்திக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இறக்குந்தறுவாயில்லாத சகல இனங்களும் ஒவ்வொரு நாளும் கிளர்ந்து கொண்டேயிருக்கின்றன.

மாபெரும் புரட்சிகள் இலக்கியத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன? இதை மூன்று காலகட்டங்களாக வகுக்கலாம்.

1. ஒரு மாபெரும் புரட்சிக்கு முன் இலக்கியங்கள் சமூக நிலைமைகளின் மீதான அவலத்தையும், அதிருப்தியையும் வெளிப்படுத்தி வேதனைக்குரல் எழுப்புகின்றன. இத்தகைய படைப்புகள் உலகம் முழுவதும் நிறைய இருக்கின்றன. இவற்றால் புரட்சிக்கு எதுவித நன்மையுமில்லை. வெறுமனே முறையீடுகளோ அல்லது புலம்பலோ பயனற்றவை. உங்களை அடக்கி நசுக்குபவன் இவற்றைப் பொருட்படுத்தப் போவதில்லை. புலம்பல் இலக்கியங்கள் ஒருவனுடைய முனகலையும் விரக்தியையும் வெளிப்படுத்தும் அதே வேளைகளில் அடக்கி நசுக்குபவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பையும் வழங்கிவிடுகின்றன. சிலதேசங்கள இத்தகைய புலம்பல்கள் பயனற்றன என்று கண்டபோது அதற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டன. மேலும் மேலும் வீழ்ச்சியைத் தழுவுகின்ற இந்நாடுகள் மௌனமான தேசங்களாக மாறுகின்றன. புரட்சியின் குரல்கள் ஓய்ந்து போன எகிப்து, அரேபியா, பாரசீகம், இந்தியா போன்ற நாடுகள் இதற்கு நல்ல சாட்சிகள். ஆனால் உள்ளார்ந்த வீறுகொண்ட வேறுநாடுகளோ புலம்பலைக் கைவிட்டுப் போராடத் துணிகின்றன. யதார்த்த நிலைகளை நேருக்கு நேர் எதிர்கொள்கின்றன. முனகல் கோபக்கினியாக மாறுகின்றது. இத்தகைய இலக்கியங்களின் வருகையே புரட்சிகர மாற்றங்களுக்கு கட்டியங் கூறுகின்றன. புரட்சிக்கு சற்று முந்திய இலக்கியங்கள் மக்களின் கோபாவேசத்தையும் மாற்றத்தை வேண்டிநிற்கும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துகின்றன. இத்தகைய இலக்கியங்கள் தான் ஒக்டோபர் புரட்சிக்கு விடிவெள்ளிகளாக மலர்ந்தன. இதற்கு விதிவிலக்குகளும் இல்லாமலில்லை. வஞ்சம் தீர்க்கவேண்டுமென்ற இத்தகைய இலக்கியத்திற்கு போலந்தில் நீண்ட பாரம்பரியம் இருந்தபோதும் அதனுடைய மீட்சிக்கு முதலாவது உலகப் போரே வித்திட்டது எனலாம்.

2. ஒரு பாரிய புரட்சி நிகழ்ந்து கொண்டிருக்கும் வேளையில் இலக்கியம் பின் தள்ளப்பட்டுவிடுகிறது. புரட்சி அலை வீறுகொள்கிறது. வெறும் கூச்சல்கள் செயல்களாக மாறுகின்றன. மக்கள் புரட்சியை முழுமைப்படுத்துவதில் மூழ்கிப்போகிறார்கள். வறுமை தலைவிரித்தாடும் போது இலக்கியம் பற்றிப் பேச மக்களுக்கு அவகாசம் இருப்பதில்லை. பழமை வாதிகளும் புரட்சியின் வீச்சினால் அதிர்ச்சியடைந்து நிலைகுலைந்து விடுவார்கள். "வறுமை எங்கிருக்கிறதோ அங்கிருந்தே இலக்கியங்கள் பிறக்கும்" என்பது சிலர் கூற்றாகும். இது ஒரு தவறான கருத்தாகும். ஏழ்மையில் எழுத முடிவதில்லை. எனக்கு பணக்கஷ்டம் ஏற்படும் போதெல்லாம் கடன் கேட்டுப் பீக்கிங் நகர வீதிகளைச் சுற்றித் திரிந்திருக்கிறேனே தவிர, ஒரு சொல் கூட எழுதவில்லை. சுமையைக் காவிச் செல்பவனும், ரிக்ஷோ வண்டியிழுப்பவனும் இலக்கியம் எழுத வேண்டுமெனில் அவர்களுடைய சுமைகளை முதலில் இறக்கி வைக்க வேண்டும். புரட்சியும் இத்தகையதே, அதிகார வர்க்கத்தினரோடு மக்கள் போராடிக் கொண்டிருக்கும் சமயத்தில் நலைபெற்றுள்ள சமூக அமைப்பை மாற்றுவதே முதன்மை பெறுகிறது. எழுதுவதற்கான அவகாசமோ அன்றி முனைப்போ இருப்பதில்லை. இதனால் தான் இலக்கியம் புரட்சிக் காலகட்டத்தில் தற்காலிக மௌனத்தில் ஆழ்ந்து விடுகிறது.

3. புரட்சி வெற்றியடைந்த பின் நிலைமை ஒரளவு சமுகமடைந்து மக்கள் நலம் பெறுகின்றனர். இலக்கியம் மீண்டும் எழுதப்படுகிறது. இக்காலகட்ட இலக்கியங்கள் இரு வகையாக அமைகின்றன. ஒன்று புரட்சியில் திளைத்து புகழ் பாடுவது. ஏனெனில் சமூகத்தின் மாறுதல்களினாலும், முன்னேற்றங்களினாலும், பழைய அமைப்பின் சிதைவாலும், புதிய அமைப்பின் நிர்மாணத்தினாலும் முற்போக்கு எழுத்தாளர்கள் ஈர்க்கப்படுகின்றனர். இரண்டாவது வகை பழைய சமூக அமைப்பின் சிதைவிற்காக - கழிவிரக்கம் கொண்டு புலம்புவது. புரட்சி ஏற்பட்டபோதும், நீண்ட காலமாகவே பழைய மரபுகளிலும், சிந்தனைகளிலும், ஊறியவர்கள், திடீரென மாறிவிடுவார்கள் என்று கூறுமுடியாது. அவர்களுடைய சூழல் படிப்படியாக மாறி அவர்களுடைய வாழ்க்கைப் போக்கையும் மாற்றத்திற்கு உள்ளாக்குகிறது. இதனால் விரக்தியுற்று கடந்தகால வாழ்க்கை நிலைமை நினைவு கூர்ந்து தங்கள் இயலாமையையும் முணுமுணுப்பையும் காலத்திற்கு ஒவ்வாத புலம்பல் இலக்கியங்களாக வடிக்கிறார்கள். இவ்வகையான இலக்கியங்கள் ஒரே பிரலாபங்களாகவும், புதியமாற்றத்தைச் சகித்துக்கொள்ளாததன் வெளிப்பாடுகளாகவும் இருக்கும். இவையே புரட்சி நடந்து முடிந்திருப்பதற்கான நிலைமையைத் தெரிவிக்கின்றன.

இத்தகைய இருவகை இலக்கியங்களும் இன்று சீனாவிலில்லை. எனவே சீனப்புரட்சி இன்னும் முழுமையடையவில்லை. இது ஒரு மாறும் காலகட்டமேயாகும். புரட்சியாளர்கள் தீவிரமாகச் செயற்பட வேண்டிய நேரமிது. பழைய இலக்கியங்கள் இன்னும் நிறையவே எஞ்சியுள்ளன. இன்று பத்திரிகைகளில் வெளிவருவனவும் பழைய இலக்கியங்களை அடியொற்றியே எழுதப்படுகின்றன. சீனப் புரட்சி எமது சமூகத்தில் மிகக் குறைவான மாறுதல்களையே ஏறபடுத்தியுள்ளது. பழமைவாதிகளின் சிந்தனைகள் எதுவித பாதிப்பிற்கும் உள்ளாகவில்லை. "கான்ரன்" பத்திரிகைகளில் நாம் காணும் எழுத்துக்கள் இன்னும் பழைய பாணியிலமைந்திருப்பது எதனைக் காட்டுகிறதெனில், புரட்சி அலைகள் இன்னும் எமது சமூகத்தை தழுவிச் செல்லவில்லை என்பதையே. புதுமையைப் பாடும் இலக்கியங்களோ அல்லது, பழமைக்காக ஏங்கும் இலக்கியங்களோ வெளிவரவில்லை. "குவாங்டங்" மாநிலமும் பத்து ஆண்டுகளுக்கு முன் எப்படியிருந்ததோ அவ்வாறே இப்பொழுதும் காட்சி தருகிறது. இதுமட்டுமல்ல- கிளர்ச்சிகளோ, ஆர்ப்பாட்டங்களோ ஒன்றும் நிகழவில்லை. தொழிற் சங்கங்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியபோதும் அவற்றை அரசாங்கத்தின் அனுமதி பெற்றே தான் செய்கின்றன. அடக்குமுறைக்கு எதிரான கிளர்ச்சியல்ல இது. அரசின் அனுமதியோடு நடக்கும் புரட்சி இது. சீனா இன்னும் மாறவில்லை. ஆதலால் தான் கடந்தகாலத்திற்கு ஏங்கும் இலக்கியங்களோ, புரட்சியைப் போற்றும் புதுமை இலக்கியங்களோ இன்று இல்லை. ஆனால் சோவியத் ரஷ்யாவில் இவ்வகை இலக்கியங்கள் உண்டென்றே கூறவேண்டும் ஏனெனில் வெளிநாடுகளுக்கு ஒளித்தோடிச் சென்ற பழைய ரஷ்ய எழுத்தாளர்கள் அங்கிருந்து கொண்டு பெரும்பாலும் கடந்தகால வாழ்வுக்கு ஏங்கும் இலக்கியங்களையே படைக்கும் அதேநேரத்தில் புதிய இலக்கியங்கள் அங்கு தலையெடுக்க முனைகின்றன. உன்னதமான படைப்புகள் இன்னும் வெளிவராவிடினும், புதிய இலக்கியங்களின் எண்ணிக்கை கணிசமான அளவு பெருகியேயுள்ளன. முழுமையான புரட்சிக்கு பிறகே முற்றிலும் புதிய நிர்மாணிப்புகள் புகமுடியும். இருந்தும் இதற்குப் பிறகு என்ன நிகழுமென்று சொல்ல முடியாது. புரட்சியினால் முழு உலகும் மக்களுக்குச் சொந்தமாகிற படியால் மக்கள் இலக்கியம் மலருமென்று நான் நினைக்கிறேன்.

இன்று சில எழுத்தாளர்கள் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் தங்களுடைய நாவல்களுக்கும், கவிதைகளுக்கும் உரிய மாந்தர்களாகப் படைக்கிறார்கள், இவை மக்கள் இலக்கியமென்றும் அழைக்கப்படுகின்றன. உண்மையில் இவை அவ்வாறில்லை. மக்கள் தங்கள் வாயைத் திறந்து இன்னும் ஒன்றையும் வெளியிடவில்லை. இவ்வகைப் படைப்புகள் பார்வையாளர்களது உணர்வு நிலையையே சித்திரிக்கின்றன. எங்களுடைய எழுத்தாளர்களிற் சிலர் ஏழைகளாக இருந்த போதிலும் அவர்கள் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் விட வசதிப்படைத்தவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுடைய படைப்புக்கள் மக்களிடமிருந்து வருவது போல் தோற்றினாலும் உண்மையில் அவை அவ்வாறில்லை. அவை சமானியர்களது உண்மையான கதைகளல்ல. இன்று சில எழுத்தாளர்கள் நாட்டுப் பாடல்களை பொதுமக்களின் இதயத்திலிருந்து வருவன என்று கூறிப் பதிவுசெய்ய முற்பட்டுள்ளார்கள். எது எவ்வாறிருப்பினும் பழைய இலக்கியங்களின் மறைமுகமான பிடிப்புகளிலிருந்தும் அவற்றின் உள்ளார்ந்த நம்பிக்கைகளிலிருந்தும் அவர்கள் இன்னும் விடுபடவில்லை. ஏனென்றால் மூவாயிரம் ஏக்கர் நிலப்பரப்புக் கொண்ட நிலவுடமையாளன் மீது வைத்திருக்கும் எல்லையில்லா பிரமிப்பு நீங்கவில்லை. இதைவிட அந்தக் கனவானுடைய கருத்துகளையே தம்முடையவனாகக் கூறும் போக்கும் மாறவில்லை. நாட்டுப் பாடல்களினுடைய உருவமும் அவற்றினுடைய உள்ளடக்கமும் சீரழிவுற்றனவாயே இருக்கின்றன. இத்தகைய படைப்புகளை உண்மையான மக்கள் இலக்கியம் என்று சொல்ல முடியாது. இங்கு கவிதை, புனைகதை போன்றன வேறநாடுகளைப் போல் நன்றாக வளரவில்லை என்றே சொல்ல வேண்டியுள்ளது. இவற்றை இலக்கியங்கள் என்று அழைத்தாலும், புரட்சிகரகாலத்து இலக்கியமென்றோ அல்லது மக்கள் இலக்கியமென்றோ கூறமுடியாது. இன்றைய எழுத்தாளர்கள் எல்லோரும் கல்வியறிவுள்ளவர்கள். தொழிலாளர்களும், விவசாயிகளும் பூரண விடுதலை பெறும்வரை இலக்கியவாதிகளைப் போன்றே சிந்திப்பார்கள். உண்மையான விடுதலை உழைக்கும் வர்க்கத்தினருக்கு என்று சாத்தியமோ, அதற்குப் பிறகே உண்மையான மக்கள் இலக்கியம் தோன்றும். இதனால் தான் "எங்களிடம் இப்பவே மக்கள் இலக்கியம் இருக்கின்றது" என்று சொல்லுதல் தவறாகும்.

நீங்கள் உண்மையான போராளிகள் புரட்சிக்காக போராடுகிறீர்கள். இலக்கியம் படிப்பதோ அன்றி நயப்பதோ போராடுவதற்கு துணைபோகாது. போர்முனைக் கவிதையொன்றினை நீங்கள் எழுதக்கூடும். நன்றாக எழுதியிருந்தால் போராடியதன் பின்பு நீங்கள் ஓய்வாக இருக்கும் பொழுது வாசித்தால் ஒரு நல்ல அனுபவமே. சீனாவின் இன்றைய நிலையில் உண்மையான புரட்சிப்போரே மிகமிக அவசியம். சன்சுவான்பாங் என்ற யுத்த பிரபுவை கவிதை பயமுறுத்தவில்லை. துப்பாக்கி வேட்டே அவனை விரட்டியது. சிலர் இலக்கியம் புரட்சியில் பெரும் பாதிப்பையேற்படுத்தும் என்று நம்புகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு இதில் சந்தேகமே. இறுதியில் இலக்கியம் ஒரு தேசத்தின் கலாசாரத்தை பிரதிபலிக்கிறதுதானென்றாலும் ஓய்வுள்ளபோதே செய்யப்பட வேண்டியது.

சில கட்டுரைகள் எழுதியதைவிட நான் ஒன்றையும் சாதிக்கவில்லை. நான் சலிப்புற்றிருக்கிறேன். இருந்தும் துப்பாக்கியை ஏந்தும் நீங்கள் இலக்கியம் பற்றி அறிய அவாக்கொண்டுள்ளீர்கள். ஆனால் நானோ துப்பாக்கி வேட்டுகளின் சத்தத்தையே கேட்க ஆர்வங்கொண்டுள்ளேன். ஏனெனில் துப்பாக்கி வேட்டுகளின் சத்தம் இலக்கியத்தை விட கேட்பதற்கு நன்றாக இருக்கும். இதைத்தான் நான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

**தமிழில்:**
**கோ. கேதாரநாதன்**
**நன்றி: சமர்**

---

*உரத்த சிந்தனை பகுதிக்கு வாசகர்கள் தங்கள் கருத்துக்களை எழுதலாம். மாற்றுக் கருத்துக்களும் வரவேற்க்கப்படும். ஆக்க பூர்வமானவைகள் பிரசுரிக்கப்படுவதோடு கலை இலக்கிய அரசியல் சம்பந்தமான புதிய நோக்கினைக் கொண்டதாகவும் விவாதத்திற்கு ஏற்புடையதாகவும் ஆக்கங்கள் தட்டச்சு தாளில் மூன்று பக்கங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.*

# குமார் படுகொலை சூத்திரதாரியை அடையாளம் காட்ட மறுப்பது ஏன்?

ஜனவரி மாதம் 5ம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ணன் வீதியில் வைத்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இக் கொலையின் சூத்திரதாரியான மொரட்டுவ சமன் உட்பட மேலும் இருவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுவதாக சி. டி. பி பொலிஸ் திணைக்கள பணிப்பாளர் எல். எஸ். பி. பந்துல விக்கிரம சிங்க நேற்று தெரிவித்துள்ளார்.

ஆனால் ஆதவன் சகோதரப் பத்திரிகையான ராவய ஏப்ரல் மாதம் 23ம் திகதி இதழில் இது தொடர்பான உண்மைத் தகவல்களை வெளியிட்டிருந்தது.

மொரட்டுவ சமன் அரசாங்கத்தின் ஆதரவில் செயல்படும் கைக் கூலி கும்பலைச் சேர்ந்தவராவார். மொரட்டுவ சமன் உட்பட 7 பேர் மருதானை தேவநம்பிய திஸ்ஸ மாவத்தையில் உள்ள வீடொன்றில் வைத்து வாழைத் தோட்ட பொலிசாரினால் ஏப்ரல் மாதம் 6ம் திகதி கைது செய்யப்பட்டார். கைது செய்யப்படும் போது 2 ரிவால்வர்களும் மில்லிமீட்டர் 9 ரக பிஸ்டல் ஒன்றும் 40 சன்னங்களும் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டன. 20 கொலைக் குற்றங்களுக்கும் 15 கொள்ளைச் சம்பவங்களுக்கும் 10 ஆட்கடத்தல் சம்பவங்களுக்கும் தொடர்புடையவர் என்ற காரணத்தினால் இவர் பொலிசாரினால் தேடப்பட்டு வந்த குற்றவாளியாவார்.



குமார் பொன்னம்பலம் அவர்களுடன் சம்பவம் நடைபெற்ற அன்று பென்ஸ்காரில் இவர் சென்றுள்ளார். வாகனம் வெள்ளவத்தை இராமகிருஷ்ணன் வீதியில். செல்லும் போது இவர் இடையில் இறங்கியுள்ளார். அதன் பின் வாகனம் திரும்பி வரும் போது இடைநிறுத்தி குமார் அவர்களை இவரே சுட்டுக் கொண்டுள்ளார் என நம்பகரமான செய்திகள் தெரிவிக்கின்றன. இக் கொலைச் சம்பவத்தில் மேலும் இருவர் சம்பந்தப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

ராவயவில் வெளிவந்த செய்தியை அறிந்த குமார் பொன்னம்பலத்தின் குடும்பத்தார் சமனை அடையாளம் காட்ட பொலிசாரிடம் கேட்ட போது பொலிசார் இதற்கு மறுத்துள்ளதுடன் பத்திரிகையில் வெளிவந்த செய்தி பொய் என்றும் எல். டி. டி. ஈ. இயக்கத்தினரே இக் கொலையை புரிந்துள்ளனர் என்க் கூறியுள்ளனர்.



சமன் குமார் பொன்னம்பலத்தின் வீட்டிற்கு அடிக்கடி போய் வந்துள்ளார். இது தொடர்பாக வீட்டாருக்கு சந்தேகம் எழவே வழக்கு விடயமாக வந்து போவதாக குமார் கூறியுள்ளார். ஜனவரி 3ம் திகதி குமார் சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரம சிங்கவுடன் தொலைபேசியில் உரையாடும் பொழுது தனக்கு கொலை அச்சுறுத்தல் உள்ளதாக கூறியுள்ளார். இவர்கள் உரையாடும் போது குமார் பொன்னம்பலம் மனைவி அருகில் இருந்துள்ளார். எனவே குமாரின் குடும்பத்தினர் குமாரின் கொலையை அரசியல் படுகொலையாகவே கருதுகின்றனர். ■

# இந்தியப் பிரதமருக்கு அவசர வேண்டுகோள்

யாழ் குடாநாட்டில் தொடரும் போர் நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வர போரில் ஈடுபட்டுள்ள இர தரப்பினரையும் ஒரு இணக்கப்பாட்டிற்கு கொண்டுவர உதவுமாறு அமைதிக்கும் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான இயக்கத்தின் ஊடாக இந்தியப் பிரதமர் அடர் பிஹாரி வாஜ்பாயிடம் யாழ்குடா நாட்டு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ் குடாநாட்டில் தொடரும் உக்கிரமான போர் நடவடிக்கைகளால் உயிரழிவு, சொத்தழிவு, இடம்பெயர்வு, அகதிவாழ்க்கை, பொருளாதார நெருக்கடி போன்ற மனித அவலங்கள் அதிகரித்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ■

# வரதரின் புதுக்கட்சி

இந்தியாவில் கடந்த 10 வருடங்களாக அஞ்ஞாதவாசம் மேற்கொண்டிருந்த முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப் பெருமாள் தலைநகர் கொழும்பில் திரும்பிய போது பல்வேறு ஊடகங்கள் இலங்கை அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்பட்டது.

தலைநகர் கொழும்பிலும் தன்னை வெளிக்காட்ட விரும்பாத ஒருவர் போல் 3 மாதங்களுக்கு மேலாக பாதுகாப்பான பகுதியில் அமைந்துள்ள அரச விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தவர் ஈ. பி. ஆர். எல். எப். இற்குள் எழுந்த தலைமைத்துவ போட்டி காரணமாக தன்னை வெளிக்காட்டத் தொடங்கினார்.

அதன் பின்னர் ஈ. பி. ஆர். எல். எப். மத்திய குழுவிற்குள் எழுந்த சர்ச்சைகள் காரணமாக பிரிந்து செயற்பட்டு வரும் வரதராஜப் பெருமாள் விரைவில் புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிய வருகிறது. ■

# வெற்றியளித்த மாணவர் பகிஸ்கரிப்பு

கடந்த வெசாக் தினத்தன்று மட்டக்களப்பு நகரில் இடம் பெற்ற குண்டு வெடிப்பிலும் அதன் பின்னான அனர்த்தங்களிலும் கொல்லப்பட்ட மாணவர்களை நினைவு கூர்ந்து நடாத்தப்பட்ட மாணவர் பகிஸ்கரிப்பு போராட்டத்தில் வவுனியா மன்னார் மாவட்ட பாடசாலைகளில் மாணவர் வரவு மிக மிக சொற்பமாகவே காணப்பட்டது என எமது வவுனியா செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். மாணவர் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த பகிஸ்கரிப்பு போராட்டத்தினால் தனியார் கல்வி நிலையங்கள் இயங்கவில்லை. எனினும் பாடசாலையின் நிர்வாக இயக்கமும் ஆசிரியர்களது வரவும்வழமைபோல் காணப்பட்டன.

# சொய்சாபுர பகுதியில் தொடரும் பீதி

இரத்மலானையில் ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான கே. வி. குணரத்னா மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து மொரட்டுவ, இரத்மலனை பகுதிகளில் தொடர்ந்தும் ஒரு வித அச்சநிலையே தோன்றியுள்ளது.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடைபெற்றதிற்கு பின்னர் அப்பகுதியிலுள்ள 3 கடைகள்நாசமாக்கப்பட்டதுடன் கத்தி, வாள், பொல்லுகளுடன் திரண்ட நூற்றுக்கணக்கான காடையர்கள் அப்பகுதியில் [illegible]ப்பட்ட பல தமிழ்ப் பொதுமக்கள் மீதுதாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

அதே கும்பல் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் சொய்சாபுர தொடர்மாடிப் பகுதிக்குள் நுழைந்து அங்குள்ள தமிழ் மக்களை தாக்கமுற்பட்ட போது பொலிசார் வானை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தே நிலமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.


இன்னமும் இரத்மலானை மொரட்டுவை பகுதியில் ஒரு வித பீதி நிலவுவதுடன் தமிழ்மக்கள் இப்பகுதியில் சுதந்திரமாக நடமாட முடியாத நிலையிலுள்ளனர்.

# உள்நாட்டு செய்தி தணிக்கையை நீக்கு

அமெரிக்க நியூயோர்க்கை தளமாக கொண்டு இயங்கும் C.P.J என்ற பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான இயக்கத்தின், செயலாற்றுப் பணிப்பாளர் ஆன் கூப்பர் இலங்கையின் பத்திரிகை தணிக்கை தொடர்பாக ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். மேற்படி கடிதத்தில் வெளிநாட்டு ஊடகங்கள் மீதான செய்தி தணிக்கையினை நீக்கியமைக்கு நன்றி தெரிவித்த ஆன் கூப்பர் உள் நாட்டில் நடைமுறையில் உள்ள தணிக்கையினையும் உடனடியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார். உள்நாட்டுப் பிரச்சினையை வெளிநாட்டில் உள்ளவர்கள் புரிந்து கொள்ள முடியுமானால் ஏன் அந்த நாட்டு மக்கள் மட்டும் அறியக் கூடாது என்று கேள்வி எழுப்பிய ஆன் கூப்பர் உலக நாடுகளில் பேணப்படும் ஊடக சுதந்திரம் பற்றியும் விளக்கியுள்ளார்.

ஆதவன்

ஆதவன் பத்திரிகை UNESCO அமைப்பின் அனுசரணையுடன் வெளியிடப்படுகின்றது. சிங்களத்தில் வெளிவரும் "ராவய" பத்திரிகை துணிவான கருத்துக்களை முன்வைத்தும் பயனுள்ள விவாத்தளத்தினை உருவாக்கி வெளிவருவதுடன் தமிழ் மொழியிலும் இவ்வாறானதொரு பத்திரிகையை வெளிக்கொணர்வதே இதன் நோக்கமாகவும் உள்ளது.



# விடுதலைப்புலிகளின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?



யாழ் குடா நாட்டில் மோதல்கள் தீவிர
மடைந்துள்ளது. யாழ் நகரைக் கைப்பற்ற புலிகளின் அடுத்த கட்டத் தாக்குதல்களுக்காக புலிகள் அணிதிரண்டு வருவதால் புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன. புலிகளின் முன்னேற்ற முயற்சிகளை தடுத்து நிறுத்தும் பல்வேறு முயற்சிகளிலும் அரசும் படையினரும் தீவிரமாக இறங்கியுள்ளனர். படையினருக்கான ஆயுத விநியோகம் முதல் ஆட்பல அதிகரிப்பு வகையான சகல ஆயத்தங்களும் மேற்கொள்ளப்புட்டுள்ளன. பல்வேறு நாடுகளிடமிருந்தும் படையினருக்கு பெருமளவு இராணுவத் தளபாடங்கள் வந்து குவிந்த வண்ணமுள்ளன. சாவக்கச்சேரியில் புலிகளுக்கு எதிராக படையினர் இரு முறை பாரிய நகர்வு முயற்சியையும் மேற்கொண்டுள்ளனர்.

ஆனையிறவை புலிகள் கைப்பற்றிய பின்னரே பல்வேறு நாடுகளிடமிருந்தும் பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களும் இராணுவத் தளபாடங்களும் படையினருக்காக விமானங்கள் மற்றும் கப்பல்கள் மூலமாக தருவிக்கப்படுகின்றன. இலங்கைப் போர் முனைகளில் பல குழல் ரொக்கட் லோஞ்சர்கள் (Malti Barrel Rocket Leacher - M.B.R.Ls) எனப்படும் பீரங்கி வகையை புலிகளே முதல் தடவையாகப் பயன்படுத்தியிருந்தனர். கடந்த வருட முற்பகுதியில் மன்னார் தள்ளாடி படை முகாம் மீதான தாக்குதலின் போது புலிகள் இதனைப் பயன்படுத்தியதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து படையினரின் பல்வேறு இராணுவ நடவடிக்கைகளின் போதும் புலிகள் இந்த எம். பி. ஆர்.எல் பீரங்கிகளை தாராளமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

வன்னியில் கடந்த வருடம் பிற்பகுதியில் அவர்கள் நடத்திய "ஓயாத அலைகள்" தாக்குதலின் போதும் புலிகள் இந்த ரொக்கட் செலுத்திகளைப் பயன்படுத்தியே படையினரின் பல முகாம்கள் மீதும் பாரிய தாக்குதல்களைத் தொடுத்திருந்தனர். இதைவிட படையினர் வசம் கைப்பற்றிய நீண்ட தூர ஆட்லறிகளையும் அவர்கள் இந்தப் படைமுகாம்கள் மீதான தாக்குதல்களுக்குப் பயன்படுத்தினர். தங்கள் ஆட்பலத்தை விட



ஆயுதபலத்தின் மூலமே அவர்கள் வன்னியில் படைமுகாம்களை தாக்கியழித்து அவற்றையும் அந்தந்தப் பிரதேசங்களையும் தங்கள் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர்.

ஆனையிறவு படைத் தளம் மீதான தாக்குதலின் போது இந்த ரொக்கட்டுகளை புலிகள் தாராளமாகப் பயன்படுத்தியுள்ளனர். ஆனையிறவு படைமுகாம் அவர்கள் வசம் வீழ்வதற்கு முன்னர் வடமராட்சி கிழக்கினூடாக நுழைந்து தென்மராட்சியை ஊடறுத்து இயக்கச்சி நோக்கி முன்னேறிய போது பீரங்கிக் குண்டுகளை மழை போல் பொழிந்தாக படையினர் தெரிவித்திருந்தனர். தென்மராட்சியின் குறுகலான பகுதிக்குள் பெருமளவு படையினர் நிலை கொண்டிருந்ததால் அத்தாக்குதல்கள் அவர்களுக்கு பெரும் நெருக்கடியாய் இருந்தன. இந்த நேரத்திலும் படையினர் வசம் எம். பி. ஆர். எல். கள் இருக்கவில்லை.

தணிக்கை

புலிகள் வசம் இந்த எம். பி. ஆர். எல். கள் இருந்து அவை அதிகளவு பலனை அவர்களுக்கு ஏற்படுத்தியதையடுத்து இவ்வகை ரொக்கட் செலுத்திகளை கொள்வனவு செய்வதில் படையினர் தீவிர ஆர்வம் காட்டினர். இதுவரை பாகிஸ்தான், சீனா, செக் குடியரசுகளிடமிருந்து பெருமளவு எம். பி. ஆர். எல். களை இலங்கை அரசு கொள்வனவு செய்துள்ளது. இதில் 24ஐ செக்குடியரசு வழங்கியுள்ளது. தற்போது குடாநாட்டில் படையினர், பல்வேறு பகுதிகளிலும் இவற்றை நிறுத்தி புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தி வருவதாக படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தணிக்கை

ஏவுகணைகள் பொருத்தப்பட்ட அதிவேக பீரங்கிப்படகுகள் என பெருமளவு இராணுவத் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வடக்கே போர் முனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. புதிதாக வந்து சேர்ந்த பெருமளவு ஆயுதங்கள் யுத்த முனையில் பெருமளவு பயனை ஏற்படுத்தியுள்ளதாகவும் படையினர் இதுவரை காலமும் பயன்படுத்தாத பெருமளவு நவீனரக ஆயுதங்கள் கூட இம்முறை குடாநாடடிற்கு வந்துள்ளதாக, கூறும் படையினர் பல்வேறு ஆயுதங்களை கையாள்வதற்கும் படையணிகள் பலவற்றுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

இதைவிட குடாநாட்டிற்கு மேலதிகமாக படையினரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அண்மையில், விஷேட பயிற்சி பெற்ற 4000 படையினர் திருகோணமலை ஊடாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டு, அங்கு நிலைகொண்டிருக்கும் படையினருடன் இணைந்து புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை கூறியுள்ளார். புலிகளின் முன்னேற்ற முயற்சிகள் இடம் பெறலாமென படையினர் கருதும் பகுதிகளில் மேலதிக படையினர் குவிக்கப்பட்டு தாக்குதல்களை எதிர்கொள்வதற்கு தயாராகியுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தென்மராட்சியின் பெரும் பகுதியை கைப்பற்றியுள்ள புலிகள் அங்கு கிளாலி முதல் கொடிகாமம் வரையில் தரித்து நிற்கும் படையினரை முதலில் இலக்கு வைக்கலாமெனக் கருதப்படுகிறது. யாழ்ப்பாணத்திற்கான பிரதான தரை வழிப் பாதையாகவிருக்கும் கண்டி வீதியில் கொடிகாமம் முதல் மீசாலை வரையான பிரதேசம் படையினர் வசமுள்ளது. இப் பகுதிகளையும் கைப்பற்றி தங்களின் போக்குவரத்துக்களையும் விநியோகங்களையும் மட்டுமன்றி பின்புல தளத்தையும் வலுப்படுத்த புலிகள் முனைவதாக படையினர் கூறுகின்றனர் என்றும் கடந்த மூன்று வாரங்களுக்கும் மேலாக புலிகள் குடாநாட்டில் எப்பகுதியிலும் பாரிய தாக்குதல் எதனையும் நடத்தவில்லை. புலிகளுக்கு அடுத்தடுத்து ஏற்பட்ட பாரிய இழப்புகளால் அவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குவதால் அவர்களால் இனிமேல் பாரிய தாக்குதல்களை குடாநாட்டில் மேற்கொள்ள முடியாதென படையினர் கூறுகின்றனர்.

அது உண்மையாயின் பலமிழந்து போயிருக்கும் புலிகள் மீது, பல்வேறு நவீனரக ஆயுதங்களை குடாநாட்டின் பல பகுதிகளிலும் குவித்து வைத்திருக்கும் படையினரால் தாக்குதலை தொடுக்க முடியவில்லை என்ற கேள்வியும் எழுகிறது. சோர்ந்து போயிருக்கும் படையினருக்கு உற்சாகமூட்டுவதற்கான நடவடிக்கையின் ஒரு கட்டமே இந்தப் பிரசார முயற்சிகள் என்றும் கூறப்படுகிறது. படையினரின் கணிப்புகள் இவ்வாறிருக்கையில் பாரிய தாக்குதல்களை நடத்த புலிகள் தயாராகி வருவதாக கூறப்படுகிறது. பூநகரி மற்றும் சங்குப்பிட்டி பகுதிகளிலும் தென்மராட்சியின் கரையோரப் பகுதிகளிலும் தங்களின் கனரக ஆயுத நிலைகளை அமைந்துள்ள புலிகள் அங்கிருந்தே குடாநாடடில் பல்வேறு பகுதிகளிலும் படையினரது நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தி வருவதாக கூறப்படுகிறது. பலாலி விமானத்தளம் மீது காங்கேசன்துறை முகாம் மீதும் அவர்கள் தொடர்ச்சியாக ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

குடா நாடு மீதான முற்றுகைப் போர் கடந்த ஒன்றரை மாதங்களாக நடைபெற்று வருகிறது. புலிகளின் முயற்சிகளை முறியடித்து குடாநாட்டை தொடர்ந்தும் தங்கள் வசம் வைத்திருக்க படையினர் நுட்பமான திட்டங்களை வகுத்துள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார். குடா நாட்டில் சிக்கிப் போயுள்ள படையினரை அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்ற சகல உதவிகளும் வழங்கப்படுமென இந்தியா தொடர்ந்தும் அறிவித்து வருகிறது.
வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட பெருமளவு ஆயுதங்கள் புலிகளின் நடவடிக்கைகளுக்கு பதில் சொல்லுமென இராணுவத்தினர் கூறிவருகின்றனர். இந்த ஆயுதங்களும் புதிதாக வந்து சேர்ந்த குண்டு வீச்சு விமானங்களும் புலிகளுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமெனவும் அவர்கள் கூறுகின்றனர்.

எனினும் புலிகளின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஊகிக்க முடியாதுள்ளது. அவர்கள், எங்கு, எப்போது, எவ்வாறு தாக்குதல்களைத் தொடுப்பார்கள் என்பது எவருக்கும் தெரியாது. இடம், காலம், நேரங்களை நிர்ணயிப்பது அவர்களே என்பதால் அவர்களது தாக்குதல்கள் ஆரம்பமான பின்பே எதனையும் மதிப்பிட முடியுமென சிரேஷ்ட படை அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனையிறவு முகாமைக் கைப்பற்றிய பின்னர் அவர்கள் பெருமளவு இளைஞர், யுவதிகளை தங்களுடன் இணைத்து அவர்களுக்கு தீவிர பயிற்சிகளை வழங்கி வருவதால் படையினருக்கு எதிராக அவர்களது பாரிய தாக்குதல்கள் விரைவில் ஆரம்பமாகலாமென எதிர்பார்க்கிறது.

சாணக்கியன்


STUDY IN LONDON

at ACADEMY OF PROFESSIONAL STUDIES (APS)

தவணை ஆரம்பம்

ஜனவரி, ஏப்ரல், ஜீலை, ஒக்டோபர்

கற்கை நெறிகள்

HND in Computer Network Support,Bachelor of Computer Science (BSc), Bachelor of Business Administration (BBA), Master of Business Administration (MBA), Hotel Management, Travel & Tourism, ABE Diploma & Advanced Diploma in Business Studies,

எமது லண்டன் அலுவலகத் தொடர்புகளுக்கு

*Tel ; 0044 207388826 Fax ; 0044 2073388127*

*E-mail ; admin @ apslondon.co.uk*

*Web ; www.apslondon.co.uk*

BAC Recognised us efficient by The British Accreditation Council For Independent further and Higher Education

APS -லண்டன் அதிபரும் பணிப்பாளரும்
உங்களையும் உங்கள் பெற்றோரையும் சந்திப்பார்கள்

காலம் : 27.06.2000
நேரம் : 10.00–16.00
இடம் : Kandy Business School
163/1 Galle Road, Dehivela.

காலம் : 28.05.2000
நேரம் : 10.00–16.00
இடம் : Hotel Suisse Kandy

KANDY BUSINESS SCHOOL

COLOMBO
074 - 201020,201022,074-201021
072 - 249994,077 - 385558
Fax ; 074 - 201022
E-mail ; kbs@web. lanka.net

KANDY
074 - 471930
074 - 475241
077 - 801475
08 - 232721

# ஆதவனின் ஜனனம்

கடந்த இரு தசாப்தங்களிற்கு மேலாக இந்த நாட்டில் தொடரும் கொடூர யுத்தம் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ்பேசும் மக்களை மட்டுமன்றி அதற்கு வெளியேயுள்ள சிங்கள மக்களையும் நேரடியாக பாதித்துள்ளது. இந்தப் போர் முன்னெடுப்புகளின் உண்மை நிலைவரங்களை, கசப்பான பக்கங்களை மக்கள் முன் வெளிக்கொணர்ந்து தமது சுயநலன்களுக்காக யுத்தத்தை இறுகப்பற்றியுள்ள யுத்த வியாபாரிகளை வெளிக்கொணர்வதிலும் சிதைந்து போயுள்ள இனங்களிடையேயான ஐக்கியத்தை கட்டியெழுப்புவதிலும் வெகுஜன ஊடகங்கள் காத்திர மான பங்களிப்பை வெளிக்கொணர்ந்துள்ளனவா என்றால் அது கேள்விக்குறியே....

இவைகளுக்கு அப்பால் சிங்கள மக்கள் மத்தியில் ஏனைய வெகுஜன ஊடகங்கள் திரித்துக்கூறும் உண்மைக்கு புறம்பான செய்திகளையும் தமிழ் மக்களின் மறுபக்கத்தையும் வெளிக்கொணர்ந்தில் "ராவய" கடந்த பலவருடங்களுக்கு மேலாக பெரும் பணியாற்றியுள்ளது. அந்தவகையில் தமிழ் மக்களின் துன்ப துயரங்களை அவல வாழ்வினை, சமத்துவமான வாழ்விற்கான உரத்த குரலை வெளிக் கொணர்வதே ஆதவனின் ஜனனம்.

இந்த நாட்டிலுள்ள தமிழ் சிங்கள மக்கள் ஒருவரை யொருவர் குரூரவெறி கொண்டு வக்கிரத்தனங்களுடன் நோக்கும போக்கு களையப்பட வேண்டுமெனில் அதற்கான காத்திரமான பங்களிப்பை வெகுஜன் ஊடகங்கள் மூலம் வெளிக்கொணர முடியும் என்பதில் ஆதவன் உறுதியாக இருக்கிறது. இலங்கையின் நீண்டகால இனமுரண்பாடுகளில் பேரினவாத அரசியல் போக்குகள் எந்தளவிற்கு ஆதிக்கம் செலுத்தியதோ அதேயளவிற்கு சில ஊடகங்கள் உண்மைக்கு புறம்பான செய்திகள் மூலம் இன ஐக்கியத்திற்கு சைனைட் பூசிய வரலாறும் இந்த நாட்டில் தான் உண்டு.

இன்று இந்த நாடு மிக மோசமான நெருக்கடியான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. போரின் அனர்த்தங்களும் தாமதிக்க தயங்கும் அரசியல் தீர்வுகளுக்கான பின்னடைவுகளும் இந்த நாட்டின் எதிர் காலத்தை மேலும் குழி தோண்டிப் புதைக்கவே செய்யும்.

நாக்கின் நுனியில் இனவாதத்தை தடவியபடி போர் முழக்கமிடும் அரசியல்வாதிகளையும், அரசியல் தேவையின் அவசியம் உணரப்படாது வெறும் இராணுவ நோக்குடனான செயற்பாடுகளும இந்த நாடடின் எதிர்காலத்தை உறுதி செய்யப் போவதில்லை. மாறாக மனித அவலங்களுக்கும் துயர வாழ்விற்குமே இன்னும் இட்டுச் செல்லும் என்பதை சகல தரப்பினருக்கும் உரத்துக் கூற வேண்டும்.

தமிழ் சிங்கள மக்களிடையே படிந்து போயுள்ள கடந்தகால கசப்புணர்வுகளை, குரோத வெளிப்பாட்டுத் தன்மையை அகழந்தெறிந்து அழிந்து கொண்டிருக்கும் இந்த நாட்டின் எதிர்கால சமூகத்தை புதிய வீச்சுடன் கட்டியெழுப்ப ஓயாமல் உரத்துக்குதல் கொடுக்க எழுந்து வரும் ஆதவனுடன் கைகோர்த்தெழ அனைத்து சக்திகளையும் உளம் நெகிழ்ந்து அழைக்கிறோம்.

ஆசிரியர்.

ஆதவன்

இல — 83 . பிலியந்தலை வீதி மஹரகம
தொலைபேசி எண் — 851672.851814
வினையோகப் பிரிவு — 842064
தொலைமடல் — 851814

# மூன்றாம் தரப்பு தலையீடு அவசியமா

**விக்டர் ஐவன்**



இலங்கையில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயலும் வெளிச்சக்திகளின் கவனம் பிரபாகரனின் தீவிர செயற்பாடுகளின் மட்டும் நின்று விடாது. சந்திரிகா அரசின் ஜனநாயக விரோச செயற்பாடுகளின் பக்கமும் கவனம் செலுத்தியிருப்பது நல்லதொரு அணுகுமுறையாகும், அமெரிக்க உதவி இராஜாங்க செயாலாளர் தமிழ் ஈழத்தை ஏற்றுக் கொள்ள விரும்பாததைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதோடு மட்டும் நின்று விடாது சுதந்திர மான நியாயமான ஒரு பொதுத் தேர்தலை நடாத்துவதைக் காணவும் கருத்துச் சுதந்திரம் ஒரு பொதுத் தேர்தலை நடாத்துவதைக் காணவும் கருத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை காண விரும்புவதாகவும் தெரிவித்துள்ளர். அதே நேரம் ஐரோப்பிய சங்கமும் அயல் நாடான இந்தியாவும் தெரிவித்திருக்கும கருத்துக்களும் அதற்கு சமமாகவே உள்ளன.

வடக்கில் பயங்கரவாதம் தொடர்பான பிரச்சினையை பரந்த நோக்கில் அணுகும் போது அது இலங்கையின் ஜனநாயகம் பற்றிய பிரச்சினையின் ஒரு பகுதியாகும். தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஜனநாயக முறையில் தீர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் பயங்கரவாதம் எனும் பிரச்சினை ஏற்படாமல் இருந்திருக்கும். ஜனநாயக சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் போது வட கிழக்கு தமிழர்களுக்கு மாத்திரமன்று தெற்கில் வாழ் சிங்களவருக்கும் அழிவான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

1972 இலும் அதற்கு பின்னர் 1987-90 காலக்கட்டத்திலும் இத்தன் பெறுபேற்றின் நிமிர்த்தமே தெற்கிலும் அழிவினை ஏற்படுத்திய இளைஞர் கிளர்ச்சி நடைபெற்றத. இப்பொழுது தமிழ் மக்கள் வாழும் வட கிழக்கில் போல் அல்லாது சிங்களவர்கள் வாழும் தென்பகுதி அமைதியாகக் காணப்பட்டாலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ள ஜனநாயக சுதந்திரத்தை காலம் தாழ்த்தாது பரந்த அளவில் செயல்பட விடாவிட்டால் ஏதோ ஒரு வகையில் தெற்கிலும் அழிவினை ஏற்படுத்தம் அமைப்புகளும் தோன்ற சந்தர்ப்பம் உண்டு. தெற்கில் வாழும் சிங்களவர்கள் பிரபாசரனை அதிதீவிர பயங்கரவாத இயக்கமொன்றின் தலைவராகவே நோக்குகின்றனர். தெற்கில் எமது சிங்கள ஆட்சியாளர்களை பயங்கரவாதத்தலைவர்களாக கருத்தில் கொள்ளா விட்டாலும் இவர்களை ஜனநாயக தலைவர்களாகவும ஏற்றுக் கொள்ள முடியாது. எமது தலைவர்கள் பிரபாகரனைப் போல் அல்ல. மக்கள் வரத்தினால் ஆட்சிக்கு வந்தவர்கள் என்பதனை நாம் உரத்துக கூறிக் கொள்ள முடியும். இத்தலைவர்கள், தலைவிகள் அனைவரும் மக்களின் வரத்தினால் தான் ஆட்சிக்கு வருகின்றனர். அதன் பின்பு நீண்ட காலம் ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள பலாத்காரத்தை ஆயுதமாக பாவிக்கின்றனர். எதிர்கட்சியை பலயீனப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர். கருத்துச் சுதந்திரத்தை கட்டுபடுத்த அனைத்து ஆட்சியாளர்களும் அவசரகாலச்சட்டத்தை ஆயுதமாகக் கொண்டனர். பத்திரிகை செயலகங்களை மூடி சீல் வைத்தனர். நீதிமன்ற சுதந்திரத்தில் தலையிட்டனர். தமக்கு சாதகமான முறையில் தேர்தல் கொள்ளைகளில் ஈடுபட்டனர். இந்த விதத்தில் நோக்குவோமாயின் வடக்கில் பிரபாகரனின் அரசியல் பயங்கரவாதம் எவ்வாறு இருக்கின்றதோ அதே விதத்தில் சிங்கள அரசியல் தலைவர்களின் ஜனநாயக பயங்ரவாதமும் இருக்கின்றது எனக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கையில் நிலவும் நெருக்கடிக்கு ஒரே பிரச்சினைக்குள் அடங்கியிருக்கும இவ்விரண்டு பிரச்சினைகளுக்கும் காலம் தாழ்த்தாத பூரணமான தீர்வொன்றை முன்வைப்பதன் மூலமே வெற்றிகரமான தீர்வைக் காணமுடியும். பிரபாகரனுக்கு ஜனநாயக நீரோட்டத்திற்கு அப்பால் இருப்பதற்கான சந்தர்ப்பங்களை நீக்கிவிட வேண்டும், அதேபோல் ஜனநாயக வரையரைக்குள் இருந்து கொண்டு ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபடும் எமது தலைவர்களுக்கு இருக்கும் பலத்தை இல்லாதொழிக்க வேண்டும்.

பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரபாகரன் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள விரும்பினால் குறிப்பிட்ட காலத்திற்கு தேர்தல் இன்றி இடைக்கால நிர்வாகமொன்றை அமைப்பதற்கு தாம் தயார் என ஜனாதிபதி அவர்கள் அண்மையில் தெரிவித்துள்ளார். இது வரவேற்கத்தக்கதாகும்.

வெளிநாட்டு மத்தியஸ்த்துவம் இன்றி இவ் இருசாராரும் வெற்றிகரமாக இப் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள மாட்டார்கள். இரு சாராரும் வைராக்கியத்துடனும், சந்தேகக் கண்கொண்டும் இருவரை ஒருவர் நோக்குகின்றனர். அரசினதும், விடுதலைப் புலிகளினதும் நம்பிக்கைக்கு பாத்திரமான இவர்களி எவரே னும் பிடிவாதம் பிடிக்கும் போது அதனை கட்டுப்படுத்தக் கூடிய சக்திமிகு மூன்றாம் தரப்பினர் இவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி சுமூகமான இணக்கப் பாட்டிற்கு வருவதற்கான கால அவகாசத்துடன் கூடிய ஒரு நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துக் கொண்டு மூன்றாம் தரப்பினர் பலம் வாய்ந்த முறையில் அந்த நிகழ்ச்சி நிரலில் வரும் விடயங்களை ஒன்றின் பின் ஒன்றாக பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்வார்களாயின் இருசாராரின் கௌரவத்திற்கும் சாதகமான முறையிலும் பிரச்சினை தீர்த்துக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் எழலாம். வெகு விரைவாக சீர்குலைந்துக் கொண்டு போகும் ஜனநாயகத்தை மறுசீரமைப்பது தொடர்பாக இந்த நிகழ்ச்சி நிரலில் முதலிடம் கொடுக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களுக்கு சுயாட்சி முறையைப் பெற்றுக் கொடுப்பதோடு மட்டுமல்லாது அமைப்பினுல் மூடி வைக்கும் செயற்பாட்டுக்கு அனைவரையும் சுல்பமாக தொடர்பு படுத்திக் கொள்ளும் முறையினையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறானதொரு முறையின் மூலம் தமிழ் பிரதேசங்களைப் பரிபாளிக்கும அவகாசம் கிடைப்பதோடு, முழு நாட்டுக்குமான பொதுக் கொள்கைகள் வகுக்கும அமைப்பாகக் கொள்ள முடிந்த பாராளுமன்றத்தையும் தொடர்புபடுத்தக் கொள்ளலாம்.

தென் ஆபிரிக்காவில், பிரச்சினைக்குச் சம்பந்தமான எல்லாக் குழுவினரையும் ஒரு வட்டமேசைக் கலந்துறை யாடலொன்றின் மூலம் கட்டியெழுப்பப்படும் அர சியலமைப்பினுல் அடங்க வேண்டிய அடிப்படைக் கார ணங்கள் எவையெனப் புரிந்து கொண்டு பின்னால் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெவ்வேற ாகப் போட்டி போட்டு தெரிவு செய்யப்பட்ட அனைவரும ஒன்ற ாக இணைந்து ஐந்து வருடங்கள் அதிகாரம் நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ளும் வன்னம் ஒரு தேசிய அரசொன்றை உருவாக்கிக் கொண்டது போன்று முன்வரும் பாராளு மன்றப் பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டதொரு செயற்பாட்டை செயற்படுத்தவும் ஒரு சந்தர்ப்பமும் உண்டு.

மிகவும் முக்கியமான பதவிகளுக்கு தகுதியானர்களையே நியமிக்கும் பொர்துவானதொ நிலைப்பாடு இருத்தல் வேண்டும். அதற்காக பொதுமக்கள் தலைவர்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்களை தன்னிச்சைப்படி உபயோகிக்க சந்தர்பங்கள் இல்லாதிருத்தல் வேண்டும். கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக உள்ள சந்தர்ப்பங்கள் அதிக அளவில் கட்டுப்படுத்தல் வேண்டும். பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கான ஒழுங்கு நெறிகளை வகுத்து தேவையான அளவு சேவை செய்யாதஅல்லது பாரிய அளவில் தவறு செய்யும் பொதுமக்கள் பிரதிநிதிகளை வெளியேற்றும் அல்லது தண்டனை வழங்கும் முறை யொன்றினை ஏற்படுத்தல் வேண்டும்.

சட்டத் துறையை மக்களின் கௌரவத்திற்குப் பாத்திரமான வகையில் மறுசீரமைப்புச் செய்து, அரசியல் தலையீடற்ற சுயாதீன் அமைப்பொன்றாக அமைத்தல் வேண்டும். அரசாங்க சேவையை, பொலிஸ் சேவையை சுயாதீனமாக்கல் வேண்டும். கல்வி, சுகாதாரம், போக்குவர த்து, தனியார்மயப்படுத்தல், இனங்களிடையே தொடர்பு, போன்றவை சம்பந்தமாக் தேசியக் கொள்கையொன்றை வகுத்துக் கொள்ளுதல் வேண்டும். தேசிய பாதுகாப்பு பற்றிய நிலைகளில் தவிர்ந்து அரச மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளின் போதும் கொடுக்கல் வாங்கல்களின் போதும் பொதுமக்களுக்கு இலகுவாகத் தெரிந்து கொள்ளும் விதத்தில் தகவல்கள் அறியும் உரிமையை சட்ட நீதியாக்குதல் வேண்டும். ஆட்சியாளர்களுக்கு தாம் விரும்பிய பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பங்கள் கிடைக்காத முறையில், அரசியல் தலையீடுள்ள முறையில் சுதந்திர மாகவும் நியாயமாகவும் பொதுத் தேர்தலொன்றை நடத்த முடியுமான விதத்தில் அனைத்து அதிகாரங்களையும் கொண்ட சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழுவை அமைத்தல் வேண்டும்.

தேவையாயின் அடுத்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலை இலக்காக வைத்து அவ்வாறானதொரு நடவடிக்கையை செயல்படுத்த முடியும். சுயாதீனமானதொரு ஆட்சிக்கான அடிப்படை தொடர்பாக விடுதலைப் புலிகளுடனும் மற்றைய தமிழ் அமைப்புகளுடனும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து பொருத்தமானதொரு அரசியலமைப்பொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக அடிப்படை இனக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்குடன் சர்வகட்சிக் கலந்துரையாடலொன்றினை ஆரம்பிக்கலாம்.

ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு அரசியல் அமைப்பிற்கான அடிப்படை விடயங்களை புரிந்து கொண்டு அவற்றிற்கான பொது உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதின் பின்பு சுதந்திரமாக நீதியான ஒரு பொதுத் தேர்தலுக்கான அமைப்பு முறை யினை உருவாக்கிக் கொண்டு அதன்படி பொதுத் தேர்தல் ஒன்றினை நடாத்தலாம். பொதுத் தேர்தலின் பின் பாராளுமன்ற த்தை அரசியலமைப்புச் சபையான மாற்றிக் கொண்டு, பொதுத் தேர்தலுக்கு முன் சர்வகட்சி கலந்துரையாடலின் போது இனங்கிய மூல தர்மங்களின் படி அரசியலமைப்பொன்றினை ஏற்படுத்திக் கொள்ளலாம். கூடிய அதிகாரத்தைப் பெறும் கட்சிக்கு இரண்டாவது தலைமைத்துவமும் கிடைக்கும் வகையில் ஏனைய அதிகாரங்களை அந்தந்தக் கட்சிகள் பெற்றுக் கொண்ட தொகுதி வாரியாகப் பகிர்ந்து கொள்ளும் வகையில் அதிகார ங்களைப் பகிர்ந்து கொண்டு ஐந்தாண்டுகளுக்கான தேசிய அரசாங்கமொன்றை உருவாக்கிக் கொள்ளலாம். அரசியல் முறை யில் சுயாதின சமுக அமைப்பிலும் ஏற்பட்டுள்ள சரிவுநிலையைத் தவிர்த்து கொண்டு புதியதொரு அத்திவாரத்தை இட முடிவது அவ்வாறானதொரு பரந்த நிகழ்ச்சி நிரலுக்காக புரம்பான சக்திகளின் வழிகாட்டல் கிடைத்தால் மட்டுமேயாகும்.

# 56 ம் ஆண்டிற்கு பின்பே இனப்பிரச்சினை கூர்மையடைந்தது.

ஐ. தே. க. பேச்சாளர்
கருணாசேன கொடித்துவக்கு



சுதந்திரத்தின் பின் இந்நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்களே இனப்பிரச்சினை உக்கிரமடைவதற்கு பொறுப்பானவர்கள். எனவே ஐ. தே. க இந்த விடயத்தில் எவ்வளவிற்கு பொறுப்பினை ஏற்க வேண்டுமென சுய விமர்சனம் செய்தால் இது தொடர்பாக தாங்கள் கூறுவது என்ன?

இவ்வளவு காலமும் ஆட்சி செய்த ஆட்சியாளர்களே இதற்கான பொறுப்பினை ஏற்க வேண்டும். ஆனால் இதன் அளவு கூடி குறைந்துள்ளது. பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே. ஆர். ஜயவர்தன கண்டிக்கு பாதயாத்திரை செய்தால் ஐ. தே.கவும் இனப்பிரச்சினைக்கான பொறுப்பினை ஏற்க வேண்டும் எனும் கருத்தும் நிலவுகின்றது. 1948ம் ஆண்டில் இருந்து 1956ம் ஆண்டு வரை தமிழ் அரசியல் தலைமைத்துவம் ஐ. தே. கவுடன் இணைந்தே செயல்பட்டது. அது மாத்திரமல்ல D.S. சேனாநாயக்க, டட்லி, கொத்தலாவல அரசாங்கத்தில் அமைச்சரவையில் அமைச்சராகவும் இருந்துள்ளனர். எனவே 1956ம் ஆண்டிற்கு பின்பே இனப் பிரச்சினைக்கு உரம் ஊட்டப்பட்டது. 1956 இல் பண்டார நாயக்கா அவர்கள் 24 மணி நேரத்திற்குள் சிங்கள மொழியை அரசகரும மொழியாக்குவேன் என்கின்ற சிங்களம் மட்டும் எனும் கோஷத்தால் வடக்கில் கடும போக்காளர்கள் தலையெடுக்க ஆரம்பித்தனர். ஆனால் டட்லி செல்வா ஒப்பந்தத்தில் தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்க முன்வருகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், கம்யூனிஸ்ட் லங்கா சமசமாகக் கட்சிகளும இணைந்து இதனை எதிர்த்து டட்லியின் வயிற்றில் மசாலவடை எனக் கோஷமிட்டு ஊர்வலம் சென்றனர். டட்லி தமக்கு கிடைத்த அதிகாரத்தை கொண்டு இதனை செயல்படுத்த முனையவில்லை. இந்த விடயத்தில் எமது கட்சி தவறிழைத்துள்ளது. அன்று பாராளுமன்றத்தில் எமக்கு கூடிய பலம் இருந்தும் இவ்வொப்பந்தத்தை நிறைவேற்ற வாய்பிருந்தும் அதனை எமது கட்சி செய்யவில்லை.

71ம் ஆண்டு ஸ்ரீமாவின் கூட்டர சாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட அரசியல் யாப்பு மறுசீரமைப்பில் சோல்பரி சாசனத்திலிருந்த 29ம் சரத்து நீக்கப்பட்டதும் அரச சேவை ஆணைக்குழுவின் சுதந்திரத்தை இல்லாதாக்கியதும் தரப்படுத்தல் முறையை நடைமுறைப்படுத்தியதும் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த காரணமாக அமைந்தது. 1977இல் ஆட்சிக்கு வந்த ஜே. ஆர். ஜயவர்தன வடக்க- கிழக்கு அரசியல் போக்குகள் பற்றி விளங்கிக் கொள்ளவில்லை என்றே நான் கருதுகின்றேன். அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், திருச்செல்வம் ஆகிய தமிழ் தலைவர்கள் முன்வைத்த கருத்துக்களின் ஊடாகவே தமிழர் பிரச்சினையை தீர்கலாம் என அவர் கருதினார். ஆனால் ஜே. ஆர். இந்தப்பிரச்சினையை தீர்த்திருக்கலாம். அதற்கு வேண்டிய ஆளுமையும் பலமும் அவரிடமிருந்தது. அப்படியிருந்தும் தம் பொறுப்பை அவர் தட்டிக் கழித்தது மாபெறும் தவறாகும். யாழ் நூலகத்தை எறித்தது 1981. அபிவிருத்தி சபைத் தேர்தலின் போது வாக்குப் பெட்டிகளை மாற்றியது தொடர்பாகவும் எமது கட்சி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவை அனைத்தும் உண்மை. இது தொடர்பாக அன்றைய அரசு பொறுப்பேற்க வேண்டும். இருந்தும் யாழ் நூலக எரிப்பு ஏனைய சம்பவங்கள தொடர்பாக அர சியல்வாதிகள் முன் நின்று நடத்தவில்லை. 1997இல் நான் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது திலீபன், யோகி ஆகியோர் என்னை சந்தித்தனர். அப்போது இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தாலும் மாகாணசபை இயங்கவில்லை. ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா இலங்கை இந்திய ஒப்பந்தத்தையோ மாகாண சபைமுறையோ ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே ஸ்ரீமாவோ ஆட்சிக்கு வந்தால் மாகாணசபையை கலைத்து விடுவார் என யோகி என்னிடம் கூறினார். எனவே அரசாங்கம் மட்டுமல்ல எதிர்

நோர்வே மத்தியஸ்தம் வகிப்பதை ஐ. தே. க. எதிர்க்கவில்லை. ஆனால் மகிந்தராஜபக்ச உட்பட அரசில் உள்ள பலபேர் இந்தியாவின் மத்தியஸ்துவ தலையீட்டையே விரும்புகின்றனர்.

கட்சியும் இது தொடர்பாக சரியான நிலைப்பாட்டிற்கு வரவேண்டும் என்றார். அத்துலத் முதலியின் தவறான அணுகுமுறை காரணமாகவே கடலில் கைது செய்யப்பட்டவர்கள் சைனைட் உண்ண வேண்டி வந்தது. இதனால் பிரச்சினை மேலும் வலுத்தது. 1987இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின் ஐ. தே. க அரசாங்கம் அதிகார பரவலாக்களை மேற்கொண்டது. இதனால் ஆயுதம் ஏந்தி போராடிய விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய குழுக்கள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொண்டன. மாகாணசபைக்கு சரியான முறையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இவ்வா றான காரணங்களை நோக்கும் போது இதுவரை ஆடசி செய்த அரசாங்கங்கள் இனப்பிரச்சினையில் தவறு செய்துள்ளது. வடக்கு அரசியல் கட்சிகளுக்கும் இதில் பங்குண்டு.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சிங்கள பெரும்பான்மை மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளாகும். இவ்விரு கட்சிகளும் மிதவாத தமிழ் கட்சிகளிலேயே நம்பிக்கை வைத்து செயல்பட்டன.

ஆனால் மிதவாத கட்சிகளை விட ஏனைய அரசியல் கருத்துக்கள் முன் வந்த போதும அவற்றை விளங்கிக் கொள்ளவும், தமிழ் மக்களின் தனித்துவ அடையாளத்தை ஏற்றுக் கொள்ளவும் ஐ. தே. க வினாலும் முடியாமல் போனது ஏன்?

மிதவாத அரசியல் கருத்துக்கெதிராக மாற்று அரசியல் கருத்துக்கள் 1970இன் பின்பே தோன்றியது. மிதவாத தமிழ் அரசியல் கட்சிகள் மத்திய அரசாங்கத்திற்குள் பிரதி நிதித்துவம் செய்தாலும் புதிய அரசியல் குழுக்களை வென்றெடுக்கக் கூடிய திறமை எமக்கு இருக்கவில்லை. தெற்கிலும் இருந்த மிதவாதத் தலைமை தெற்கில் உள்ள பிரச்சினைகளையும் விளங்கிக் கொள்ளவில்லை. இவர்கள் இருபாலாரும் ஆங்கிலத்திலேயே தங்கள் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். தெற்கில் சிங்கள மொழி கற்ற வடக்கில் தமிழ் மொழி கற்ற இளைஞர்களின் அரசியல் போக்குகள் இவர்களுக்கு புரியாமல் போய்விட்டது.

இந்நாட்டில் அதிகாரப் பகிர்வினை ஐ. தே. க. தான் மேற் கொண்டதென கூறிக் கொள்ளும் அதே வேளையில் அதனை ஐ.தே.க விரும்பி செய்யவில்லை. சூழ்நிலைக்கேற்ப எழுந்த நெருக்கடியின் நிமிர்த்தமே இதனைச் செய்துள்ளது. இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு ஜே. ஆர். ஜயவர்தன உடன்பட்டதும் இந்தியா வற்புறுத்தினால் இது பற்றி தாங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

நெருக்கடிகள் எழும்போது தீர்வுக்காக எல்லோருடைய இணக்கப்பாட்டையும் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போது சில விட்டுக் கொடுப்புகளையும் அர்ப்பணங்களையும் செய்ய வேண்டிவரும், சிலவற்றை விரும்பியோ விரும்பாமலோ செயல்படுத்த வேண்டிவரும். இதே வேளை சில அழிவுகளை தடுக்க ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டிவரும். உங்களின் கேள்விக்கு ஆம் என்று கூற வும் முடியும், இல்லையென்று கூறவும் முடியும்.

இன்று எழுந்துள்ள வட கிழக்கு பிரச்சினைக்கு ஐ. தே. க வின் தீர்வு என்ன?

ஆனையிறவு முகாம் வீழ்ச்சியின் பின்பு எல். டி. டி. ஈ. யின் கை ஓங்கியுள்ளது. அதனால் யார் அதிகாரத்திலிருந்தாலும் எந்தவொரு அரசாங்கமும் வெள்ளைக் கொடி போட்டு அடிபணிய மாட்டாது. இதற்கு அரசாங்கம் முகங் கொடுத்தே ஆக வேண்டும். ஆனால் இறுதித் தீர்வு இராணுவ நடவடிக்கையல்ல. வட கிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த வேண்டும். இதற்கு மக்களின் விருப்பத்தோடு சிவில் நிர்வாகம் செயல்பட வழிவகுக்க வேண்டும். இறுதியில் அரசியல் தீர்வொன்று காணவேண்டும். இறுதியாக தெற்கில் உள்ளவர்கள் எதிர்பார்க்கும் அனைத்தையும் பாதுகாத்துக் கொள்ளவும் முடியாது. அது போல் வடக்கில் உள்ளவர்கள் எதிர்பார்க்கும் அனைத்தையும் கொடுக்க முடியாமலும் போய்விடலாம். இருசாராரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தனி இராச்சியத்தை தவிர்ந்த தீர்வொன்றிற்கே போக வேண்டியுள்ளது.

பொது ஜன முன்னணி தீர்மானித்திருக்கும் தீர்வு பற்றி ஐ. தே. க வின் கருத்து என்ன?

ஐ. தே. க. இந்த நிலைப்பாட்டில் ஒரு முடிவிற்கு வந்துள்ளது. ஆனால் நாம் இந்த நிலைப்பாட்டில் இருந்து மட்டும சிந்திக்கவில்லை. இது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் தொடரப்பட வேண்டும். சில சீர்திருத்தங்கள் செய்ய எமக்கும நேரிடும். இலங்கையின் இறைமை பாதிக்காத தீர்வையே நாம் விரும்புகின்றோம். அரசாங்கம் உத்தேசித்துள்ள வட கிழக்கு இணைப்பு தொடர்பாக எமக்கு பிரச்சினைகள உள்ளன. இணைப்பு தொடர்பாக எமக்கு பிரச்சினைகள் உள்ளன. இணைப்பு தொடர்பாக கிழக்கு வாழ் மக்களின் அனுமதியைப் பெறவேண்டும். மக்கள் இணைப்பை விரும்பினால் எமக்கு பிரச்சினை யில்லை. 1972ம் ஆண்டு அரசியல் யாப்பு சீர்த்திருத்தம் வரும்வரை ஒற்றையாட்சி என்ற பதத்திற்கே இடமிருக்கவில்லை. நாம் ஒற்றையாட்சி என்ற பதத்திற்குள் தொங்கிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமும் இல்லை. நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுருத்தல் இலலாதவாறும் பிரிவினைக்கு வித்திடாதவாறும் அரசியல் தீர்வு அமைய வேண்டும். இதற்கு எல். டி. டி. ஈ. இயக்கம் பேச்சுவார்த்தை மேசைக்கு வருமா என்பது கேள்விக்குறியே?

இன்றெழுந்துள்ள நெருக்கடி நிலைமை தனிய ஐ. தே. க. கூறும் ஆலோசனை என்ன?

உடனடியாக வெளிநாட்டு மத்தியஸ்ததுடன் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசு, எல். டி. டி. ஈ. பேச்சுவார்த்தையின் போது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமாக அரசும், எல். டி. டி. ஈ. இயக்கமும் நோர்வே அர சை ஏற்றுக் கொண்டுள்ளது. ஐ.தே.க. இந்தியாவை விரும்புகின்றது. எல். டி. டி. ஈ. இயக்கம் இதனை விரும்பவில்லை போல் தெரிகிறது. இவவாறான பின்னணியில் தங்களின் கருத்து என்ன?

நோர்வே மத்தியஸ்தம் வகிப்பதை ஐ. தே. க. எதிர்க்கவில்லை. ஆனால் மகிந்தராஜபக்ச உட்பட அரசில் உள்ள பலபேர் இந்தியாவின் மத்தியஸ்துவ தலையீட்டையே விரும்புகின்றனர். தெற்காசிய பிராந்தியத்தின் சக்திமிக்க நாடான இந்தியாவை ஒதுக்கி இனப்பி ரச்சினைக்கு தீர்வுகாண முடியாது. இதுவே யதார்த்தமாகும்.


நேர்காணல்
சுனில் ஜயசேகர
ராஜபுத்திரன்

## ஒரு தமிழ் ஆசிரியரின் பயோடேற்றா



| | |
|---|---|
| பெயர் | :சின்னத்தம்பி தம்பு ரத்தினம் |
| கௌரவப் பெயர் | :தம்பு மாஸ்ரர் |
| பேரினவாதிகளின் பாசையில் | :கொட்டியா அல்லது கள்ளத்தோணி |
| வயது | :பெண்களுடன் கிசு கிசுக்கப்படும் வயதல்ல |
| பழைய தொழில் | :தமிழ் ஆசிரியர் |
| புதுத் தொழில் | :பென்சனுக்காக அலைந்து திரிவது |
| பொழுது போக்கு | :அடிக்கடி பெருமூச்சு விடுவது |
| சாதனை | :இலங்கையில் இன்னும் உயிர் வாழ்வது |
| வேதனை | :விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட மகன் இன்னும் வீடு திரும்பாதது |
| ஏங்குவது | :சமாதானத்துக்காக |
| பயப்படுவது | :இனவாதிகளைக் கண்டு |
| மறக்க முடியாதது | :செல் அடியில் மனைவி இறந்து போனது |
| மறக்க முயற்சிப்பது | :யுத்தத்தின் கொடுமைகளை |
| எரிச்சல்ப் படுவது | :சிங்களத்தில் வரும் அரசாங்க கடிதங்களைக் கண்டு |
| அடிக்கடி முணு முணுக்கும் பாடல் | :ஏன் பிறந்தாய் மகனே! இலங்கையில் ஏன் பிறந்தாய் மகனே...! |
| எதிரிகள் | :சிங்கள மக்கள் அல்ல |
| நண்பர்கள் | :இலங்கை மக்கள் அனைவரும் |
| ஒரே சந்தோசம் | :கனடாவிலிருக்கும் மகனின் குரலை ரெலிபோனில் கேட்கும் போது |

# திம்புக் கோட்பாட்டிற்கு அமையவே தீர்வு இருக்க வேண்டும்



மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற அங்கத்தவர் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி பாராளுமன்றத் தலைவர்

**ஜோசப் பரராஜ சிங்கம்**

**இன்றைய அரசியல் போக்குகள் தொடர்பாகவும், தங்கள் அரசியல் பிரவேசம் தொடர்பாகவும் தங்களின் கருத்தினை அறியலாமா?**

இன்றைய அரசியல் நிலையில் தமிழர்களுடைய பிரச்சினை மிகவும் மோசமானதொரு நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது. ஏறத்தாள 45 ஆண்டுகால தமிழர்களது அரசியல் பிரச்சினை அனுமான் வால் போல் நீண்டு கொண்டே போகின்றது. எந்த ஒரு நிரந்தர தீர்வையும் இந்நாட்டின் பெரும்பான்மை மக்களை பிரதிநித்து வப்படுத்தும் சிங்கள அரசுகள் முன்வைக்கவில்லை. முக்கியமாக கிழக்கு மாகாணத்தில் அதுவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு படையினரால் அதிக அளவு மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த, வகைதொகையின்றி தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு காணாமல் போன நேரமான, டயர்களிலே தமிழ் இளைஞர்கள் எரிக்கப்பட்டுக் கொண்டிருந்த 1990 இன் நடுப்பகுதியில் எனது பாராளுமன்ற பிரவேசம் அமைந்தது. இதற்கு முன்பு தமிழரசுக் கட்சியில் 1952ம் ஆண்டு முதல் இயங்கி வந்த நான் தமிழர் ஐக்கிய விடுதல்ல முன்னணி

ஆரம்பித்ததன் பின்பு அக்கட்சியில் மாவட்ட அமைப்பாளர்களாக நானும் காசி ஆனந்தனும் சேர்ந்து இயங்கினோம்.

**நாடளாவிய ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள யுத்த பிரகடனம் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

யுத்தம் ஒரு போதும் சமாதானத்தை ஏற்படுத்தாது. யுத்தத்தின் மூலம் சமாதானமோ அல்லது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வோ ஏற்பட்டதாக சர்வதேசிய மட்டத்தில் சரித்திரமே கிடையாது.

**நாட்டில் எழுந்துள்ள நெருக்கடியான சூழ்நிலைக்கு உடனடி பரிகாரம் என்ன?**

முதலில் நாட்டில் யுத்த நிறுத்தம் ஏற்பட வேண்டும். அதைத் தொடர்ந்து வட கிழக்குப் பகுதியில் இயல்பு நிலை உருவாக்கப்பட வேண்டும். அதன் பின்பு இனப்பிரச்சினையின் பிரதான பங்காளியான விடுதலைப் புலிகளோடு அர்த்த முள்ளதான, இதயசுத்தியுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம் பிக்கப்பட வேண்டும். இந்த உரிமை நிலையையும் யதார்த்த நிலையையும் அரசு உணர்ந்து செயல்பட முன் வரவேண்டும்.

**இன்றைய இவ் இக்கட்டான நிலையில் வெளிநாட்டு மத்தியத்துவம் பற்றி என்ன கருதுகின்றீர்கள்?**

1990ம் ஆண்டு காலம் சென்ற ஜனாதிபதி பிரேமதாசா விடுதலைப் புலிகளுடன் பேசிய பொழுதும் அதைத் தொடர்ந்து 1995இல் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவின் அரசு பேசிய போதும் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததற்கான காரணங்களை பரஸ்பரம் இரு பகுதியினரும் ஒருவரை யொருவர் குற்றம் சாட்டியுள்ளனர். மூன்றாவது மத்தியத்துவம் இல்லாததே இதற்கு காரணமாகும். சர்வதேசிய ரீதியில் இவ்வாறான பிரச்சினைகள் எழுந்தபோது மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் தொடர்பாக அரசும், எதிர்கட்சியும், புலிகளும் கோடிட்டு காட்டியிருக்கின்றனர். எனவே இதன் காரணமாக வெளிநாட்டு தலையீடும் மத்தியஸ்துவமும் முக்கியத்துவம் பெறுகின்றது.

**இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் மத்தியத்துவம் பற்றி என்ன கருதுகின்றீர்கள்?**

இலங்கை இனப் பிரச்சினையில் ஏற்கனவே இந்தியத் தலையீடு இருந்திருக்கின்றது. இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையை முழுமையாக அறிந்து கொண்ட நாடு இந்தியாவாகும். அத்தோடு இந்தியா தென்கிழக்காசிய நாடுகளில் சத்திவாய்ந்த நாடாகும். எனவே தமிழர் பிரச்சினை சம்பந்தமாக முழுமையாக அறிந்துள்ள இந்திய நாட்டின் மத்தியத்துவம் தமிழர் நலன்களை பாதுகாக்க தேவையென கருதுகின்றேன்.

**அப்படியானால் மீண்டும் இந்தியப்படை வருவது பற்றி ?**

இலங்கை இனப்பிச்சினையில் இந்தியா இராணுவரீதியில் தலையிடுவ-தை விட இராஜதந்திர ரீதியாக தமிழர் நலனுக்காக தலையிடுவது தான் நல்லது என நாம் கருதுகின்றோம். ஏன் என்றால் தமிழர்களின் நலன்களைக் காக்க இந்தியாவிற்கு தார்மீகக் கடமை உண்டு.

**ஆகஸட் மாதம் பாராளுமன்றம் கலைக்கப்படும் பொதுத்தேர்தலுக்கு இன்றைய யுத்த சூழ்நிலை இடந்தருமா? தேர்தல் நேர்மையாக நடைபெறும் என கருதுகின்றீர்களா?**

ஜனநாயக மரபுக்கமைய இலங்கை அரசியல் அமைப்பின் படி பாராளு மன்றத்தின் ஆயுட்காலம் அதன் முதல் அமர்விலிருந்து ஆறு ஆண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே அரசியல் அமைப்பின் படி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 24ம் திகதியுடன் பாராளுமன்றம் தானாகவே கலைந்து விடும். எனவே ஜனநாயக மர புக்கமைய பொதுத்தேர்தல் நடைபெற்றேயாக வேண்டும். தற்பொழுது அரசு பிரகடனப்படுத்தியுள்ள யுத்த நிலை காரணமாகவும், அதைத் தொடர்ந்து ஜனநாயகத்தை முழுமையாக குழி தோண்டி புதைக்கின்ற பத்திரிகை சுதந்திரத்தை வாய் மூட வைக்கின்ற பத்திரிகை தணிக்கை நாட்டுமக்கள் அனைவருடைய ஜனநாயக சுதந்திரத்தை பறிக்கின்ற சர்வாதிகார விதிகளின் மூலம் இந்நாட்டின ஜனநாய்கத்திற் கான கதவுகள் இறுக்கப்பூட்டப்பட்டுள்ள. எனவே இப்படியான ஒரு சூழல் பொதுத் தேர்தல் நடைபெறும் பொழுது ஏற்கனவே இந்நாட்டில் பல தேர்தல் மோசடிகளையும் ஊழல்களையும் செய்து பழக்கப்பட்ட ஒரு அரசு முழுமையான ஜனநாயக வழியிலான தேர்தலை நடாத்துமா? என்கின்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுவது சகஜமே. எனவே எம்மைப் பொறுத்த மட்டில் தற்போதய சூழலில் ஜனநாயக ரீதியிலான தேர்தலொன்று நடைபெறும் என்பதில் சந்தேகமே எழுந்துள்ளது. இதே வேளை வட-கிழக்கில் இருக்கின்ற மோசமான யுத்த சூழ்நிலை காரணமாக அப்பகுதியில் எப்படி ஒரு தேர்தலை நடத்த முடியும்.

**ஜே. ஆர். ஜயவர்தனாவின் ஆட்சிக் காலத்தில் 6வது சட்ட திருத்தத்திற்கு எதிராக பாராளுமன்றத்தை விட்டு முழுமையாக வெளியேறிய தமிழர் ஐக்கிய கூட்டணி மீண்டும் அதை ஏற்று பாராளு மன்றத்திற்குள் உள் பிரவேசித்து இருக்கின்றது. இந்த கட்சியின் கீழ் தாங்கள் 10 வருடத்துக்கு மேலாக பாராளுமன்றத்தில் அங்கத்தவராக இருக்கின்றீர்கள். தங்களது கோரிக்கைகளுக்கோ அல்லது ஜனநாயக போர்வையைப் போர்த்திக் கொண்டு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய தமிழ் அமைப்புக்களின் கோரிக்கைகளுக்கோ இந்த அரசு செவிமடுத்ததாகத் தெரியவில்லை. அதனால் இந்த பாராளுமன்றத்தில் தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என கருதுகின்றீர்களா?**

ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் கட்சியே தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியா-கும். எனவே தான் ஜனநாய-கத்தின் ஆணிவேராக கருதப்படும் பாராளுமன்றத்தில் நம்பிக்கை வைக்க வேண்டியுள்-ளது. ஜனநாயக வழிமுறை மூலம் சாத்வீக அடிப்படையில் தமிழர்களுடைய உரிமைகளை வென்றெடுக்கலாம் என்கின்ற நம்பிக்கை தற்பொழுது மிகவும் குறைந்துள்ள நிலையிலும் கூட தொடர்ந்தும் ஜனநாயக வழி முறைகளான தேர்தல்களின் மூலம் மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளை தெரிவு செய்கின்றமுறை தொடர்வதின் காரணமாக அந்த ஜனநாயக வழியில் நம்பிக்கை வைத்துள்ள எமது கட்சி பாராளுமன்றம் செல்கின்றது.

**தங்களின் கட்சி அவசரகால சட்டத்தை எதிர்த்து, ஏனைய வரவு செலவு சட்டங்கள் போன்ற வற்றை ஆதரித்தும் பாராளுமன்ற த்தில் வாக்களிக்கின்றீர்கள். இது ஏன்?**

இது ஒருதவறான கருத்து. எமது கட்சி 1995 முதல் அவசரகால சட்டத்திற்கு எதிராக வாக்களித்து வருகின்றது. அதற்கு முன்பும் நாட்டில் எப்பொழுது அவசர காலசட்டம் அமுல் நடத்தப்பட்டதோ, அன்று தொட்டு இன்றுவரை எமது கட்சி பாரா்ளுமன்றத்தில் அவசரகால சட்டத்தை எதிர்த்தேவாக்களித்து வந்துள்ளது. அதேவேளை வரவு செலவு திட்டத்தில் ஓர் அங்கமாக அமைகின்ற பாதுகாப்பு நீதி ஒதுக்குக்கு எதிராக 1995 முதல் 1998 வரை எமது கட்சி வாக்களித்து வந்திருக்கின்றது. ஆனால் 1999 முதல் வரவு-செலவு திட்டத்தை முழுமையாகவும் மொத்தமாகவும் எமது கட்சி எதிர்த்தே வாக்களித்து வந்திருக்கின்றது.

**இன்று வடக்கில் புலிகளின் கை ஓங்கியுள்ளது. இவ்வாறான நிலையில் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவார்கள் எனக் கருதுகின்றீர்களா?**

தற்போதய சூழலில் போர் பிரகடனத்தை அரசு இறுக்கமாக முடுக்கி விட்டிருக்கும் பொழுது ஏராளமான முன்னேற்றங்களை கண்டுள்ள விடுதலைப் புலிகள் வலிந்து எப்படி பேச்சு வார்த்தைக்கு வரமுடியும். அதை யாதார்த்த பூர்வமாக ஏற்றுக் கொள்ள முடியாது.

**அரசும் புலிகளும் பேசித் தீர்க்க எவ்வாறான அணுகு முறையை கையாள வேண்டும் என கருதுகின்றீர்கள்?**

வருங்காலத்தில் அரசும் புலிகளும் பேசுவதாக இருந்தால் திம்பு கோட்பாடுகளை அடிப்படை-யாக வைத்தே பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். திம்பு கோட்பாடுகள் தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமை, தாயகக் கோட்பாடு தனித்துவ இனம் போன்றவற்றை தெளிவாக வலியுறுத்தியுள்ளது.

**மனித உரிமை மீறல்கள் தாங்கள் சர்வதேச அரங்கில் உரத்து குரல் கொடுத்து வருகின்றீர்கள். ஆனால் அவ்வகையான சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருகின்றன. அதற்கு மாற்றுப் பரிகாரமோ அல்லது ஒழுங்கான நட்ட ஈடோ வழங்கப்படுவது இல்லை இது குறித்து?**

மனித உரிமைகளை பொறுத்தமட்டில் 1991க்கு முன்பு உலகப்பார்வை இலங்கையை நோக்கி குறைவாகவே இருந்தது. 1991ம் ஆண்டு நான் பிரதிநித்துவப்படுத்தும் மட்டக்களப்பு தொகுதியில் உள்ள கொக்கட்டிச்சோலை கிராமத்தில் பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்ட பொது மக்களின் படுகொலைகளைத் தொடர்ந்து எனது வற்புறுத்தலின் பேரில் முதல் முறையாக இலங்கையில் பாதுகாப்பு படையினருக்கு எதிராக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணைக் கமிஷனின் பின்புதான் சர்வதேச ரீதியில் இலங்கையில முக்கியமாக இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக சர்வதேசியமும், மனித உரிமைக் குழுக்களும் தங்களின் கண்ணோட்டத்தை இலங்கைப் பக்கம் திருப்பியது. இதற்கு உதாரணமாக 1992ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பரிசில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கைக்கு உதவி வழங்குவதானால் கொக்கட்டிச்சோலை விசாரணைக் கமிஷன் அறிக்கையை சமர்பிக்குமாறு கேட்டிருந்தது. இதைத் தொடர்ந்து அரசு உடனடியாக கொக்கட்டிச் சோலை கமிஷன் இடைக்கால அறிக்கையொன்றை ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் சமர்பித்தது. இதன் பின் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக சர்வதேச நாடுகள் அழுத்தத்தை கொடுக்கத் தொடங்கின. 1993க்குப் பிறகு மனித உரிமை மீறல்கள் குறைந்து காணப்பட்ட போதிலும் இடையிடையே வடக்கிலும் கிழக்கிலும் இவை தலைதூக்குவதை காணமுடிகின்றது. கடந்த 5ம், 17ம் திகதி மட்டக்களப்பில் இடம் பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து அரசபடைகள் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் 24 பொது மக்கள் உயிரிழந்ததோடு 54 பேர் படுகாயமுற்றனர். இது சமகால மனிதஉரிமை மீறல்கதையாகும்.

**தங்களின் கட்சி எவ்வாறான தீர்வினை எதிர்பார்க்கின்றது?**

திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் அமையக்கூடிய தமிழீழ விடுதலைப் புலிகளை முழுமையாக ஈடுபடுத்திய ஒரு பேச்சுவார்த்தையின் மூலம் எடுக்கப்படுகின்ற ஒரு அர்த்தமுள்ள தீர்வையே எமது கட்சி இப்பொழுது எதிர்பார்க்கின்றது.

**முஸ்லிம் மக்களின் பிரச்சினையை தீர்க்க என்ன வழி கூறுகின்றீர்கள்?**

சிறுபான்மை இனமான தமிழ் மக்கள் பெரும்பான்மை-யினரால் மேற்கொள்ளப்படும் அடக்கு முறைகளையும் அநீதிகளையும் அனுபவித்து வருகின்றோம். எனவே இன்னுமோர் சிறுபான்மை இனமாகிய முஸ்லிம் சமூகத்தை நாம் அடக்கி ஆளக்கூடாது. முஸ்லிம் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற பகுதி வட கிழக்கு மாகாணமாகும். முக்கியமாக அம்பாறை மாவட்டத்தில் அவர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள். எமக்கு கிடைக்கப் பெறும் அரசியல் தீர்வில் எங்களுக்கு சமமான சகல உரிமைகளையும் வடகிழக்கில் வழங்கக்கூடிய ஒரு அரசியல் அமைப்பையே நாம் விரும்புகின்றோம்.

**தங்களின் கட்சி மிதவாத கட்சியாகும், ஏனைய தமிழ் அமைப்புகள் ஆயுத போராட்டத்திலிருந்து விடுபட்டு இன்று ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துள்ளன. பொது தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமை இன்மை காணப்படுகின்றது. மூத்த அரசியல் வாதியான தாங்கள் இவர்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தி தமிழ் மக்களுக்காக ஒன்றாக குரல் கொடுக்க வழி செய்தால் என்ன?**

தமிழ் அரசியல் கட்சிகளுக்குள் முழுமையான ஜனநாயக வழியில் செயல்பட்டு வந்த கட்சியே தமிழரசுக்கட்சியும், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியுமாகும். தந்தை செல்வா வழிகாட்டிய சாத்வீக போராட்ட வழியே எங்களுடைய அரசியல் தத்துவமாக இருந்து வருகின்றது. நாங்கள் ஆயுதத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் அல்ல, எனவே எமது கோட்பாட்டுக்கு அமைய ஆயுதமேந்தி இன்று ஜனநாயக நீரோட்டத்தில் கலந்திருக்கும் ஏனைய அமைப்புகள் அரசோடும் அரச படைகளோடும் சேர்ந்து செயல்படுகின்ற நிலையையும் கொள்கையும் மாற்றி தந்தை செல்வாவின் சாத்வீக கொள்கையை கடைப்பிடிக்கும் பட்சத்தில் நாம் எல்லோரும் ஒன்றாவதில் என்ன தடையிருக்கும்.

> இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா இராணுவரீதியில் தலையிடுவதை விட இராஜதந்திர ரீதியாக தமிழர் நலனுக்காக தலையிடுவது தான் நல்லது என நாம் கருதுகின்றோம். ஏன் என்றால் தமிழர்களின் நலன்களைக் காக்க இந்தியாவிற்கு தார்மீகக் கடமை உண்டு.

நேர்கணால்
**சிவஞானம்**
படம்
அஜித் செனவிரத்ன

# மொழியைக் கற்றுத்தருதே மொழிப்பாட நூலின் முக்கிய குறிக்கோளாகும்

வே.சண்முகராஜா



"கற்க கசடற" என்பது வள்ளுவர் வாக்கு. கற்றலில் இது எவ்வளவு முக்கியமோ அவ்வாறே கசடற கற்பிப்பதும் முக்கியமாகும். ஆனால் இன்றோ பள்ளிகளில் கற்கும் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பாடநூல்களே மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கசடற கற்கவும் கற்பிக்கவும் சவாலாக அமைந்துள்ளமை இந்நாட்டில் வெட்கக்கேடான விடயமாகும். தமிழ் மொழி பாடநூல்களில் எழுத்துப் பிழைகளும், கருத்துப் பிழைகளும் காணப்படுவது கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், கற்கும் மாணவர்களுக்கும் "தலை சுற்றும்" விடயமாக உள்ளது.

அத்தோடல்லாது மொழி பாடநூல்களை எடுத்து நோக்குவோமாயின் பாடநூல்களின் உள்ளடக்கம் மொழி வளத்துக்கும், வளர்ச்சிக்கும் மாணவருக்கு எந்தளவுக்குத் துணை புரிகின்றன என்பதும் ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. பாடசாலையில் க.பொ.த. சாதாரணதரம், உயர்தரம் வகுப்புகளில் கற்று வெளியேறும் மாணவனின் எழுத்து வழக்கையோ அல்லது பேச்சு வழக்கையோ உற்று நோக்குவோமாயின் எத்தனை பேர் மொழியில் தேர்ச்சியடைந்துள்ளார்கள் அல்லது மொழியை சரியான முறையிலே கையாள்கின்றனர் என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. இன்று பெரும்பாலான மாணவர்களின் பேச்சு வழக்கில் மட்டுமன்றி எழுத்து வழக்கிலும் வழுக்களும், கொச்சை மொழித் தன்மைகளும் விரவிக் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இவற்றுக்கான அடிப்படையை ஆராய்ந்து பார்த்தால் ஏராளமான காரணங்களைக் காண முடியும். ஆயினும் ஒரு விடயத்தை மட்டும் குறிப்பாக இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது.

இலங்கையில் சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னர் (1960 களில்) தமிழ் மொழிப்பாடத்துக்கென தமிழ் மொழி நூல் வேறாகவும் இலக்கிய நூல்கள் வேறாகவும் காணப்பட்டன. இலக்கிய நூல்கள் பல ஜீ.சி.ஈ. வகுப்பில் காணப்பட்டன.. (தற்போதைய க.பொ.த.சாதாரண தரம்) அலையும் கலையும், பாரதியார் பாடல்கள், கம்பராமாயணம்- சுந்தர காண்டம், உதயணன் சரித்திரம் ஆகிய இலக்கிய நூல்கள் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன. இந்நூல்களைக் கற்ற மாணவன் உரை நடை, கவிதை, செய்யுள் இவற்றின் சிறப்புக்களையும், தனித்தன்மைகளையும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அத்துடன் அக்கால நூல்கள் சீரிய தமிழிலேயே அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அந்நாட்களில் பயின்ற மாணவர்கள் இன்று தமிழறிஞர்களாகவும், தமிழாசிரியர்களாகவும், எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும் இருப்பதைக் காண முடிகிறது.

பிற்காலத்தில் மொழி பாடநூல்களில் மண்வாசனை, பிரதேச வழக்கு என்பன உள் நுழைக்கப்பட்டன. அத்தோடல்லாது இன, மதம் சார்ந்த விடயங்களும் சேர்க்கப்பட வேண்டும் என்ற ஒரு போக்கும் தோன்றியது. அத்தோடு சமூகக் கல்விப் பாடநூலில் இடம்பெற வேண்டிய விடயங்களும் மொழி நூலில் இடம் பெற்றன. இதன் காரணமாக மொழிப் பாடநூல் தனது சிறப்பையும், தனித்தன்மையையும் இழந்தது. இவற்றைக் கற்ற மாணவர்களும் பிரதேச பேச்சு வழக்குகளையும், வழுவான சொற்களையும் கற்கவும், கதைக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். உண்மையில் மொழிப் பாடநூல் பல கலவைகளின் தொகுப்பாயிற்று எனலாம்.

மொழி பாடநூல் என்பது அம்மொழியின் தனித்துவத்தைப் பேணுவதாயும், அதன் சிறப் புக்களையும், நுணுக்கங்களையும் எடுத்துக் கூறுவதாயும், வழுவற்றதாயும், தமக்கேயுரிய பண்பாட்டுத் தன்மையைப் பேணுவதாயும், உயிர்ப்புள்ளதாகவும் அமைய வேண்டும்.

எமது பாடசாலைகளில் பயன்படுத்தப்படும் பாடநூல்களை பயனுள்ள வகையிலே எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதைப் பற்றி தமிழறிஞர்கள் சிந்திக்க வேண்டும். பாடத்திட்டத்திற்கமைய எவ்வாறு தரமுள்ளதாக எழுதவேண்டும் என்பது பற்றி ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும். பொருத்தமற்ற தன்மைகளை சுட்டிக்காட்டி அவற்றை நீக்குமாறு கோரவேண்டும்.

மொழி நூலில் சமயத்துக்கும், இனத்துக்கும், பிரதேச வழக்கிற்கும் இடம் கொடுக்க வேண்டும் என்ற கருத்தைவிட்டு மொழி நூல் மொழியின் தனித்துவமான இலக்கண, உரைநடை, கட்டுரைகள் போன்ற உள்ளடக்கங்களைக் கொண்டதாக அமைய வேண்டும். இலக்கிய நூல்கள் பாரதிபாடல், திருக்குறள், கம்பராமாயணம் போன்ற தரமான இலக்கியங்களைக் கொண்ட தொகுப்பாக அமைய வேண்டும். பிரதேச வழக்குகளையும், பிற இன மதங்களிலுள்ள இலக்கியங்களையும் அறிமுகப்படுத்த வேண்டுமாயின் அதனை தனியான ஒரு துணை நூலாக வெளியிடலாம். அதில் பிரதேச, சமய சார்பான கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், உரையாடல்கள் போன்றவற்றை உள்ளடக்கலாம். இவ்வாறு,

தமிழ் மொழியும் இலக்கணமும்,
தமிழ் இலக்கியம்,
பிரதேச வழக்கு இலக்கியத் தொகுப்பு.

என்ற அடிப்படையில் மூன்று நூல்களை ஆறாம் தரத்திலிருந்து வழங்கலாம்.

**மொழிப் பாடநூலின் இயல்புகள்**

மொழி கற்பிக்க உதவும் ஒரு பாடநூல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைப் பற்றி அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியரும், மொழியியல் வல்லுநருமான மா.சு. திருமலை அவர்கள் விரிவாகக் கூறியுள்ளார். அவர் கூறியுள்ளவற்றில் சில முக்கிய கருத்துக்களை இனி பார்ப்போம்.

மொழி கற்க உதவும் நூல்களைக் கல்வி நிலையின் அடிப்படையில் மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை, ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குரியவை.

இடைநிலை வகுப்பு மாணவர்களுக்குரியவை.

உயர் வகுப்பு மாணாவர்களுக்குரியவை.

வேறு வகையாகவும் மொழி கற்கும் நூல்கள் உண்டு.

பேசுந்திறனை வளர்ப்பதற்காக எழுதப்படுபவை, இலக்கண அறிவையும், மொழி பெயர்க்குந் திறனையும் வளர்ப்பதற்காக எழுதப்படுபவை, எழுத்துத் திறனை வளர்ப்பதற்காக எழுதப்படுபவை, இவ்வாறு மொழியைக் கற்பிக்கும், கற்கும் சூழ்நிலையிலும் உள்ள வேறுமைக்குத் தகுந்தவாறு நூல்கள் வேறு வேறு வகையாக எழுதப்படலாம். இவ்வாறு நோக்கத்திலும் சூழ்நிலையிலும் உள்ள வேற்றுமைக்குத் தகுந்தவாறு நூல்கள் அமையுமானால் மொழியை வேகமாகக் கற்றுக் கொள்வதற்கும், மொழித் திறனை வளர்த்துக் கொள்வதற்கும் உதவியாக அமையும்.

மொழி கற்க உதவும் பாடநூல்கள் சில இன்றியமையாக் கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

இந்நூல்கள் மொழித்திறன்களை வளர்ப்பதற்கு ஏற்றவாறு பாடங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

அடிப்படையான மொழித்திறன்கள் நான்கு ஆகும். அவை, கேட்குந்திறன், பேசுந்திறன், படிக்குந்திறன், எழுத்துத்திறன்.

இந்நூல்கள் மொழியின் பல்வேறு உறுப்புக்களை வளர்க்கும் வகையில் அமைய வேண்டும். இவ்வுறுப்புக்கள் எட்டு வகையின. அவையாவன, ஒலியியல், ஒலியனியல், சொல்லியல், சொல்லொனியல், சொற்றொடரியல், பொருளியல், வார்த்தையியல், எழுத்தியல்.

மொழி என்பது மேற்குறித்த மொழித்திறன்களின் கூட்டாகவும், மொழி உறுப்புக்களின் கோவையாகவும் விளங்குகிறது.

மொழி கற்க உதவும் நூல்கள் மேற்குறித்த மொழியின் எட்டு உறுப்புக்களின் அடிப்படையில் மொழித்திறன்களை வளர்க்கும் நோக்கில் எழுதப்பட வேண்டும்.

இவ்வாறு மொழி கற்க உதவும் நூல்களை எழுதும் போது பின்வரும் அடிப்படைக் கூறுகளையும் மனதில் கொள்ள வேண்டும்.

1. தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்வது

இதை மூன்று வகையாக சேர்க்கலாம். மொழி உறுப்புகளின் அடிப்படையிலும், மொழித்திறன்களின் அடிப்படையிலும், பாடம் கூறும் பொருளின் அடிப்படையிலும்

2. எளியதிலிருந்து கடினமானதற்குச் செல்வது. இவ்விதி மாணவனின் விசய ஞானத்தைச் சேர்ந்திராமல் அவன் கற்கிற விசயத்தைச் சேர்ந்ததாகும்.

3. பின்னூட்டல். அந்நூலைப் பயன்படுத்தியதால் மாணவர்கள் எவ்வளவு கற்றுக் கொண்டார்கள் என்பதைத் தெரிந்துக் கொள்வதற்குரிய வழியும் இருக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு பாடமும் முடிந்த பின் உடனே மாணவர்கள் அப்பாடங்ளைப் புரிந்து கொண்டு விட்டார்களா என்பதைத் தெரிந்து கொள்வது கற்பிக்கும் வேகத்தையும், எவற்றையெல்லாம் கற்பிக்க வேண்டும் என்பதையும் நமக்கும் தெரிவிக்கும்.

4. தயாரிக்கப்படும் நூலின் எல்லாப் பாகங்களும், மொழித்திறனின் அடிப்படையிலும், மொழி உறுப்புக்களின் அடிப்படையிலும், பாடப்பொருள்களின் அடிப்படையிலும், கற்பவரின் நோக்கத்தின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டு மேற் சொன்ன நான்கின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட வேண்டும்.

5. பாடப் பொருளும், மொழியமைப்புக்களும் கற்கும் மாணவர்களின் தேவைக்கு ஏற்றவாறு அமைய வேண்டும். அவ்வாறு அமையும் போது கொடுக்கப்படும் விசயங்கள் முன்னுக்குப் பின் முரண்பாடு இல்லாதவனாகவும் இருக் வேண்டும்.

6. மொழி கற்பிப்பதற்காகத் தயாரிக்கப்படும் நூல்கள் பாடநூல் திட்டத்தின் குறிக்கோள்களையும் நாட்டின் பொதுவான குறிக்கோள்களையும் பிரதிபலிக்க வேண்டும்.

## மொழிப்பாடநூல் எவ்வாறு அமைய வேண்டும்?

7. ஆசிரியரின் ஆளுமையை, அவருடைய விருப்பு வெறுப்புகளை, அவருடைய நிறைகுறைகளை, அவருடைய திறமையை, அவர் உலகை நோக்கும் பார்வையை ஆசிரியரால் எழுதப்படும் நூல்கள் வெளிக்காட்டும். ஆகையால் இவற்றை மனதில் கொண்டு கவனமாக நூலைத் தயாரிக்க வேண்டும்.

8. பாடப் பொருள்கள், நூலின் பயன்படுத்தப்பட்டுள்ள மொழியமைப்புக்கள், மொழித்திறன்கள், மற்றும் வகுப்பிற்கு வெளியே மாணவர்கள் செய்ய வேண்டிய பயிற்சிகள், அவர்கள் கற்றுக் கொண்ட அளவைக் கணிக்கிற முறைகள் எல்லாம் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இத்தகைய ஒருங்கிணைந்து செயல்படும் நிலை இல்லாவிட்டால் நூலின் பயன் குறைந்து விடும்.

மொழிப்பாடநூல் எழுதுபவர் அறிந்திருக்க வேண்டிய பிற அம்சங்கள்

பாடநூலை எழுதுபவர் மொழி அமைப்புக்களையும், பாடத்திட்ட மற்றும் கல்விக் குறிக்கோள்களின் கொள்கைகளையும் மனதில் கொண்டு மாணவரின் வயது, சமுதாயச் சூழ்நிலைகள், மற்றும் முன்பு சொன்ன பலவிசயங்களையும் மனதில் கொண்டு நடுநிலை பிறழாமல் எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்ற இலக்கிய வடிவத்தையும் பயன்படுத்தி எழுதவேண்டும்.

மொழிப்பாடநூலிலே இலக்கியத்தோடு இலக்கியம் அல்லாத பிற பொருள்களைக் குறித்தும் பாடங்கள் அமைவது நல்லது. மேலும் இலக்கியத்திற்கு உள்ளேயே பல்வேறு வடிவங்கள் உருவங்கள் பயன்படுவதால் மொழிப் பாடநூலில் இவ்வுருவங்களை விளக்குவதற்கு வேண்டியும் படங்கள் அமையலாம். எடுத்துக் காட்டாக கதை வடிவம், கடித வடிவம், நாடக வடிவம், மனுக்கள் வடிவம், பத்திரிகை வடிவம் போன்ற பல்வேறு வடிவங்களைப் பயன்படுத்திப் பாடங்களை எழுதுவதால் பாடநூலின் பயுன் அதிகமாகிறது.

மொழிப்பாடநூல்களுக்கும் மற்ற பாடங்களைக் கற்பிக்கிற நூல்களுக்கும் ஓர் அடிப்படையான வேற்றுமை உண்டு. மற்ற பாடங்களைக் கற்பிக்கிற நூல்கள் மொழியை ஒரு கருவியாக வேறு ஒரு செயலைச் சாதிப்பதற்கான வெறுங் கருவியாக மட்டுமே கொள்கின்றன. அதாவது அப்பாடங்களின் கருத்துக்களை, கொள்கைகளை, மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு செயல்படுவதற்கு மொழியை ஒரு கருவியாக அவர்கள் பயன்படுத்து கிறார்கள். ஆனால் மொழிப்பாடநூலின் முக்கிய குறிக்கோளோ அக்கருவியை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதாகும். மொழியைக் கற்றுத் தருவதே மொழிப் பாடநூலின் முக்கிய குறிக்கோளாகும். இந்த வேற்றுமையின் அடிப்படையை மனதிலே கொண்டு பயிற்சிகள் இயற்றப்பட வேண்டும். இன்று பயன்படுத்தப்படுகிற பெரும்பாலான மொழிப்பாட நூல்கள் இத்தகைய வேற்றுமையை மனதில் கொண்டு எழுதப்படவில்லை.

மொழியின் இயல்புகளைப் புரிந்து கொள்வதற்கும், மொழி உறுப்புக்களை எவ்வாறெல்லாம் பயன்படுத்தலாம் என்பதைக் கற்றுத் தருவதற்கும் உரிய பயிற்சிகள் மொழிப் பாட நூல்களில் அதிக அளவு அமைய வேண்டும். பொருளை உணரச் செய்வது நமது குறிக்கோளாக இருந்தாலும், சொற்களை எப்படிப் பயன்படுத்துவது, சொற்றொடர்களை எப்படியெல்லாம் அமைப்பது பயன்படுத்துவது போன்றவற்றிற்கு உரிய பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும். பாடங்களின் எண்ணிக்கை, பாடங்களின் பொருள்கள், பாடங்களில் பயன்படுத்தப்படும் சொற்களின் எண்ணிக்கை, மற்றும் சொற்றொடர்களின் வகைகள் எல்லாவற்றையும் முன் கூட்டியே தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். பயிற்சிகளைப் பொறுத்தமட்டில் அவை மாணவனுக்குப் பயிற்சி கொடுப்பதோடு கற்றுத்தரப்படுகிற மொழியில் மாணவன் எந்த அளவு புலமை பெற்றிருக்கிறான் என்பதை நிர்ணயம் செய்வதற்குப் பயன்படுகின்றன.

பாடநூலில் வகுப்பிலே பாடங்கள் மூலம் கற்றுத்தரப் பெற்றவற்றை எந்த அளவுக்கு மாணவன் கிரகித்துக் கொண்டிருக்கிறான் என்பதைக் கணிப்பதற்கான பகுதியையும் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு கணிப்தற்கான பகுதி இல்லாத எந்தப் பாடநூலையும் செம்மையாகச் செய்யப்பட்ட பாடநூல் என்று சொல்ல முடியாது. இதைக் கணிக்கும் பகுதி மொழிப் பாடநூல்களில் மிகவும் தேவையானது.

ஒரு பாடநூலை எழுதும் போது பாடநூலுக்குரிய குறிக்கோள்களும், அக்குளிக்கோள்களை அடைவதற்கான முறைகளும், கற்றுத்தரப்படுகிற பொருள்களும், மொழி அமைப்புக்களும், அவற்றைக் கற்கும் போதும் கற்றபின்னும் செய்யப்பட வேண்டிய பயிற்சிகளும் செயல்களும், மற்றும் மாணவன் கற்றுக் கொண்டு விட்டானா, இல்லையா என்பதை நிர்ணயம் செய்வதற்கான பகுதிகளும், மேலும் பாடங்களும் பயிற்சிகளும் பொருத்தமானவையா என்பதை நிர்ணயிக்கும் பகுதிகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகவும், ஒன்றையொன்று ஒருங்கியைந்து இருப்பனவாகவும் அமைய வேண்டும்.

பாடநூல் எந்த அளவில் அச்சிடப்படவேண்டும்- எழுத்துக்கள் எந்தளவில் அமைய வேண்டும், எத்தகைய தாளைப் பயன்படுத்த வேண்டும், என்ன படங்களைத் தர வேண்டும் என்பவற்றையும் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். படங்கள் கண்ணுக்கு விருந்தாக அமைவதோடு, பாடப்பொருளோடும் மொழியமைப்போடும் சேர்ந்தும் அமைய வேண்டும். நல்ல மொழிப் பாடப் புத்தகம் எல்லா பொருத்தமான விசயங்களையும் மனதில் கொண்டே எழுதப்பட வேண்டும். ■

கொடுமைப்படுத்திய பின் அவளது பெண்

உடம்பிற்குள் கைக்குண்டை வெடிக்கச்

செய்து குரூரமாக கொலை செய்யப்பட்ட

கோணேஸ்வரி அம்பாறை மாவட்டத்தில்

சவளக்கடையில் வாழ்ந்து வந்த மூன்று பிள்ளைகளின் தாயாவார். கடந்த வெசாக் மாதத்துடன் இச்சம்பவம் இடம் பெற்று மூன்று வருடங்களாகின்றது. அன்று இச்சம்பவம் தொடர்பாக தென்பகுதி மக்களிடையே எவ்வித அதிர்வலைகளும் ஏற்படவில்லை. இன்று இச்சம்பவம் தொடர்பான நினைவு முழுமையாகி நீங்கி விட்டது.

வெசாக்தின முழுநிலவு
தலையில்
கைவைத்து அழுகின்றது
அதன் மூக்குச் சளி
சாரளம் வழியால்
தெறிக்கின்றது.
அயல் வீட்டில்
வெசாக்கிற்கு மொட்டவிழ்ந்த
ஏளு தாமரைப்பூக்கள்
இன்னும் வாடவில்லை.
ஐந்நூற்று ஐம்பது
புராணக்கதைகளை
சுருக்கி, நவீனப்படுத்தி
தூரத்தில் அமைத்த
வெசாக் பந்தலில்
இடைக்கிடை
விருது பாடுவது கேட்கின்றது
என் முன்
வெற்றுக் காகிதத் தாள்
கவிதைக்காக
விழித்திருக்கின்றது.
சடுதியாக எங்கிருந்தோ
மிதந்து வந்த
இறைச்சித் துண்டமொன்று
காகிதத்தில் வீழ்ந்து
யோனியின் வடிவமைந்தது.
அது
கோணேஸ்வரியினுடையது.
அம்பாறையிலிருந்து
கொழும்பு வர
இத்தனை நாளா?
எவ்வளவு தூரத்தில் நம்
கண்களில் கண்ணீர்
குளிர்கின்றது.
கண்ணீருக்கு மத்தியில் நான்
அங்குலி மாலாவாக அல்ல.
லிங்க மாலா வாகினேன்
எனக்கு விரல்கள்
தேவையில்லை.
ஆண் குறிகளே தேவை.
வெகு பக்தியாக வலது கர
த்தில் இறைச்சியையும்
மறுகரத்தில் இறுக்கமாக
ஆயுதத்தினையும்
எடுத்து புறப்படலானேன்
வழியில் சந்திக்கும்
வீடுகளை தட்டி
சகல சிங்கள ஆண்
குறிகளையும்
வெட்டி நூலால் கோர்த்து
இறுதியில் எனது
ஆ...............
வேதனையை தாங்கிக்
கொண்டு
ஸ்ரீ பாத மலையின் கழுத்திற்கு
ஆண்குறிகளை மாலையாய்
சூட்டினேன்.
என்னை தடுத்து நிறுத்தபோதி
மாதவன் இல்லாததால்
நான் இதனைச் செய்தேன்
சகோதர பாசமற்ற
உணர்வு அற்ற
இனம் ஒன்று எதற்கு
என் முன் வெற்றுக்
காகிதம்அதன் மீது
இரத்தக்கரை
இது ஒரு தமிழ்க் கவிதை
அதனால் சிங்களவருக்கு
இது புரியவில்லை

"ராவய"
மஞ்சுல வெடிவர்தன
மொழிபெயர்ப்பு
செல்வர்

### யுத்தம் வேண்டாம்

சோதனைச் சாவடியில்
காத்திருந்த நேரத்தில்
எனக்கு முன்னால்
வண்டி ஒன்று
ஒருவர் வந்தார் எட்டிப்
பார்த்தார்
இன்னொருவர் வந்தார்
எட்டிப் பார்த்தார்
எல்லோரும் வந்தார்கள்
போனார்கள்
நானும் சென்றேன்
எட்டிப் பார்த்தேன்
'சவம்'

அழுக்குச் சேலை இரத்தம்
தோய்ந்தபடி
ஒரு கணம் நிஷப்தம், இதயம்
இருண்டது
பார்த்தவர்கள் சவத்தை
கடந்தபடி போனார்கள்
இதயம் இருண்டது
யுத்தம் வேண்டாம்
மனித குலத்தை சவமாக்கி
இழுக்கும்
யுத்தம் வேண்டாம்

ஜெயந்தி
நன்றி : பெண்

தில்லா பிரியாங்கனியின் கூட்டத்தின் பெயர், ஊர் பிரதமர் ஒரு பெண்.

கிருஷாந்தினி,கோணேஸ்வரி

நிர்வாணமாக்கப்பட்டு படு

கொலை செய்த போதும்
சமந்தி துச்சாதணன் குழுவால்
மூவாயிரம் பேருக்கு

# துகிலுரிந்த துச்சாதணன் யார்?



துகிலுரிந்த துச்சாதணன் கூட்டம் யார்

இன்றைய அரசியல் உலகில் ஜனநாயக பண்புகளுக்கு ஏற்பதான் விரும்பிய அரசியலை செய்யவோ, தான் விரும்பிய கட்சிக்கு வாக்களிக்கவோ அனைவருக்கும் உரிமை உண்டு.

இது உயர்ந்த ஜனநாயக மரபுகளைக் கொணட நாடகளில் இவற்றிற்கு எவ்வித தடையுமில்லை. ஆனால் சுதந்திர ஜனநாயக நாடான எமது இலங்கையில் நடப்பதென்ன,

தெற்கில் மன்னம்பேரி, வடக்கில் கிருஷாந்தினி, கோணேஸ்வரி போன்றோர் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியவர்களாலேயே குதறி எறியப்பட்டார்கள். அது போல் கடந்த வருடம் தான் விரும்பிய கட்சிக்கு தனது தந்தையுடன் சேர்ந்து ஆதரவு திரட்ட சென்ற இளம்பெண் ஒருவர் நட்டுநடுச் சந்தியில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் முன்னிலையில் துயிலுரியப்பட்டு முழு நிர்வாணமாக்கி தவழ்ந்து போகும் அளவிற்கு இரும்பு பொல்லுகளால் தாக்கப்பட்டாள்.

ஆயுதக் கும்பல் ஒன்றினால் இம்சைக்கு இரையான இந்த இளம் பெண் ஒரு பள்ளி மாணவியாவார். வயது 17. 1999ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் திகதி இச்சம்பவம் நடைபெற்றது. தேர்தலின் பெயரால் அரச அதிகாரத்தையும், காடையர்களின் அதிகாரத்தையும் தமதாக்கிக் கொண்டு தேர்தல் கொள்ளைக்கு முன்னுதாரணமாக விளங்கிய வடமேல் மாகாணசபை தேர்தலின் போது அரசியல் வன்முறையாளர்களினால் இவ்விதம் பரிதாபமாக நடுத் தெருவில் இம்சிக்கப்பட்டாள். இச்சம்பவம் நடப்பதற்கு முன் நடுத்தர வயதுடைய பெண்

தெற்கில் மன்னம்பேரி, வடகிழக்கில் கிருஷாந்தினி, கோணேஸ்வரி வடமேல் மாகாண சப்தகோரளையில் சமந்தி இந்தப் பூந்தளிர்களை இம்சைப்படுத்த எவருமே அரசிற்கு அதிகாரம் வழங்கவில்லை.

அதிகமான மக்கள் மந்தைக் கூட்டத்தின் முன்னால் துகிலுரியும் போது இந்நாட்டின் ஜனாதிபதி ஒரு பெண், இந்நாட்டின் பிரதமர் ஒரு பெண், பாதுகாப்பு அமைச்சர் ஒரு பெண், இன்று சமந்தி தனிமையில் மௌனித்த நிலையில் வீட்டிறகுள் அடைபட்டு பள்ளி செல்லாமல் இருக்கின்றாள். இந்தசமூகத்தின் மீதேஅவளுக்கொரு வெறுப்பு. தன் ஆடைகள் களைக்கப்படும் போது மூவாயிரம் மனிதர்கள் மரங்களாக அல்லவா நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்த மனிதப் பொறுமையை அவளால் எப்படி ஜீரணிக்க முடியும்.

"ஒரு நாட்டில் பெண்களை நடாத்தும் முறையிலிருந்து அந்த நாடு எத்திசை நோக்கி செல்கிறது என்பது தெரியும்."

திம்பிரியாகம
பண்டார
படம்- அஜித்
செனவீரத்ன

# மலையக அரசியல் எங்கே போகிறது ?

மலையக அரசியல் மீண்டும் குழப்ப நிலைக்கு செல்ல ஆரம்பித்து விட்டது. தொண்டமானால் உருவாக்கப்பட்ட அடையாள அரசியல் கூட சிதைந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுமளவிற்கு குழப்ப நிலை வானளாவவளரத் தொடங்கியுள்ளது.

பெரிய ஆரவாரத்துடன் உருவாக்கப்பட்ட இந்திய வம்சாவளி மக்கள் பேரணி ஒரு சில மாதங்களுக்குள்ளேயே கண்ணுக்கு முன்னால் சிதைந்து போனது. முதலில் தேர்தல் தோல்வியுடன் ஐயாத்துரை தலைமையிலான தொழிலாளர் தேசியச் சங்கம் பேரணியிலிருந்து வெளியேறியது. தொடர்ந்து இ.தொ.கா வினது ஏதேச்சாதிகார போக்கையும் அடாவடித் தனத்தையும் பொறுக்க முடியாமல் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக தொழிலாளர் காங்கிரசும் வெளியேறியது. தற்போது போக்கிடமற்ற இடதுசாரிகள் மட்டும் பேரணியோடு ஒட்டிக் கொண்டிருக்கின்றனர்.

பேரணிதான் சிதைந்தது என்று பார்க்க தற்போது பேரணியின் தலைமைக் கட்சியான இ.தொ.காவும் உடையத் தொடங்கியுள்ளது. எந்தவிதகேள்வியும் இல்லாமல் தொண்டமானுக்கு அடிபணிந்தது போல தனது அடாவடித்தனங்களிற்கும் அடிபணிய வேண்டும் என ஆறுமுகம் தொண்டமான் எதிர்பார்த்தார். அதற்கு இணங்க மறுத்ததாலேயே இ.தொ.காவின் எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஐந்து பேர் தனித்து இயங்கத் தொடங்கியுள்ளனர். தாங்கள் தனித்து இயங்கப் போவது தொடர்பாக ஜனாதிபதிக்கும் கடிதம் அனுப்பியுள்ளனர். அறிக்கைப் போர் ஒன்றையும் நடாத்தி வருகின்றனர்.

வெளியேறியவர்களுக்கு எதிராக ஆறுமுகம் தொண்டமான், அவருக்கு காலம் காலமாகவே கைவந்த சண்டித்தன அரசியலை ஆரம்பித்துள்ளார். விளைவு கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ராஜரத்தினத்தின் புசல்லாவை இல்லம் தாக்கப்பட்டது. நுவரேலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம், பதுளைமாவட்ட

பாராளுமன்ற உறுப்பினர் சென்னன் ஆகியோர் மாவட்ட இ.தொ.கா அலுவலகத்திற்குள் நுழைய விடாமல் தடுக்கப்பட்டனர்.


ஆனால் வெளியேறியவர்களின் குழுவிற்கு தலைமை தாங்கிய பி.பி. தேவராஜ் உடன் மட்டும் சாதிச் செல்வாக்கு காரணமாக இதுவரை எந்தவித மோதலுக்கும் போகவில்லை.

இதற்கு முன்னர் செல்லச்சாமி வெளியேறிய போதும் அவரது அலுவலகத்திற்கு சென்ற ஆறுமுகம் தொண்டமானின் அடியாட்கள் அலுவலக பொருட்களை அடித்து நொருக்கியிருந்தனர். அலுவலக ஆவணங்களை கிழித்தெறிந்திருந்தனர்.

ஒரு பக்கத்தில் அடாவடித்தனங்களில் இறங்கயிருந்தாலும் மறுபக்கத்தில் ஆறுமுகம் தொண்டமான் நன்றாக ஆடிப்போயுள்ளார். பேரணியையும் வளர்க்க முடியவில்லை. இ.தொ.காவையும் பாதுகாக்க முடியவில்லை. என்ன செய்வது என்று தடுமாறுகிறார். இ.தொ.கா.வின் பெயரை சட்டரீதியாக பயன்படுத்துவது தொடர்பாக செல்லச்சாமி நீதிமன்றத்தில் தடை வாங்கியுள்ளதால் அது வேறு சிக்கலாக உள்ளது. ஒரு ஆளுமைவாய்ந்த தலைமைத்துவத்தை தன்னால் கொடுக்க முடியாது என்பதை அவர் கொஞ்சம் கொஞ்சமாக உணரத் தொடங்கியுள்ளார்.

எனவே தலைமைத்துவ பிரச்சினையை தீர்ப்பதற்கும் இ.தொ.கா.வினை சட்டரீதியாக பயன்படுத்துவதற்கும் ஒரே வழி செல்லச்சாமியை உள் இழுப்பது தான் என்பதை உணர்த்த தற்போது செல்லச்சாமியுடன் பேச்சுவார்த்தைநடாத்த தொடங்கியுள்ளார்.

செல்லச்சாமிக்குதலைமைப்பொறுப்பை விட்டுத்தருவது, பொதுச் செயலாளர் பொறுப்பை தான் வகிப்பது என்பதே ஆறுமுகம் தொண்டமானின் நிலைப்பாடு. கட்சியின் நிர்வாகக் கட்டுப்பாடு பொதுச்செயலாளரிடம் இருப்பதால் செல்லச்சாமிக்கு தான் முன்னர் வகித்த அப்பதவியை விட்டுவிட விருப்பமில்லை. அத்தோடு அன்று தன்னுடன் வெளியேறிய மத்திய மாகாண சபை உறுப்பினர்களுக்கும் முக்கிய பொறுப்புகள்



வழங்கப்பட வேண்டும் என செல்லச்சாமி பேரம் பேசியுள்ளார்.

இ.தொ.கா. கண்ணுக்கு முன்னால் உதிர்த்து கொண்டிருப்பதால் தான் ஏன் போய் அதற்கு ஒட்சிசன் கொடுக்க வேண்டும் என செல்லச்சாமி கருதுவது போலவும் தெரிகின்றது. அதைவிட ஆறுமுகம் தொண்டமானின் மன்னராட்சி அரசியலுக்கு முன்னால் வெறும் றப்பர்ஸ்டாம்பாக தான் ஆக்கப்படலாம் எனவும் அவர் கருதுகின்றார். இதனாலேயே தான் பலமாக நிற்கக் கூடியளவிற்கு தனது பரிவாரங்களுக்கும் பொறுப்புக்கள் தந்தால் போவது பற்றியோசிக்கின்றார்.


மறுபக்கத்தில் செல்லச்சாமி தயங்குவதற்கு இன்னோர் காரணியும் உண்டு. தற்போது ஐ.தே.கட்சியின் தயவால் அவர் மத்திய மாகாண சபை உறுப்பினராகியுள்ளார். அடுத்து வரும் தேர்தலின் பின்னர் தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிப்பது என ஐ.தே.க அவருக்கு வாக்குறுதி அளித்துள்ளது. ஐ.தே.க பதவிக்கு வந்தால் ஒரு முழு அமைச்சராகும் வாய்ப்பும் அவருக்கு உண்டு. இவற்றையெல்லாம் ஏன் வீணாக இழக்க வேண்டும் என அவர் நினைக்கின்றார். இதைவிட தனக்கு பின்னர் தனது வாரிசாக வர இருக்கும் தனது மனைவி வேலம்மாளின் அரசியல் அந்தஸ்தினை தற்போதே உயர்த்தவும் வேண்டும். அதற்கு அவர் குறைந்தது ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவாவது வருதல் வேண்டும். ஐ.தே.க. வுடன் இணைந்திருக்கும் போதே அதற்கான முயற்சிகளை செய்யலாம். பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்கு அவர் ஏற்கனவே அறிமுகமான கொழும்பு மாவட்டத்திலேயே போட்டியிடவும் வேண்டும். இ.தொ.காவுடன் இணைந்தால் யோகராஜனும், தேவராஜ்யும் ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதால் போட்டியிடுவது கடினம். என்றெல்லாம் அவர் யோசிக்கின்றார்.

இவ்வாறு தனது எதிர்கால வரவு-செலவுகளையெல்லாம் கணக்குப் பார்த்தே இ.தொ.காவுடன் இணைவதற்கு தயக்கம்காட்டி வருகின்றார்.

மலையக மக்கள் மத்தியில் இரண்டாவது பெரிய அரசியல் சக்தியாக கருதப்படும் மலையக மக்கள் முன்னணியும் சோபை இழந்தேகாணப்படுகின்றது. அதன் கொள்கைவகுப்பாளர் B.A. காதர் கட்சியை விட்டு விலகிய பின் கட்சியின் அரசியற் கொள்கை வலிமை மிகவும் தாழ்ந்த நிலைக்கு சென்றுள்ளது. கட்சியை வெளி உலகுக்கு

அடையாளப்படுத்திய "மலைலையக மக்களுக்கு தனி அதிகார அலகு" என்ற கொள்கையை கட்சி ஏறக்குறைய கைவிட்டதென்றே கூறலாம். ஏனைய அமைப்புகளைப் போல அதிகார அலகைப் பற்றி பேசுவது கூட ஒரு "துடக்கு" என அது கருதுவது போலத் தெரிகின்றது.

கட்சியின் தலைவரான பெ. சந்திரசேகரன் தொண்டமானின் வெற்றிடத்தை எப்படியும் தான் பெற்றுவிடுவேன் எனக்கனவு காண்கின்றார். தொண்டமானின் சகாப்தம் முடிந்துவிட்டது. இன்று அவரிலும் பார்க்க உயர்ந்த அரசியலை முன்னெடுக்கக் கூடிய ஒரு தலைவரின் தேவை மலையகத்தில் உருவாகியுள்ளது என்பதை அவர் உணர்வது போலத் தெரியவில்லை. தற்போது அவரது கனவெல்லாம் அடுத்த தேர்தலில் தனது உறுப்புரிமையை தொடர்ந்தும் தக்கவைப்பதோடு தன்னுடன் இன்னொருவரையாவது பாராளுமன்றத்திற்கு கூட்டிச் செல்வது, ஐ.தே.க பதவிக்கு வந்தால் முழு அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொள்வது என்பதாக மட்டும் உள்ளது. கொள்கை ரீதியாக கட்சியுடன் இணைந்திருந்த மலையக தேசியவாதிகள் பலர் தற்போது கட்சியை விட்டு வெளியேறியுள்ளனர். கட்சி இப்போது இ.தொ.கா.வைப் போல துதிப்பாடிகளின் கூடாரமாகவே மாறியுள்ளது.



**வெளியேறியவர்களுக்கு எதிராக ஆறுமுகம் தொண்டமான், அவருக்கு காலம் காலமாகவே கைவந்த சண்டித்தன அரசியலை ஆரம்பித்துள்ளார்.**

மலையகத்தின் புதிய தலைமுறை அரசில் வாதியான மனோகணேசனின் அரசியற்கருத்துக்கள் பாராட்டப்படக் கூடிய வகையில் வலிமையாக உள்ளன. எனினும் அரசியல் அதிகாரத்தைப் பொறுத்தவரை இந்திய வம்சாவழி மக்களுக்கான அதிகார சபை என்பதற்கு அப்பால் செல்ல அவருக்கு இன்னும் துணிவு வரவில்லை.

அரசியற் தளத்தை பொறுத்த வரையிலும் கூட மலையகத்தில் அவரது கட்சிக்கு பெரிதாக

ஒரு அடித்தளமும் இல்லை. லட்சக்கணக்கான பணத்தை தேர்தலில் செலவு செய்தும் மூன்று ஆயிரங்களுக்கு மேல் வாக்குகளை மாகாணசபைத் தேர்தலில் அவரால் அதிகரிக்க முடியவில்லை. இ.தொ.காவின் தயவில் அதிஸ்டவசமாக ஒரு மாகாண சபை உறுப்பினர் பதவியை எப்படியோ பெற்றுக் கொண்டார். இப்போது அவரது கவலையெல்லாம் இவ் மாகாண சபை உறுப்பினர் பதவியையாவது தொடர்ந்து தக்கவைப்பது எவ்வாறு என்பதாகவே உள்ளது. இடைக்கிடை கொழும்பு மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராக வரலாம் என்ற கனவும் அவருக்கு வருகின்றது.

அவருக்கு கனவுகான மட்டும் தெரிகிறதே தவிர கொழும்பு மாவட்டத்திலாவது அமைப்பை பலப்படுத்துவதற்கான மார்க்கத்தை கண்டறிய தெரியவில்லை. வெறுமனவே தனது அறிக்கைப் போர் மட்டும் தன்னைக் காப்பாற்றும் என அவர் நினைக்கப்பார்க்கிறார். தனது சொந்த வியாபார நடவடிக்கைகளுக்கு எவ்வித பங்கமும் ஏற்படாமல் அரசியல் செய்ய முனைகின்றார். சுருக்கமாகச் சொன்னால் நோகாமல் பிள்ளை பெறமுயற்சிக்கின்றார்.

மலையகத்தின் ஏனைய அமைப்புகளைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. தொழிலாளர் தேசியச் சங்கம் தொழிற்சங்க அரசியலுக்கு அப்பால் ஒரு அடிகூடச் செல்லத் தயாரில்லை. அதன் தலைவர் ஜயாத்துரையோ பேரணியில் சேர்ந்ததால் தனது மாகாணசபை உறுப்பினர் பதவியைப்பறி கொடுத்து விட்ட சோகத்தில் இருந்து இன்னமும் மீண்டும் வரவில்லை.

மலையக இடதுசாரிகளுக்கு தமது கட்சி பெயர் பலகையைக் காப்பாற்றுவதற்கே பெரும்பாடுபட வேண்டியுள்ளது. இ.தொ.கா. போன்ற பெரிய கட்சிகள் தமது தாழ்வாரத்தில் ஒதுங்குவதற்கு சிறிய இடம் கொடுத்தாலே அவர்களுக்கு அது தற்போதய நிலையில் பெரிய பேறு போல உள்ளது.

சட்டத் தரணி தம்பையாவை தேசிய அமைப்பாளராகக் கொண்ட புதிய ஜனநாயகக் கட்சி தனது தேசிய அரசியலின் ஒரு அம்சமாக மட்டும் மலையக அரசியலைப் பார்க்கின்றது. மலையக மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக சுயாட்சி உள்ளமைப்புகள் என்ற சிந்தனையை முன்வைத்த போதும் அதனை முன்னெடுப்பதற்கான பெரிய முயற்சிகள் எதிலும் இறங்கியதாகத் தெரியவில்லை. தமது மரபுரீதியான இடது அரசியல் தளத்தில் நின்று கொண்டு மலையகப் பிரச்சினையைப் பார்ப்பதால் மலையக அரசியலில் சிறிதளவிலாவது தீர்க்கமான பாத்திரத்தை ஆற்ற அவர்களால் முடியவில்லை. அவர்களும் இணைந்து உருவாக்கிய புதிய இடதுசாரி முன்னணி விக்கிரமபாகுவின் பாராளுமன்ற உறுப்பினர் மோகத்தால் சிதைந்து போன கவலையில் இருந்தும் அவர்கள் மீளவில்லை. விக்கிரமபாகு போனதால் தற்போது வாசுதேவ நாணயக்காராவை தலையில் தூக்கி வைத்து கொண்டாடுவதிலேயே அவர்களது காலம் கழிகின்றது. வாசுவும் போனால் தலையில் தூக்கிக் கொண்டாடுவதற்கு யாரைத் தேடுவார்களோ தெரியாது.

மலையக அமைப்புகளின் போக்கில் உள்ள மிகப்பெரிய சோகம் என்னவென்றால் ஒரு அமைப்பாவது மலையக மக்கள் இன்று அடைந்துள்ள அரசியல் கட்டத்தினை உணர்ந்ததாக தெரியவில்லை.

மலையக மக்கள் இன்று அடைந்துள்ள அரசியல் கட்டம் ஒரு ஒடுக்கு முறைக்குள்ளான தேசிய இனத்தின் போராட்ட வளர்ச்சியின் இரண்டாவது கட்டம். முதலாவது கட்டத்தில் ஒரு தேசிய இனம் சிதறிக்கிடக்கும் தன் அங்கத்துவத்தையெல்லாம் ஒரு அடையாளத்திற்குள் அணிதிரட்ட முற்படுகின்றது. பல்வேறு தவறுகள் இருந்த போதும் இலங்கை இந்தியர் காங்கிரசும் அதன் வழிவந்த இ.தொ.காவும் அக்கடமையை நன்றே நிறைவேற்றியுள்ளன. இந்த இடத்தில் மலையகத் தேசிய இனத்தின் முதலாவது கட்ட வரலாற்றுக் கடமையை தொண்டமான் சரியாகவே நிறைவேற்றியுள்ளார். இக்கடமை வடக்கு-கிழக்கு அரசியலில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஆற்றிய பங்கினைப் போன்றது.

இரண்டாவது கட்டம் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கான போராட்ட கட்டமாகும். இக்கட்டத்தில் அதிகாரத்தைப் பெறுவதற்கான அரசியல் மார்க்கத்தை வரையறுத்து அதற்கேற்ற வகையில் அமைப்பினை உருவாக்கி போராட்டங்களை முன்னெடுப்பது அவசியமாகும்.

மலையக மக்கள் முன்னணி உருவான போது இக்கட்டந்தை சரியாகவே அடையாளம் கண்டு அதிகார அலகுக் கோரிக்கையை முன்வைத்தபோதும் அதனைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கும் முயற்சிகள் எதிலும் இறங்கவில்லை. அதற்கேற்ற வகையில் அமைப்புத்துறையையும் நிர்மாணம் செய்யவில்லை.

புதிய ஜனநாயகக் கட்சி தனது பாரம்பரிய இடதுசாரி அரசியல் தளத்தில் நின்று இதனை சிறியளவில் அடையாளம் கண்டபோதும் செயற்பாட்டில் ஒரு அடிகூட முன்னுக்கு போகவில்லை.

ஏனைய அமைப்புக்கள் இக்கட்டத்தை பற்றி திரும்பியே பார்க்கவில்லை. இ.தொ.கா அக்கட்டத்தைப் பார்ப்பது தனது சுய அழிவிற்கு வித்திடும் என நினைத்து பார்க்காமலே விட்டு விட்டது.

உண்மையில் இன்றைய மலையகத்தின் தேவை. வடக்கு - கிழக்கு அரசியலின் இரண்டாவது கட்டத்தை முன்னெடுத்த தமிழரசுக் கட்சி போன்ற அமைப்பும், செல்வநாயகம் போன்ற தலைவர்களும், வன்னிய சிங்கம், அமிர்தலிங்கம் போன்ற தளபதிகளும் தான்.

ஆறுகள் ஒரு போதும் பின்னோக்கி பாய்வதில்லை. எத்தனை தடைகள் வந்த போதும் மலையக அரசியல் முன்னோக்கியே பாயும்.

வளர்ந்து வரும் மலையகத்தின் புதிய தலைமுறை இந்த வரலாற்றுக் கடமையை செவ்வனே செய்யும் நாள் வெகுதொலைவில் இருக்கப்போவதில்லை.

ரெங்கசாமி

# பலகட்டங்களை தாண்டி வளரும் தமிழ்த் தேசிய அரசியல்

ஆதிசங்கர







தமிழ்த் தேசிய அரசியல் அன்றிலிருந்து இன்றுவரை என்ற இந்த வரலாற்றுத் தொடர் தமிழர்கள் இலங்கையின் நவீன அரசியலில் பங்கு பற்றத் தொடங்கிய 1833ம் ஆண்டிலிருந்து இன்று வரையான தமிழர்களின் அரசியல் வரலாற்றினை ஆய்வு செய்ய முற்படுகின்றது.

தமிழர்களின் அரசியல் வரலாறு என்பது பல்வேறு கட்டங்களைத் தாண்டி இன்றைய நிலைக்கு வந்துள்ளது. 1833இலிருந்து 1920 வரை பெரும்பான்மைச் சிங்கள இனத்துடன் இணைந்து இலங்கையர் என்ற அடையாளத்தினை பேணுகின்ற வகையிலும், அதன் பின்னர் தனிவழி அரசியல் மூலம் தமிழர் என்ற அடையாளத்தை பேணுகின்ற வகையிலும் நகர்ந்து வந்திருக்கின்றது.

தமிழர் என்ற அடையாளத்தைப் பேணுகின்ற தனிவழி அரசியல் கூட மைய நிலைப்பட்ட அரசியலை ஏற்றுக் கொண்டு அதில் தமிழர்களுக்குப் பங்குகோருதல் என்ற கட்டத்தினை முதலாம் நிலையிலும், தாயகப் பிரதேசத்தை வரையறுத்து அதற்குச் சுயநிர்ணய உரிமை கோருதல் என்ற கட்டத்தினை இரண்டாம் நிலையிலும் வகித்துக் கொண்டு நகர்ந்திருக்கின்து.

சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் முதலில் சமஷ்டிக் கோரிக்கையாகவும் பின்னர் தமிழ் ஈழக் கோரிக்கையாகவும் வளர்ந்து வந்திருக்கின்றது.

ஒவ்வொருகட்டத்திலும் ஒவ்வொரு அமைப்புகள் முக்கியத்துவம் பெற்று வந்திருக்கின்றன. பல்வேறு அமைப்புகள் செயற்பட்ட போதும் அந்தக் கட்டத் திற்குரிய அரசியலை நகர்த்துவதற்குரிய ஆற்றல் ஒரு அமைப்புக்கு மட்டுமே இருந்திருக்கின்றது.

இதே போல அந்தக் கட்டத்திற்குரிய அரசியலை அடையாளம் கண்டு அதனை வினைத்திறனுடன் நடாத்திய வர்களே சிறந்த தலைவர்களாகவும் அடையாளம் காணப்பட்டனர்.

இலங்கையர் என்ற அடையாளத்தினைப் பேணும் கட்டத்தில் தமிழர்களுக்கெனத் தனியான அரசியல் இயக்கங்களின் தேவை பெரிதாக இருந்திருக்க வில்லை. யாழ்ப்பாணச்சங்கம் மட்டக்களப்புச் சங்கம் என்ற பெயர்களில் தமிழர்களை மையப்படுத்திய அரசியல் இயக்கங்கள் இருந்த போதும் இவை பெரிதாக முக்கியம் பெறவில்லை. இலங்கையர் என்ற அடையாளத்தினை உயர்த்திப் பிடித்து முன்சென்ற தலைவர்களே முக்கியமா னவர்களாகக் கருதப்பட்டனர். சேர். முத்துக்குமாரசுவாமி, சேர். பொன் இராமநாதன், சேர். பொன் அருணாசலம் போன்றோர் இவர்களில் முக்கியமானவர்களாக விளங்கினர். சிங்களத் தலைவர்களிலும் பார்க்க மிக உயர்ந்த அளவில் இலங்கையர் என்ற அடையாளத்திற்காக இவர்கள் குரல் எழுப்பினர். இவர்களில் சிகரமாகக் கருதப்படுபவா சேர். பொன் அருணாசலம் ஆவார்.

இலங்கைக்கு பூரண சுதந்திரம் வேண்டும் என்ற கோரிக்கைக்காகத் தீவிரமாக உழைத்ததோடு இலங்கையர்களின் ஐக்கியப்பட்ட தேசிய இயக்கமான இலங்கைத் தேசிய காங்கிரசின் உருவாக்கத்திற்கும் காரண கர்த்தாவாக இருந்தார். இலங்கைத் தேசிய காங்கிர சின் முதலாவது தலைவ ராகவும் அவரே விளங்கினார். கல்வி, அர சியல், வரலாறு, சமூகவியல் போன்ற துறைகளில் காலனித்துவ அடையாளத்தி ற்குப் பதிலாக இலங்கை அடையாளத்தினைப் பேணவேண்டும் என்பதற்காக பெரிதும் உழைத்தார்.

இவ்வாறு இலங்கையர் என்ற அடையாள அரசியலுக்குச் சிகரமாக இருந்தவரே பின்னர் தமிழர் என்ற அடையாள அரசியலுக்கும் காரணமாக இருந்தார் என்பது தான் சுவையான வரலாறு. 1920 களின் ஆரம்பப் பகுதியில் சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்ட நிலையில் அருணாசலம் தமிழர் அடையாள அரசியலை முன் கொண்டு செல்ல ஆரம்பித்தார். அதற்காக தமிழர் மகாஜன சபை என்னும் அமைப்பையும் உருவாக்கினார். அருணாசலத்தின் இந்த முயற்சியோடு தமிழ்த்தேசிய அரசியலும் ஆரம்பித்து விட்டது எனக் கூறலாம்.

தமிழ்த் தேசிய அரசியலை அருணாசலம் ஆரம்பித்து வைத்தாலும் அதனது முதலாவது கட்டமான மைய அரசிய லில் தமிழர்களுக்கு பங்கு கோருதல் என்பதை முன்கொண்டு சென்றவர் ஜீ. ஜீ. பொன்னம்பலமே ஆவார். இக்கட்டத்திற்குரிய அர சியலை நகர்த்தும் அரசியல் இயக்கமாக இவரால் உருவாக்கப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கி ரஸ் கட்சியே விளங்கியிருந்தது. இந்தக் கட்டம் 1921 இலிருந்து ஆரம்பித்தாலும் இக்கட்டத்திற்கான முனைப்பான அரசியற் செயற்பாடுகள் 1927 இல் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அரசியலுக்கு வந்த காலத்திலிருந்து ஆரம்பமாகி 1949ம் ஆண்டு அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவாகிய காலம்

## தமிழ் தேசிய அரசியல் அன்றிலிருந்து இன்று வரை

**அரசியல் தொடர் 1**

வரை செல்கின்றது. 1949 இலிருந்து இக்கட்டம் தேயத் தொடங்கினாலும் 1956ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்படும் வரை இதன் அடையாளம் அழிக்கப்படாமல் இருந்தது. 50 : 50 இக்கட்டத்தின் பிர தான கோரிக்கையாக இருந்தது.

தமிழ் தேசிய அரசியலின் இரண்டாவது கட்டம் 1949ம் ஆண்டு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தினால் உருவாக்கப்பட்ட அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் ஆரம்பமாகின்றது. மைய அரசியலில் தமிழர்களுக்கான பங்கு கோருதல் என்பது சரிவராத நிலையிலேயே தமிழர் பிர தேசங்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குதல் என்பது

ஆரம்பத்தில் பல இயக்கங்கள் செயற்பட்டாலும் பின்னர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமே இக்கட்டத்தின் முன்னெடுக்கின்ற இயக்கமாக மாறி அதன் தலைவரான பிரபாகரனே இக்கட்டத்தின் அரசியல் தலைவர்

இக்கட்டத்தின் பிரதான கோரிக்கையாக அமைந்தது. எஸ்.ஜே.வி செல்வநாயகம் இக்கட்டத்திற்குரிய தலைவ ராக விளங்கினார். தமிழர் என்ற அடையாளத்தினை வடக்கு - கிழக்கு முழுவதிலும் நிலைநிறுத்துவதில் இக்கட்சி வெற்றி கண்டது.

1949ம் ஆண்டு இக்கட்டம் ஆரம்பமானாலும் 1956ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டத்துடனும், 1956ம் ஆண்டு தேர்தலைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியாக தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்தும் முனைப்புப் பெறத் தொடங்கியது. 1968ம் ஆண்டு ஈழத்தமிழர் விடுதலை இயக்கம் என்ற தனி நாட்டுக்கான அமைப்பு உருவாகும் வரை இக்கட்டம் தொடர்ந்திருந்தது.

1968 இலிருந்து இக்கட்டம் தேயத் தொடங்கியது எனினும் இதன் அடையாளங்கள் 1976ம் ஆண்டு தமிழர் கூட்டணியின் தமிழ் ஈழக் கோரிக்கை உருவாகும் வரை மறையாமல் இருந்தன.

தமிழ்த் தேசிய அரசியலின் மூன்றாவது கட்டம் தமிழ் ஈழம் என்ற தனிநாட்டு அரசியலை முன்னெடுக்கின்ற கட்டம். இக்கட்டம் 1968இல் ஆரம்பமாகினாலும், 1976ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் ஈழத் தீர்மானத்துடன் முனைப்புப் பெறத் தொடங்கியது. 1977ம் ஆண்டுத் தேர்தலின் மூலம் தமிழ் மக்களிடமிருந்து இதற்கு அங்கீகாரம் கிடைத்தது. 1983 இன் பின்னர் இக்கட்டத்தினை முன்னெடுப்பதற்கான ஆயுதப் போராட்டம் வெகுவாக வளரத் தொடங்கியது. இன்று வரை அது வெவ்வேறு பரிமாணங்களுடன் வளர்ந்து வருகின்றது.

ஆரம்பத்தில் பல இயக்கங்கள் செயற்பட்டாலும் பின்னர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமே இக்கட்டத்தினை முன்னெடுக்கின்ற இயக்கமாக மாறியது. அதன் தலைவரான பிரபாகரனே இக்கட்டத்தின் அரசியல் தலைவராகவும் விளங்கு கின்றார்.

இவ்வாறு தமிழ்த் தேசிய அரசியலானது அகில இலங்கைத் தமிழ்க் காங்கி ரஸ் கட்சி, அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் எனும் அரசியல் இயக்கங்களினூடாகவும், ஜீ. ஜீ. பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், வே. பிரபாகரன் எனும் "கட்டங்களுக்குரிய தலைவர்களினூடாகவும் வளர்ந்து வந்திருக்கின்றது.

வேறு பலஅமைப்புகளும், தலைவர்களும் இத் தமிழ்த் தேசிய அரசியலில் பங்கு பற்றிய போதும் அக்கட்டத்தினை வினைத்திற னுடன் நகர்த்திய பெருமை மேற்கூறிய அமைப்புகளையும், தலைவர்களையுமே சாரும்.

இது தான் தமிழ்த் தேசிய அரசியல வரலாற்றின் சுருக்க அறிமுகம். இவ் வரலாற்றை யே தமிழர்களின் அரசியல் சமூக, பொருளாதார பின்புலத்தில் நின்று, பக்கச் சார்பற்று விரிவாக ஆராய இக்கட்டுரைத் தொடர் முயல்கின்றது. ஒரே அணுகுமுறையைப் பின்பற்றாது அரசியல் வர லாற்று ஆய்வுகளில் பயன்படுத்துகின்ற பல்வேறு ஆய்வுமுறைகளையும் இணைத்த வகையில் பிரயோகிக்க இத் தொடர் முயல்கின்றது. குறிப்பாக சமூகவியல் அணுகுமுறை, மாக்சிய அணுகுமுறை ஒப்பீட்டு அணுகுமுறை, வரலாற்று அணுகுமுறை போன்றவற்றை இணைத்துப் பிரயோகிப்பதன் மூலம் உண்மைகளைக் கண்டறிய முயல்கின்றது.

இத் தொடருக்கும் ஒரு இலக்கு இருக்கின்றது. உண்மையில் என்ன நடந்திருக்கின்றது என்பதைக் கண்டறிவதே அவ் இலக்காகும். அதனூடாகத் தமிழ்த் தேசியப் போராட்டத்தின் வரலாற்று வளர்ச்சிகள், போர ாட்டத்தின் நியாயத் தன்மை, தமிழ்ச் சமூக உருவாக்கம், ஆதிக்க சக்திகள், அடக்கப்படும் சக்திகள், தமிழ்த் தேசிய அர சியலின் போதாமைகள், என்பவற்றை அடையாளம் காண முயற்சிக்கின்றது.


இத் தொடர் ஒவ்வொரு இதழிலும் நகர்ந்து செல்லும் போது வாசகர்கள் தமது சந்தேகங்களைக் கேட்கலாம். அவற்றிற்கு மறு இதழிலேயே தெளிவான விளக்கங்கள் உடனுக்குடன் தரப்படும். வாசகர்களிடம் மாற்றுக் கருத்துக்கள் இருக்குமாயின் அதனையும் முன்வைக்கலாம். அவையும் தொடருடன் சமாந்தரமாக வெளியிடப்படும். விவாதம் நடாத்த யாராவது முன் வந்தால் அதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும்.

வரலாற்றில் உண்மைகளைக் கண்டு பிடிப்பது தனி ஒருவரால் இயலக்கூடிய காரியமல்ல. பல்வேறு முரண்பட்ட கருத்துக்களும் மோதுகின்ற போது அதனூடு உண்மைகள் வெளிவர முடியும். இந்த வகையில் அனைவரது பங்களிப்பையும் இத்தொடர் வரவேற்கின்றது.


தொடரும்....

**ஈழத் தமிழ் கவிதைக்கு கனிசமான பங்களிப்பு வழங்கிய முஸ்லிம் கவிஞர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் "மேமன்கவி" ஆவார். இந்தியாவின் குஜராத் மாநிலத்தை பூர்வீகமாக கொண்ட மேமன்கவியின் முதல் மொழி மேம் மொழியாகும். தம்முடைய சொந்த சமூகத்தின் பெயரையே தனது புனைபெயரில் இணைத்துக் கொண்ட மேமன்கவியின் சொந்தப் பெயர் "அப்துல் ரஸாக்" என்பதாகும்.**

**1957ம் ஆண்டு பிறந்த மேமன்கவி 8ம் வகுப்பு வரையே கல்வி கற்றவர். இவர் கற்றுக்கொண்ட பெரும்பாலான அறிவிப்புலம் சுய கற்றலின் மூலம் பெறப்பட்டவையே, மேமன்கவி இதுவரை யுகராகங்கள், ஹிரோஷிமாவின் ஹீரோக்கள், இயந்திர சூரியன், நாளைய நோக்கிய இன்றில், மீண்டும் வசிப்பதற்காக என்கின்ற 5 கவிதை தொகுதிகளை ஈழத்து இலக்கிய உலகிற்கு தந்துள்ளார். இவரது "நாளைய நோக்கிய இன்றில்" என்ற கவிதைக்கு 1990ம் ஆண்டு சாஹித்திய மண்டல பரிசு கிடைத்தது. கவிஞனாக மட்டும் அல்லாது சிறந்த வாசகனாகவும் விளங்கும் மேமன்கவி எந்த சிந்தனைக் கூட்டுக்குள்ளும் தன்னை இறுக்கிக் கட்டிக்கொள்ளாதவர். ஒரு பன்முக சிந்தனைக்கு தன்னை உட்படுத்துபவர்.**



# புதுக் கவிதையாளன் மரபை உடைக்கவில்லை புதிய மரபை உருவாக்குபவனாகவே இருக்கின்றான்



## மேமன்கவி

**நேர்காணல்- எஸ்.ருக்சாந்தி**

**பல்வேறு இலக்கிய துறைகள் இருக்கக் கூடியதாக கவிதை துறையை நீங்கள் தேர்ந்தெடுத்தமை பற்றி கூறமுடியுமா?**

எல்லா இளம் தலைமுறையினருக்கும் ஏற்படும் ஆர்வம் போலவே எனக்கும் இலக்கியத்தில் ஈடுபட விருப்பம் ஏற்பட்டது. அதன் முதல் கட்டமாக நான் சிறுகதை ஒன்று எழுதினேன். அச்சிறுகதையை புத்தகத்தில் பிரசுரிக்க நண்பனிடம் கொடுத்தபோது கவலையீனமாக அவன் அதை எரித்ததால் நான் சோர்ந்து போனேன். பாடசாலை காலத்தில் எனது தமிழ் ஆசிரியர் து. அஸ்ரப் கான் இலக்கிய துறையில் ஈடுபட ஊக்குவித்தார்.

இக்கால கட்டதிலேயே நான் பாடசாலையை விட்டு விலகி வெளிவந்து எனது சுய தேடலின் மூலம் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் சேர்ந்தேன். 73, 76 ஆண்டுகளில் சோஷலிச யதார்த்தவாதம், இலக்கியம், நாவல், சிறுகதைகளை வாசிக்க வாசிக்க அந்த இலக்கியம் பற்றிய அறிவு சிறிது சிறிதாக ஏற்படத் தொடங்கியது. இதனால் சிறுகதை மேலிருந்த ஆர்வம் குறையத் தொடங்கியது. ஏனென்றால் நான் எழுதிய சிறுகதைக்கும் இவர்கள் சிறுகதை தொடர்பாக கூறிய கருத்துகளும் வேறுபட்டனவாக இருந்தன. கைலாசபதியும், சிவத்தம்பியும் உரையாடும் போது சிறந்த புத்தகங்களை பற்றியே உரையாடுவார்கள். அவற்றை கேட்டு உடனடியாக நூல்நிலையம் சென்று அவர்கள் குறிப்பிட்ட புத்தகங்களை பெற்று வாசிக்க தொடங்கினேன். இதனூடாக உயர்ந்த இலக்கியங்களின் அறிமுகம் ஏற்பட்டது.

இவ் அறிவுப் பின்புலத்தில் ஏனது சிறுகதையை நோக்கிய போது நான் எழுதியது சிறுகதையே இல்லை, என்று உணர்ந்தேன். அதைத் தொடர்ந்து சிறிது காலத்தின் பின் கவிதைத்துறையில் ஆர்வம் ஏற்பட்டு கவிதை எழுத தொடங்கினேன். ஆரம்பத்தில் மரபு கவிதையே எழுதினேன். ஒரு குறிப்பிட்ட காலத்தின் பிற்பாடு புது விடயங்களை புதுக்கவிதையில் தான் கூறலாம் என எண்ணி புது கவிதைகளை எழுத தொடங்கினேன்.

எங்களுடைய கணிசமான படைப்பாளிகளின் குறைபாடு யாதெனில் இலக்கிய துறையில் ஒரு துறையில் ஈடுபட்டால் அது தொடர்பாகவே எழுதுவார்கள், வாசிப்பார்கள். வேறு இலக்கியங்களை வாசிப்பது இல்லை. உதாரணமாக கவிதை எழுதுபவர் என்றால் அவர் அத்துறை தொடர்பாகவே வாசிப்பார். வேறு இலக்கியங்களான நாவல், சிறுகதை, ஓவியம், புனைக்கதை, இசை போன்ற துறைகளை வாசிப்பது இல்லை.

என்னை பொறுத்தவரையில் ஓவியம், இசை, சிறுகதை, நாவல், சினிமா, ஊடகத்துறையான பொது ஜன தொடர்பு சாதனங்களில் தேடுதல் மூலம் அனைத்தையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் எப்போதும் எனக்குண்டு. விமர்சனத்துறையிலும் ஈடுபாடு உண்டு.

கவிதை ஊடாக சொல்லும் செய்தி என்பது உணர்ச்சி சம்பந்தமாக இருத்தல் வேண்டும். அறிவு சம்பந்தமான செய்தியாக கவிதை சொல்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. கவிதை என்பது ஒரு மின்னல் போன்றது. நல்ல கவிதை என்பதில் தேவையற்ற வார்த்தைகள் இருக்கக் கூடாது.

உதாரணமாக
"இரவில் வாங்கினோம்
இன்னும் விடியவில்லை"
[அரங்கநாதன் கவிதை (தமிழ் நாடு)]
நா. காமராசனின் ஒரு கவிதையில்
நிர்வாணத்தை விற்கிறோம்
ஆடைகள் வாங்குவதற்காக.

மேற்கூறிய இரு கவிதைகளிலும் தேவையற்ற ஒரு சொல்லேனும் வரவில்லை. எனவே நல்ல கவிதையில் தேவையில்லாத ஒரு சொல்லேனும் வரக்கூடாது.

**ஒரு கவிஞர் என்ற வகையில் ஈழத்து தமிழ் கவிதைகளின் இன்றைய நிலைபற்றி யாது கூறுவீர்கள்?**

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கவிதை வளர்ச்சியை விடவும் ஈழத்து கவிதைகள் நன்கு வளர்ந்துள்ளது. உலகளாவிய ரீதியாக கவிதைகளினுடைய தத்துவார்த்தங்களை உள்வாங்கி கவிதையினுடைய உச்சமான அனுபவத்தை வெளிப்படுத்தக் கூடிய வகையில் ஈழத்துகவிதைகள் வெளிவந்துள்ளன. இன்றைய எமது நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளின் வடிவம் காரணமாக தமிழ் கவிதை இதுவரை அடைந்திராத ஒரு வளர்ச்சியை ஈழத்து தமிழ் கவிதைகள் மூலம் அடைந்துள்ளது. அவ்வாறு வளர்ச்சி அடைந்துள்ள கவிதைகளின் உருவமாக புதுக்கவிதை இருப்பது முக்கியமான ஒன்றாகும்.

இத்தகைய ஒரு விடயத்தை உலகளாவிய ரீதியாக பார்க்கும் போது புதுக்கவிதை ஈழத்து கவிதைகளுக்கு ஒரு கை கொடுக்கும் உருவமாக இருக்கிறது. இவ்வாறு நான் கூறுகிறேன் என்பதற்காக ஈழத்து மரபு கவிதை வளர்ச்சி குன்றி போயுள்ளது என்று கூற முடியாது. ஏனென்றால் ஈழத்தில் நல்ல மரபு கவிஞர்களாக இருந்தவர்கள் புதுக்கவிதை வளர்ச்சிக்கும் பாரிய பங்கினை ஆற்றியுள்ளனர். புதுக்கவிதையை அல்லது மரபும், புதுமையும் கலந்த கவிதையை ஈழத்து இலக்கிய பரப்பில் கொண்டு சென்றவர்களில் முக்கியமானவர்களாக இ. முருகையன் நுஃமான். சண்முகம் சிவலிங்கம் போன்றவர்கள் விளங்குகின்றனர்.

இன்று மரபுக்கவிதை, புதுக்கவிதை வாதத்தைவிட இன்றைய கவிதைக்கு அதாவது ஈழத்து கவிதைகென்று ஒரு தனித்துவமான வடிவம் கிடைத்திருக்கிறது. அந்த வடிவம் தமிழின் கவிதை வளர்ச்சி என்று ஒரு புது வடிவமாக பரிணாமம் பெற்று இருக்கின்றது. தமிழின் கவிதை இற்றை வரை அடையாத வளர்ச்சியை புதிய தளத்திற்கு ஈழத்து கவிதைகள் கொண்டு சென்றுள்ளது. எனவே நிச்சயமாக ஈழத்து கவிதை ஒரு புதிய வளர்ச்சி கட்டத்திற்கு போயுள்ளது. போய்க்கொண்டுள்ளது. என்று தான் கூற வேண்டும்.

அதே நேரத்தில் மரபு கவிதை தொடர்பாக ஒரு முக்கியமான விடயத்தை கூறவேண்டும். குறிப்பாக இ.முருகையன், நுஃமான், சண்முகம் சிவலிங்கம் இடைப்பட்ட காலத்தில் இருந்த ஈழவாணன் போன்றவர்கள் கூட தங்களை மாற்றிக் கொள்ள தயாராக இருந்ததோடு நவீன கவிதைகளின் வடிவத்தை தங்களது கவிதைக்கு அனுமதித்ததும் புதுக்கவிதை வளர்ச்சியின் பங்காளராக இருந்ததையும் காணக்கூடியதாக உள்ளது.

ஆனால் ஒரு சில மரபு கவிஞர்கள் இந்த மரபு கவிதையின் அதே பழைய தொனியையும், அதே பழைய உள்ளடக்கத்தொனியையும் இழக்க விரும்பாதவர்களாகவும் இருக்கின்றனர். இந்த மரபுக் கவிதை, புதுக் கவிதை என்று தனியாக ஆராய்கின்ற போது அங்கு ஈழத்து மரபுக் கவிதை பின்னடைந்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. ஆனால் மரபு கவிதை, புதுகவிதை என்று பார்ப்பதை விட்டு அது இன்றைய கவிதையாக இருக்கின்றதா என்று பார்ப்பது தான் முக்கியம். ஒரு படைப்பு இன்றைய படைப்பாக சமகால படைப்பாக மாறிய பின் அது எந்த உருவத்தில் இருப்பது என்பது முக்கியம் அல்ல. அது என்ன உள்ளடக்கத்தை சொல்லுகின்றது என்பது தான் முக்கியம். அந்த வகையில் ஈழத்தில் கவிதை வளர்ச்சி நிலையை தான் அடைந்துள்ளது. உதாரணமாக மேத்தாவின் கவிதைகளும் சரி, வைர முத்துவின் கவிதைகளும் சரி, அவற்றையும் கடந்து ஈழத்து கவிஞர்களான ஜெயபாலன், சேரன், சோலைக்கிளி, சண்முகம் சிவலிங்கம், சு.முரளிதரன், வெலிமடை ரபீக், ஈழகணேஷ், இப்னு அசோட்மட். வரை பார்த்தால் நீங்கள் முன்பு பார்த்த கவிதைகளுக்கும் இன்று வெளிவந்த ஈழத்து கவிதைகளை பார்ப்பதற்கும் இடையில் ஒரு புது தொனியும். புதிய வடிவத்தையும் காணக்கூடியதாக உள்ளது. அதேவேளை இவற்றை உலகளாவிய ரீதியாக கொண்டு செல்வதற்கான தகுதியும், பெற்றதற்கு காரணம் அதன் சமகால உள்ளடக்கம் அதாவது சமகால இனவிடுதலை அல்லது தேசிய விடுதலை போராட்ட பிரச்சினைகளையும் உள்ளடக்கி இருப்பதே மாற்றத்திற்கு முக்கிய காரணம் என்பதை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. மற்றபடி எந்த ஒரு படைப்பாளியும் சமகாலத்தை புறக்கணித்து எழுத முடியாது.

அவ்வாறு சமகாலத்தை எழுதுகின்றவனும் கூட தொய்ந்து போன ஒரு பாணியை சொல்லுகின்ற போது அது ஒரு அழுத்தமாக இருக்காது.

எனவே சொல்கின்ற முறையில் நவீனத்துவம் இருக்க வேண்டும். இன்று நம்மை சூழவுள்ள சூழலில் சுற்றிவரவுள்ள இடத்தில் புதிய பரிமாணம் புதிய தகவல் இருக்கிறது. என் தந்தையோ, என் தாத்தாவோ பெறாத ஒரு அனுபவத்தை நான் பெற்றுக் கொண்டுள்ளேன். என்றால் என் தாத்தாவின் இலக்கியத்தின் பாணி என்னுள்ளும் வெளிப்படும் என்பது சாத்தியம், இல்லை.

மற்றபடி இன்று மரபுக் கவிதை, புதுக்கவிதை என்ற போராட்டம் ஒரு தோய்ந்து போன விடயமே. எந்த விடயத்தில் எழுதுகிறேன் என்பது முக்கியம் அல்ல என்ன சொல்கிறேன் என்பதே முக்கியம். இதன்படி இன்றைய ஈழத்து கவிதை வளர்ச்சி நிலையே அடைந்துள்ளது எனலாம்.

மேலும் புதுக்கவிதையாளர்களைப் பற்றி சொல்ல வரும் பொழுது, மரபை தெரிந்தவர்கள் மரபை உடைக்க வேண்டும் என்று அடிக்கடி கூறிவருகிறார்கள். அதுவொரு மரபை உடைக்கவில்லை. புதிய மரபை உருவாக்குபவனாகவே இருக்கிறான். அவன் வெண்பா மீதோ ஆசிரியப்பா மீதோ கை வைக்கவில்லை. பின் ஏன் இந்த உடைத்தல் என்ற இலக்கிய வன்முறையான வாதம்?

**ஆக்க இலக்கிய கர்தாக்களுக்கும் - விமர்சகர்களுக்குமிடையிலான இடைவெளி பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன?**

ஈழத்தில் கணிசமான விமர்சகர்கள் எல்லாம் ஆக்க இலக்கிய கர்தாக்களாக இருந்திருக்கிறர்கள் எனவே இலக்கிய கர்த்தாக்களுக்கும், இலக்கிய விமர்சகர்களுக்குமிடையேயான இடைவெளிபற்றி எனக்கு பெரிதான முரண்பாடு இல்லை.

ஏனென்றால் படைப்பாளி என்பவன் படைத்தபின் அந்த படைப்பை பற்றி எவரும் எதுவும் கூறலாம் அது அவர்களின் விருப்பம்.

விமர்சகர்களின் பணி ஒரு நல்ல படைப்பை பலரிடம் அறிமுகப்படுத்துதலே. எனவே இங்கே ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்கும் படைப்பாளிகளுக்கும் இடையே ஏன் இடைவெளி வருகிறது? படைப்பாளியின் பணியை அவன் செய்கிறான் விமர்சகர்களின் பணியை விமர்சகன் செய்கிறான். விமர்சகன் ஒரு இலக்கியத்தை பற்றி கூறியவுடன் ஆக்க இலக்கிய கர்த்தா ஏன் கோபப்பட வேண்டும் எனவே விமர்சகனுக்கு விமர்சனம் செய்ய உரிமை இருக்கிறது.

ஒரு சந்தர்ப்பத்தில் அக்கரைபற்றில் எனது 2வது கவிதை தொகுதியான ஹிரோஷிமாவின் ஹீரோக்கள் அறிமுக விழாவின் போது சண்முகம் சிவலிங்கம் அவர்கள் மேமன் கவியின் இத்தொகுதியில் ஒரு கவிதையை தவிர ஏனைய கவிதைகள் அனைத்தும் கவிதையே இல்லை எனக் குறிப்பிட்டார். இதைக் கேட்ட சபையில் இருந்த சிலர் அவரோடு முரண்பட்டு தமிழகத்து கவிஞர்கள் அனைவரும் மேமன் கவியின் கவிதைகளை பாராட்டும் போது நீங்கள் மட்டும் ஏன் இப்படி கூறுகிறீர்கள் என ஆட்சேபம் தெரிவித்தனர். நான் என்னுடைய நன்றி உரையிலே சண்முகம் சிவலிங்கம் அவ்வாறு கூறுவது அவருடைய அளவுகோலின் நிமிர்த்தம் கூறுகிறார் என்பதால் அவருக்கு அத்தகைய கருத்து கூற உரிமை உண்டு என கூறினேன்.

எனது கவிதையை ஒருவரும் விமர்சிக்கக் கூடாது என்றால் நான் அதை வீட்டிலேயயே வைத்திருக்கலாமே ஏன் பத்திரிகையில் போட வேண்டும் ஏன் பொதுத்தளத்திறகு வரவேண்டும்? பொதுத்தளத்திற்குள் வந்தால் எவரும் எதையும் கூறலாம். ஆனால் இது தனிமனித துவேசமாக இருக்கக் கூடாது. சண்முகம் சிவலிங்கம் என்னுடைய கவிதையை கவிதை இல்லை. என்று விமர்சித்தார். ஆனால் ஏன் என்ற காரணத்தை அவரது அளவுகோலின் நின்று கூறினார். தனிப்பட்ட முறையில் எந்தவிதமான கோபமும் இல்லை அவர் கவிதை தொடர்பாக ஓர் அளவுகோல் வைத்திருந்தார். அதைக் கொண்டு அவர் என் கவிதையை விமர்சித்தார்.

பிழையான கருத்துக்கள், தகவல்கள் முன் வைத்திருந்தால் படைப்பாளி திருத்தி கொள்ள வேண்டும் என்பதை விமர்சகன் எதிர்பார்ப்பதில் தவறு இல்லை. மற்றும் உத்திகளையும், படைப்பை முன் வைக்கும் முறைமையில் மாற்றம் செய்ய சொல்வதும் விமர்சகனின் சுதந்திர மாக இருக்கலாம். ஆனால் படைப்பாளிக்கு அது கட்டளையாக இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. நிச்சயமாக விமர்சகர் ஒரு படைப்பாளிக்கு ஒரு வழிகாட்டியாக இருக்க முடியாது. எனவே விமர்சகனின் வேலை படைப்பாளியை அறிமுகப்படுத்துவது மட்டுமே ஆகும் என நான் நினைக்கிறேன்.

**இலங்கையின் நடைமுறை நிகழ்வுகள் அவற்றின் தாக்கங்கள் என்பன கவிதை இலக்கியத்தில் போதுமான அளவில் பதிவு செய்யப்படுகிறது என்று கருதுகிறீர்களா?**

நிச்சயமாக!

முன்பு தேசிய பத்திரிகைகளில் கவிதைகளை பற்றி ஆழமான அறிவு இல்லாத இளைஞர்கள் கூட 90 களின் ஆரம்பத்தில் காதல் கவிதை எழுதும் சூழல் இருந்தது. அதுவும் சமகாலத்தை பற்றி கூற வேண்டும் என்ற அவசியம் எல்லோருக்கும் உண்டு. சமகாலத்தை கூறாமல் எதுவுமே எடுபடாத நிலை உண்டு என கணிசமானவர்களுக்கு தெரியும்.

இன்று ஈழத்து கவிதைகளில் 85 வீதமானவை சமகால பிரச்சினையை பிரதிபலிப்பதாகவே உள்ளன. போராட்டம் என்பதை இரண்டு விதமாக நோக்கலாம். முதலாவதாக போராட்டத்தின் சூழலில் தளத்தில், இருந்துக் கொண்டு அதைப் பற்றி எழுதுகின்ற ஒரு படைப்பாளி. மற்றையது இன்றைய தேசிய சூழல் தந்த அனுபவங்களை ஒரு பரிமாணமாக கொண்டு எழுதுகின்ற படைப்பாளி.

உதாரணமாக - தெளிவத்தை ஜோசப்பின் "பொட்டு" என்ற ஒரு சிறுகதையில் பொட்டு வைத்த ஒரு பெண் போனால் ஏற்படும் பிரச்சினையை எழுதினார்.

எனவே தேசிய இனப்பிரச்சினை பொதுவாக தமிழ்பேசும் மக்களுடைய பிரச்சினையாக வடிவம் எடுத்த பிறகு முஸ்லிம் அகதிகள் தேசிய அடையாள அட்டை பொட்டு வைத்தல், போன்ற பல பிரச்சினைகள் யாவுமே தேசிய இனப் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்டவையே. ஆகவே எல்லாருமே இதைப்பற்றி கதைக்கிறார்கள். யாருமே இதைப்பற்றி கதைக்காமல் இருப்பது என்பது சாத்தியமில்லை. ஆனால் கதைப்பதை எவ்வாறு கதைக்கிறார்கள் அதாவது எவ்வாறு படைக்கிறார்கள் அனுபவபூர்வமாக, கலைத்துவமாக, வீச்சு மிக்க, நிலையில் படைக்கிறார்களா? என்பது தான் முக்கியம். அந்த வகையில் வெளிவருகின்ற ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்கள் நம்பிக்கையைத் தருவனவாகவே உள்ளன.


இன்னொன்று உள்ளடக்கம் உச்சமாக இருந்தாலும், உருவம் செழுமை இல்லாவிட்டாலும், அது முழுதையான படைப்பாக கணிக்கப்படுவது இல்லை. உள்ளடக்கத்தை எந்த உருவத்தில் நீங்கள் கூறுகின்றீர்களோ அந்த கூறுகின்ற முறைமை தான் மிக முக்கியம். சொல்கின்ற முறையில் தான் செய்திகள் பதியும் தன்மை ஆதிகரிக்கும். அதாவது தொடர்பாடலில் மிக முக்கியம் நீங்கள் எந்த விடயத்தை எவ்வாறு கூறுகின்றீர்கள் என்பது தான். கணிசமான நல்ல விடயங்களை நீங்கள் கவனித்திருந்தால் தெரியும். ஆழமான ஒரு விடயத்தை சொல்லத்தெரியாமல் சொல்லி இருப்பதால் அது மிக மோசமான விடயமாக வெளிப்பட்டு இருக்கும். எனவே படைப்புகள் எப்போதும், படித்து முடிந்தவுடன் அந்த படைப்புகளின் தூறல் மனதில் படிந்திருத்தல் வேண்டும் அது தான் நல்ல படைப்புகளின் வெற்றி எனலாம்.

என்னுடைய சில கணிசமான படைப்புகளில் கவிதையின் போக்கில் குறிப்பாக கவனம் செலுத்துகிறேன். கூடுமானவரை கவிதைகளின் முடிவில் உச்சம் கொடுப்பது நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

உதாரணம்
பால் வெளி தெருவின்
ஒரு மூலையில்
கடவுளின் பிணம் மிதக்கும்!

(தொடர்ச்சி 13 பக்கம்)

சுகதபால த சில்வா அவர்கள் சிங்கள இலக்கிய விளைநிலத்தில் சிறந்த கலை இலக்கிய படைப்புகளை அறுவடை செய்தவர். சிறந்தகலை இலக்கியவாதியான இவர் மனித நேயமிக்க பல்துறைக் கலைஞராவார். நேர்மையான இதய சுத்திவாய்ந்த எழுத்தாளரான இவரது படைப்புகளுக்கு பல விருதுகள் கிடைத்திருக்கின்றன. இவர் ஏழு நாவல்களையும் மூன்று மொழி பெயர்பு நாவல்களையும் கவிதை நூல் ஒன்றையும் வெளியிட்டிருப்பதுடன் சுகத் அவர்கள் பத்து மேடை நாடகங்களை நெறிப்படுத்தியுள்ளதுடன் நெறியாள்கையில் அற்புதமான ஆளுமையும் கொண்டுள்ளார். இவர் சிங்கள கலை இலக்கிய தளத்தில் ஆற்றியுள்ள பங்களிப்பு மகத்தானது. இவர் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக கொண்டுள்ள நிலைப்பாட்டினை அறிந்து கொள்ளும் வகையில் இவரை நாம் நேர்காணல் செய்த பொழுது



# காதல் உயர்வானது இதனை கலைவடிவத்துள் ஈர்த்துக் கொள்வது தவருதலல்ல

**சுகது பால து சில்வா**

**தாங்கள் இலங்கையில் நிலவும் தேசிய பிரச்சனையை எவ்வாறு விளங்கிக் கொள்கின்றீர்கள்?**

சிறு சிறு விடயங்களாக தென்பட்டவைகள் வரலாற்று படிமத்தில் ஒன்றாக சேர்ந்து இன்று பெரிய பிரச்சினையாக எழுந்துள்ளது. சீதாரஞ்சனி எழும் எழுத்தாளர் அண்மையில் எழுதியுள்ள "இராமன்" எனும் நாவலில் தெளிவாக இது நிருபனமாகி உள்ளது. இராமன் எனும் சிறுவனுக்கு சமூகத்தால் இளைக்கப்படும் துன்பங்கள் தொடர்பாக துள்ளியமாக சித்தரிக்கப்பட்டிருக்கின்றது. நான் இந்தப் பிரச்சினையில் இன்னொரு பக்கத்தையும் காணுகிறேன். தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாக தனித்தே வாழ வேண்டும் எனும் ஆசை இருந்திருக்கின்றது. எந்த ஒரு நாட்டிலும் வாழும் சிறுபான்மை இனம் ஒற்றுமையாக ஐக்கியமாகவே இருக்கும். சில வேளை இந்த ஆசை இதனால் எழுந்தது எனக் கூட கூறலாம். இருந்தும் இந்த ஆசையினால் இயல்பாகவே சமூகத்திலிருந்து ஒதுக்கப்படும் நிலையும் ஏற்படும். திருமணம் போன்ற கலாசார விடயங்களில் தமிழ் மக்கள் மிகவும் கடுமையான போக்கினையே கடைப்பிடிக்கின்றனர். இதுவும் இவர்கள் இவ்வாறு தனித்து நிற்பதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது எனலாம். சிங்கள தமிழ் மக்கள் ஒரு தாய் மக்களாக இருக்க வேண்டும் என சிங்கள சமூகத்தில் மாபெரும் பொய்யான கதையொன்று புனையப்பட்டுள்ளது. இது மக்களிடையே எடுத்துச் சென்ற மாபெரும் பொய்யாகும். காணிப் பிரச்சினைகளில் எல்லாம் ஒரு தாய் மக்களே கூடிய அளவில் பிரச்சினைப்படுகின்றனர்.

**தங்களின் நாடகவியல் வாழ்க்கையில் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக எவ்வாறு தொட்டுள்ளீர்கள் ?**

இனங்களுக்கிடையே நல் உறவை வளர்த்தெடுக்க நிகழ்வுகள் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்தவை எனும் நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கின்றது. இதற்கான முதலாவது நடவடிக்கையாக எனது "துன்ன துணுகமுவே" எனும் நாடகம் தமிழில் மொழி பெயர்ப்பு செய்து மேடையேறும் வாய்ப்பு இருந்தது. எனது தமிழ் நண்பரொருவர் இதனை ஏற்றிருந்தார். நாம் இவ் நாடகத்தை யாழ் மக்கள் மத்தியில் மேடையேற்ற திட்டமிட்டிருந்தோம். நாடகப் பிரதி மொழி பெயர்க்கப்பட்டு பயிற்சியும் ஆரம்பிக்கப்படவிருந்தது. நானும் யாழ்ப்பாணம் செல்ல தயாரானேன். இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்தது. ஒரு நாள் எனது நண்பர் வீட்டிற்கு , முன் நிற்கும் பொழுது இரண்டு இந்திய இராணுவ சிப்பாய்கள் அப்பக்கம் வருவதைக் கண்ட இவர் வீட்டுப்பக்கம் ஓடியுள்ளார். இதனைக் கண்ட இந்திய இராணுவத்தினர் துப்பாக்கி பிரயோகம் செய்ய அவ்விடத்திலேயே இவர் மரணமானார். இந்த சம்பவத்தின் பின்பு தமிழில் (துன்ன) அரங்கேற்றம் செய்யவிருந்த எனது கனவு பலிக்கவில்லை. 1960களில் தா வந்தோ (DE- WEDDO) எனும் நாடகத்தை மேடையேற்றினேன். தேசிய இனப் பிரச்சினையை கருப்பொருளாகக் கொண்டு இந்த நாடகத்தை தயாரித்திருந்தேன். ஆனால் நாடகத்திற்கு வைத்த பெயரின் காரணமாக நாடக ரசிகர்கள் மத்தியில் திரிபுப்பட்ட வேறொரு கருத்தொன்றே சென்றிருந்தது. சீதனப் பிரச்சினையே கருப்பொருளாக உள்ளது என சிலர் நினைத்தனர். தேசியத்தின் வேட்டைக்காரர்கள் என்பதையே நான் தான் வந்தேன் என குறிப்பிட்டிருந்தேன். இரண்டு இன இளைஞனுக்கும் - யுவதிக்குமிடையில் ஏற்படும் காதலையும் அதனால் எழும் பிரச்சி னைகளையும் இந்த நாடகத்தில் நான் சித்திரித்திருந்தேன்.

**இரண்டு இனங்களுக்கிடையே உள்ள இளைஞனுக்கும் யுவதிக்கும் இடையில் ஏற்படும் காதலைக் கருப்பொருளாகக் கொண்டு தேசிய இனப்பிரச்சினையை மேலோட்டமாக சில கலைஞர்கள் பார்க்கின்றனர். இது தவறானதாகும். இது தொடர்பாக தங்களின் நிலைப்பாடு என்ன?**

காதல் என்பது எல்லோருக்கும் பொதுவான மனித குணாம்சமாகும். சர்வதேசிய ரீதியில் இலக்கியத்தில் சேக்ஸ்பியரின் "ரோமியோ ஜுலியட்" நாடகம் தரம் மிக்க உயர்வான நிலையில் கருதப்படுவதற்கு காரணம் அதில் உள்ளடக்கியுள்ள காதலாகும். காதல் உயர்வானது. இதனை கலை வடிவத்துடன் ஈர்த்துக் கொள்வது தவறானதல்ல.

**தொலைக்காட்சி நாடகங்களுக்கு இன்று பெரும் வரவேற்பு இருக்கின்றது. தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக தொடர் நாடகங்களை தயாரிக்கக் கூடிய வசதியும் இருக்கின்றது. ஆனால் மேலோட்டமான கதையம்சம் கொண்ட தயாரிப்புகளையே நாம் பார்க்கக் கூடியதாய் இருக்கிறது. இது தொடர்பாக தங்களின் கருத்து என்ன?**

இலங்கையில் நெறிப்படுத்தப்பட்டு தயாரிக்கப்படும் தொலைக்காட்சி நாடகங்கள் வர்த்தக நோக்கிலேயே தயாரிக்கப்படுகின்றது. நாடகத்திற்கு முதலிடுபவர்களினால் நல்ல நாடகங்களை தயாரிக்க முடியாது.

**தொலைக்காட்சி நாடகங்களுக்கு முதலிடுபவர்களின் நோக்கங்களை நிறைவேற்றும் விதத்தில் தொலைக் காட்சி நாடகத்துறையினர் நடந்து கொள்கின்றனர் என தாங்கள் கூறுகின்றீர்களா?**

இலங்கையில் இந்த தன்மையே தென்படுகின்றது.

**"யுகவிலங்குவ" நாடகத்தின் தேசிய இனப்பிரச்சினையை தொடுவதற்கு ஓரளவு முயற்சி செய்துள்ளீர்கள். ஆனால் இந்த நாடகத்திற்கு அதிக அளவு வரவேற்பு கிடைக்கவில்லை. அது ஏன்?**

நான் தொலைக்காட்சி நாடகங்கள் பற்றி சிந்திப்பதிலும் ஏனைய தொலைக்காட்சி நாடகத்துறையினர் சிந்திப்பதிலும் நிறைய வித்தியாசம் இருக்கின்றது. நான் உரையாடலிலும் பார்க்க முகபாவம், காட்சி, பாத்திர அமைப்பு மூலமாவே நாடகத்தை நகர்த்த விரும்புகின்றேன். ஆனால் அனேகர் உரையாடல் மூலம் நாடகத்தை நகர்த்துகின்றனர். இதன் வாயிலாக நாடகத்தில் என்ன கூறப்படுகின்றது என ரசிகர்கள் அறிந்து கொள்கின்றனர். இது சரியாக டீவியைப் போட்டுக் கொண்டு வானொலி நாடகமொன்றை கேட்பதற்கு ஒப்பானதாகும்.

**தொலைக்காட்சி நாடக ரசிகர்கள் இவ்வாறு பழகிவிட்டார்கள் எனக் கூறுவதை விட பழக்கப்படுத்தப்பட்டு விட்டார்கள் எனக் கூறுவதே மேல் அல்லவா?**

ஆம் அது சரி. நான் இந்தக் காலங்களில் தொலைக்காட்சி நாடகங்கள் பார்ப்பது கிடையாது. அறையில் இருந்து கேட்டுக் கொண்டிருப்பேன். இன்றைய நாடகங்களை விளங்கிக் கொள்ள செவிப்புலன் மட்டும் இருந்தால் போதும்.

**தாங்கள் நூலொன்றை மொழி-பெயர்ப்பு செய்து கொண்டிருக்கின்றீர்கள் எனஅறிந்தோம். என்ன நூல் அது?**

1965ம் ஆண்டு இலங்கையில் பிறந்த தமிழ் இளைஞரான சியாம் செல்வன் செல்லத்துரை 1983 இல் நிகழ்ந்த வன்செயல் காரணமாக கனடாவில் குடியேறியவராவார். இவர் ஆங்கிலத்தில் எழுதிய நாவலை நான் இப்பொழுது மொழி பெயர்த்துக் கொண்டிருக்கின்றேன். இந் நாவலின் பெயர் THE SUNNY BOY ஆகும். எனக்கு இவரை நேரடியாகத் தெரியாது. எனது நண்பர் ஒருவருக்கு அவரை நன்றாகத் தெரியும். அவர் மூலமாகத்தான் இந்த நாவலைப் பெற்றுக் கொண்டேன். இந்த நாவலாசிரியர் இலங்கையில் வாழும் பொழுது தமிழ் இளைஞர்கள் எவ்விதமான பாதிப்புக்களுக்கு முகங் கொடுத்தார்கள் என்பது பற்றி இந் நாவலில் குறிப்பிட்டுள்ளார். இந் நாவலில் வரும் அநேக கதாபாத்திரங்களை தன்னினச் சேர்க்கையாளராக நாவலாசிரியர் சித்தரித்துள்ளார். தன்னினச் சேர்க்கையை இலங்கைச் சமூகம் ஏற்றுக் கொண்டதாக இல்லை. இவ்வாறானவர்களை எம்மவர் ஏற்றுக் கொள்வதில்லை. இவர் அடையாளமாக ஏற்றுக் கொண்டு சமூகத்திற்குள் ஒதுக்கி வைக்கப்படும் தமிழர் வாழ்வியலை விவரணப்படுத்த முனைகின்றார் என நான் கருதுகின்றேன்.

இது அடையாள மொன்றிற்காக நல்லது. ஆனால் நாவலின் ஓட்டத்தை அதன் பிர்தான நோக்கினை மழுங்கடித்து தன்னினச் சேர்க்கை மேலோங்கி நிற்பதை சிற்சில இடங்களில் காணக்கூடியத்தாய் இருக்கின்றது. எது எப்படியாக இருந்த போதிலும் இந்நாவலை இலங்கையர் அனைவரும் கட்டாயம் வாசிக்க வேண்டும் என நான் கருதுகின்றேன்.

சந்திப்பு
மஞ்சுல வெடிவர்தன
தமிழில்
சர்வசித்தன்

## புதுக் கவிதையாளன்.....

ஆகவே நடைமுறையில் கலை கலைக்காக, கலைம்க்களுக்காக, என்ற கோட்பாடு கூட பல வருடங்களுக்கு முன்பே பல விவாதங்கள் செய்து ஓய்ந்து போய்விட்டது. எந்த கலையையுமே ஆழ்ந்து பார்த்தால் கலை கலைக்காக என்று சொல்லுபவர்கள் கூட அவர்களும் மக்களினுடைய குரலாகவே இருந்திருக்கிறார்கள். குறிப்பாக 60 களில் ஆங்கிலம் கற்ற பிராமணர்கள் புது கவிதை முறையை தமிழுக்கு அறிமுகப்படுத்தி கவிதை படைத்த போது அதன் உள்ளடக்கம் அந்த வர்க்கம் சந்தித்த மனோ நெருக்கடிகளை பிரதிபலித்தது. எனவே என்னை பொறுத்த வரையில் எந்த கலையுமே மக்களையே பிரதிபலித்துள்ளது. அதன் படைப்பாளியை வர்க்க நிலையை அடையாளம் காட்டியே வந்துள்ளது.

மேலும் படைக்கப்படுவது என்பதை இன்னும் கொஞ்சம் அழுத்தமாக கூறினால் யாருக்காக நான் இலக்கியம் படைக்கிறேன் மக்களுக்காக! மக்களிலும் கவிதை சென்றடைபவர்களுக்காகவே கவிதை படைக்கிறேன்! ஆனால் அந்த கலை இலக்கியம் சென்றடையும் இடம் சாதாரண மக்களாகவும் அதாவது அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்களாகவும், செருப்பு தைப்பவனாகவும் இருக்கலாம். இதற்கு சரியான ஊடகத்தை நாம் கையாளுகின்றோமா மக்களை சென்றடையக்கூடிய ஊடகங்களை நாம் தெரிவு செய்கிறோமா? என்பதே முக்கியம்.

என்னுடைய ஐந்து கவிதை தொகுதிகளும் இலக்கிய வாதிகளிடம் போய் சேர்ந்திருக்கலாம், இலக்கியம் கற்கும் மாணவர்களிடம் போய் சேர்ந்திருக்கலாம். ஆனால் எனது படைப்புக்கள் மக்களிடம் போய் சேர்வதாக இருந்தால் தொலைக்காட்சி, வானொலி, கவியரங்கு போன்ற ஊடகங்கள் தான் அதற்கான மார்க்கங்கள் என்பதை உணர்ந்திருக்கின்றேன். மக்களுக்காக எழுதுகிறோம் என்று கூறுபவர்கள் அந்த எழுத்துக்களை மக்களிடம் கொண்டு செல்லும் ஊடகங்களை தெரிவு செய்யாமல் அவ்வாறு கூறுவது போலித் தனமாகும். மக்களுக்காக எழுதுபவன் மக்களுக்கான ஊடகத்தையே தெரிவு செய்ய வேண்டும்.

அந்த வகையில் அவ்வாறு தெரிவு செய்வதிலும் சில சிக்கல்கள் உண்டு. அதாவது தொலைக்காட்சி, வானொலி, தேசிய பத்திரிகை போன்ற ஊடகங்களில் நடைமுறை சிக்கல் படைப்பாளிகளின் படைப்புகளை மக்களிடம் கொண்டு செல்வதற்கான தாமதங்களையும், தலையீடுகளையும் ஏற்படுத்தக்கூடியதாக இருப்பதனால் மக்களிடம் நல்ல செய்திகளையும் கவிதைபற்றிய அபிமானத்தையும் ஊட்டவல்ல சிறந்த ஊடகம் கவியரங்கங்களே ஆகும். எனது இக்கருத்திற்கு சமீபகாலங்களில் கொழும்பு மாநகரில் கம்பன் கழகம் போன்ற அமைப்புகள் ஒழுங்கு செய்யும் கவியரங்கங்களை உதாரணமாக குறிப்பிடலாம்.

**தமிழ், உங்களது இரண்டாவது மொழி. உங்களது முதலாவது மொழியில் ஏதாவது ஆக்க இலக்கிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறீர்ளா? அந்த மொழியாலான கவிதை இலக்கியங்களுடன் ஈழத்து இலக்கிய கவிதைகளை தொடர்புபடுத்தி ஏதாவது கூறுமுடியுமா?**

எனது தாய் மொழி மேமன் மொழி. அதற்கென்று ஒரு வடிவம் கிடையாது. எனவே அங்கு இலக்கிய வடிவம் கிடையாது. ஆனால் எமது முன்னோர்கள் பயன்படுத்தியது குஜராத்தி மொழி. இது ஓரளவு மேமன் மொழியோடு சம்பந்தப்பட்டது. ஆகவே எமக்கு என ஒரு எழுத்து வடிவம் இல்லாததால் எமது தலைமுறையினர் குஜராத்தி மொழியை கற்பிக்க முனைந்தனர். ஆனால் இலங்கைக்கு குஜராத்தி அந்நியமானது. இதைவிட இலங்கையில் குஜராத்தி மொழி பேசும் வேறு சமூகமும் உண்டு. போரா சமூகமே அச் சமூகம். அது மேமன் சமூகம் அல்ல மற்றும் இலங்கை பாடசாலைகளில் இ[illegible] மொழி கட்டாய மொழியாக இருந்ததால் எம[illegible] இன்றைய சமூகத்திற்கு குஜராத்தி கற்கும் ஆர்வம் காலபோக்கில் இல்லாது போய்விட்டது.

எனவே நானும் குஜராத்தி மொழி கற்க முடியாமல் போய் விட்டது. மற்றும் எந்த ஒரு மேமன் கூட குஜராத்தி மொழியில் இலக்கியம் படைக்கவில்லை. குஜராத்தி கற்றிருந்தால் குஜராத்தி மொழியில் இலக்கியம் பற்றி நான் கூறி இருக்கலாம். எனவே நான் சிந்திப்பது தமிழ், எழுதுவதும் தமிழ் தான்.

**இளம் தலைமுறையினருக்கு யாது கூற விரும்புகிறீர்கள்?**

முதல் ஒரு படைப்பாளி ஆகமுதல் நல்ல படிப்பாளியாக வேண்டும். நீங்கள் எந்த துறையை விரும்புகிறீர்களோ அந்த துறையை பற்றியும் கற்க வேண்டும்.

மற்றும் எதையும் நிராகரிக்காதீர்கள் எல்லாவற்றையும் வாசியுங்கள். உடன்பாடில்லாதவற்றையும் வாசியுங்கள். மேலும் வளர வளர உங்களுக்கு என ஒரு கொள்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். அதை மனதார நேசியுங்கள். அவ்வாறு இருப்பின் உங்களில் இருந்து வெளிவரும் படைப்பும் உங்கள் கொள்கைக்கு ஏற்ற ஜமாதிரியே வெளிவரும்.

## நூல் விமர்சனம்




ஈழத்து தமிழ்ச் சூழலில் புத்தக வெளியீடு என்பது எளுத்தாளரையோ அல்லது பதிப்பாளரையோ மிகவும் கஷ்டத்திற்கு ஆட்படுத்தி விடுகிற ஒரு செயற்பாடாகவே இருக்கிறது. குறைந்தது 200 பிரதிகளாவது வாசகர்களைச் சென்றடைவது முயற்கொம்புக்கு ஒப்பானதே; அதுவும் நமது தமிழ்ச் சூழலில் ஒரு சிற்றிலக்கிய சஞ்சிகையை நடத்துவது பெரும் எதிர் நீச்சல்தான். சிற்றிலக்கிய சஞ்சிகை என்பது விவாதங்களை உருவாக்கி அதற்கான தேடல்களைத் தொடர்ந்து அகலப்படுத்திக் கொண்டே செல்ல வேண்டும். இதன் தொடர்ச்சியான வருகையும் இது எழுப்பும் வினாக்களும் நமது சிந்தனையின் மிக முக்கிய தளங்களாகும்.

ஈழத்தில் சிறு சஞ்சிகைகள் குறிப்பிட்ட காலத்தினுள் வெளிவந்து நின்று விட்டிருக்கின்றன. இது பொதுவாக நமது தமிழ்ச் சூழலில் சிறு சஞ்சிகைகளுக்குரிய இயல்பாகவும் உள்ளது. ஆனாலும் இந்த மரபை உடைத்த சிற்றிலக்கிய இதழ்களும் வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. தமிழகத்திலிருந்து வெளிவரும் இதழ்கள் பல காத்திரமான சிந்தனைகளை முன்வைத்து நமது கலை, இலக்கிய, அரசியல் தளத்தை விரிவுபடுத்தியுள்ளன. ஈழத்திலும் குறிப்பிடத்தக்க ஓரிரண்டு சஞ்சிகைகள் இந்தப் பணியை செய்துள்ளன. ஈழத்திலிருந்து வெளிவரும் மற்ற சஞ்சிகைகள் ஒரு காத்திரமான செயற்பாட்டுத் தளத்தை நமக்குத் தரவில்லை என்பதை நாம் ஏற்றுக் கொண்டு தான் ஆகவேண்டும். ஈழத்து சிற்றிலக்கிய பாரம்பரியத்தில் தொடர்ந்தும் ஒரு பெரும் வெற்றிடமே காணப்படுகிறது. அந்த வெற்றிடத்தை நிரப்பும் பணியை "மூன்றாவது மனிதன்" செய்து வருகிறது என்பது இங்கு பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மூன்றாவது மனிதனின் 8வது இதழ் இப்போது வெளிவந்திருக்கின்றது. ஈழத்து சிற்றிலக்கிய வரலாற்றின் தற்போதைய முகவரியும் முகமுமாக "மூன்றாவது மனிதன்" கொள்ளப்பட வேண்டும். நமக்கு வேறு சிற்றிலக்கிய சஞ்சிகைகள் இப்போது இல்லை. "மறுமலர்ச்சி", "அலை", "அஞ்சலி", "விழுகம்", "நந்தலாலா" இதன் தொடர்ச்சியான வருகை தான் "மூன்றாவது மனிதன்". இதனை நாம் வளர்த்து எடுக்க வேண்டும். எட்டாவது இதழில் ஆசிரியர் இப்படிக் குறிப்பிட்டுள்ளார். "தீவிரமான விடாமுயற்சியின் உழைப்பின் பிரதியீடாகவே ஒவ்வொரு இதழும் வெளிவந்துள்ளன. இதன் வருகைக்குப் பின்னாலிருக்கும் அர்ப்பணத்திற்கு சில நம்பிக்கை தரும் ஆரோக்கியமான விளைவுகளாவது சமர்ப்பணமாகும் என்ற எதிர்பார்ப்பு இதன் தொடர்ச்சியான வருகைக்குப் பின்னுள்ள மிகப் பெரும் ஆதாரமாகும். எழுதாத, சிந்திக்காத, பேசாத நமது சூழலின் இறுக்கத்தையும் தேக்கத்தையும் உடைத்து ஒரு சில தீப் பொறிகளையாவது மூட்டிவிட வேண்டுமென விரும்புகிறது" என்று எழுதியிருக்கிறார்.

இந்த உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு படைப்பைப் பற்றியோ, ஒரு கருத்தைப் பற்றியோ நமது பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் தொடக்கம் நமது படைப்பாளிகள் வரை எதுவுமே பேசுவதுமில்லை, எழுதுவதுமில்லை. ஏதாவது சொல்வதாக இருந்தால் ஒன்று முதுகு சொறிதலாக இருக்கும். அல்லது தனிப்பட்ட தாக்குதலாக இருக்கும். இது சுளையிருக்க தோலைத்தின்ற கதையாகவே நமது ஈழத்து தமிழ்ச் சூழலில் நடந்து வருகிறது. படைப்பைப் பற்றி மிக ஆழமாக பல்வேறு பார்வை சித்தாந்ததளத்தினூடாக அணுகுதல் நமக்கு தடைசெய்யப்பட்ட ஒன்றா? நாம் பேச வேண்டும், எழுத வேண்டும், விவாதிக்க வேண்டும். இதற்கு களம் தருவதற்கு "மூன்றாவது மனிதன்" தயாராக இருக்கிறது என்கிறது. பிறகேன் நமக்கு இந்தத் தேக்கம்? ஒரு சிறு சஞ்சிகையின் வருகையுடன் படைப்பாளிகளினதும் வாசகர்களினதும் பங்களிப்பும் உறவும் இன்றியமையாதது.

மூன்றாவது மனிதன் எட்டாவது இதழில் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் "இலங்கை அரசியற் சூழலில் தமிழ்த் தேசியம்" என்ற கட்டுரை விவாதங்களை எழுப்பக் கூடியது. அவர் இக்கட்டுரையில் மிக அடிப்படையாகச் சொல்லப்பட வேண்டிய விடயங்களை எழுதியுள்ளார். ஆனாலும் தமிழ்த் தேசியம் என்பது இன்று ஈழத்து அரசியல் இராணுவவாதச் சூழலில் ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்டு நிற்கும் போது அது பல்வேறு பரிணாமங்களைப் பெற்றுள்ளது. அது பற்றிய விரிவான எழுத்துத்தான் தமிழ்த் தேசியம் பற்றிய புரிதல்களை ஏற்படுத்தும். பேராசிரியர் சிவத்தம்பி தலித் பற்றி சொன்ன கருத்துக்களுக்கு எதிர்வினையாக பேராசிரியர் சிவசேகரம், சி. யோதிலிங்கம் ஆகியோர் எழுதியுள்ள எதிர் வினைகள் இங்கு முக்கியமாக பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகிறது. இந்த எதிர் வினைகள் தான் பேராசிரியர் சில விடயங்களை நமக்கு விவாதத் தளத்திற்கு கொண்டு சென்றிருக்கிறது. துப்பாக்கிகளின் நிழலில் சாதியம் அழியவில்லை. மறைந்திருக்கிறது என்பது மிக முக்கியமானது. என்.கே. ரகுநாதனின் கந்தன் கருணை நாடகம் மூன்று தசாப்தங்களுக்குப் பிறகு மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது மிக முக்கியமானது. சாதிய அடக்குமுறை காலவதியான ஒன்றல்ல என்பது இன்றும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

நேர்காணல்களாக கவிஞர் சோலைக் கிளியினதும் செ. யோகநாதனினதும் நேர்காணல்கள் இடம்பெற்றுள்ளன. சோலைக்கிளி ஈழத்து நவீன கவிதையின் மிக முக்கியமான கவிஞர். அவர் பல விடயங்களைப் பற்றிப் பேசவில்லை. நேர்காணல் செய்த உமா வரதராஜனின் பங்கும் இதில் முக்கியமாகிறது. ஆனாலும் அவரது கவிதைகளின் அடிப்படையில் அவர் முக்கியமானவரே. செ. யோகநாதன் நீண்ட காலமாய் விடாது எழுதி வருபவர். பல்துறை சார்ந்து ஈழத்து தமிழ் இலக்கியத்திற்கு பங்களிப் பாற்றியுள்ளவர். ஆனாலும் தமிழர்களது அரசியலுடன் அவர் சொல்லும் கருத்துக்கள் 70க்கு முந்தி ஓரளவு சரியென வாதித்திருக்கலாம். இன்றைய காலகட்டத்தின் தளத்தில் இலங்கை மார்க்ஸிஸம் தொடர்பாகவோ, இலங்கை இடதுசாரிகள் தொடர்பாகவோ நெஞ்சை நிமிர்த்திப் பேசுவது மிகப் பெரும் அபத்தமாகும். செ. யோகநாதனுடைய அரசியல் அதுவாக இருந்தாலும் தமிழ் மக்களின் அரசியல் அதுவல்ல என்பதை யோகநாதன் உணர்ந்தால் சரி. மற்றப்படி மாற்றுக் கருத்தின் அடிப்படையில் அவருக்குள்ள உரிமையை அவர் பயன்படுத்தியுள்ளார். மற்றும் எம்.கே.எம். ஷகீபின் "அம்மா" என்ற மொழிப்பெயர்ப்புக் கவிதை தொப்புள் கொடியின் உன்னதத்தை நமக்கு உணர்த்துகிறது. ஷகீபின் மொழிப்பெயர்ப்புக்கள் அவ்வளவு வீச்சானது அல்ல. அவர் மொழி பெயர்த்த கவிதைகள் சிறுகதைகளை விட இச் சிறகதையை ஓரளவு வீச்சாகவே மொழி பெயர்த்துள்ளது அவரது வளர்ச்சியைக் காட்டுகிறது. இன்னும் ஷகீப் மொழிபெயர்ப்பில் ஆழக் காலூன்ற வேண்டும். நஸீறுதீனின் சிறுகதை நமது ஈழத்துத் தமிழ்ச் சூழலில் எஸ். பொன்னுத்துரையை நினைவூட்டுகிறார். இவ்விதழில் பல கவிதைகள் இடம்பெற்றுள்ளன. எஸ்போஸின் இரண்டு கவிதைகளும் மறுபடியும் வாசிக்கத் தூண்டுகின்றன. உமாவரதராஜனின் பத்தி எழுத்தில் நம்மீது அங்கங்கு சில கேள்விகளை எறிந்து விடுகிறார். இது பற்றிய தொடர்ச்சி நம்மைப் பொறுத்ததே. சுந்தர ராமசாமியின் கட்டுரை அவரைத் தெரியாத வாசகர்களுக்கு அவர் பற்றிய பார்வையை ஏற படுத்தும்.

எட்டாவது இதழில் வந்துள்ள ஜற்[illegible]தாஸின் அட்டைப்படம் விவாத[illegible]தை ஏற்படுத்தியுள்ளது. இது முக்கியம[illegible]னது. கலையை எப்படி ஆபாசமாகப் பார்க்கலாம்? ஆபாசத்தை கலையாக்கலாமா? இது ஏலவே எழுப்பப்பட்ட வினாக்கள் தான். ஆனாலும் இவ் வினாக்களுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை. இதற்கான விடையைத் தேடுவதற்காக வேண்டியாவது நாம் இது பற்றிப் பேசவேண்டும். மற்றும் எட்டாவது இதழில் சில போதாமைகளும் உள்ளது தான். இப் போதாமைகள் நமது ஈழத்து தமிழ்ச் சூழலை சார்ந்தது தான். ஆகவே எதிர்காலத்திலாவது நாம் இப்போதமைகளை நிவர்த்திப்போமாக!

**அன்னக்கிளி**

தொடர்புகளுக்கு.....
ஆசிரியர், எம். பௌஸர்,
53, வொக்ஷேல் லேன்,
கொழும்பு-02.

# கனவாகிப் போன நிஜங்கள்



"என்ன இந்த பஸ் இன்னும் போகுதில்ல; எட்டு மணிக்கு பஸ் ஸ்ராண்டுக்கு வந்தனான்; ஒரு ரூபாக் காசை மிச்சம் பிடிக்கிறதுக்காக வந்த வேன் எல்லாத்தையும் போக விட்டு, எட்டு நாற்பத்தைஞ்சுக்குக், கடைசியாக வந்த பஸ்ஸப் பிடிச்சாச்சு. ஆனா இந்த பஸ்ஸும் வெளிக்கிட்ட பாடில்லை.... "என்று மனச்சஞ்சலப்பட்டவாறு, மீனா பஸ்ஸின் ஜன்னல் ஓரத்தில் நின்று கொண்டிருந்தாள்.

மீனாவின் குடும்பம் வறியது. அவளுக்கு இரண்டு தங்கைகள் மட்டும் உள்ளனர். அவள் விஞ்ஞானப் பிரிவில் உயர்தரம் வரை படித்துவிட்டு, தன் குடும்பக் கஷ்டத்தைப் போக்குவதற்காக வேலை தேடிக் கொண்டிருக்கின்றாள். இன்று இந்த வேலை விடயமாகத் தான் ஒரு நேர்முகப் பரீட்சைக்காக மட்டக்களப்பிற்குப் போய்க்கொண்டிருக்கிறாள்.

எனக்கு எப்படியாவது இந்த வேலையாவது கிடைச்சிடவேணும். என்னைக் கம்பஸ் வரையும் படிப்பிக்க வேணும் என்று, அம்மா எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறா. என்ற தலைவிதி மூன்று மாக்ஸில் தட்டுப்பட்டிற்றன். வேல தேடித் திரிஞ்சு எத்தனையோ இன்ரவியூக்களிலும் தட்டுப்பட்டிருக்கிறன்; இதிலயும் தட்டுப்படனென்டால், எங்கயாவது நல்ல அனாதை மடமாத்தான் பார்க்க வேணும்.....! அட ஒன்பது மணியாச்சுது; இப்பதான் பஸ் வெளிக்கிடுது."

ஓடிக் கொண்டிருக்கும் பஸ்ஸின் ஜன்னல் வழியாக காய்ந்து வறண்டு கிடக்கும் வயல் வெளியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் மீனா. அவளுடைய நோக்கமெல்லாம் தன்னுடைய இரு தங்கையரையும் நன்றாகப் படிப்பித்து, உயர்ந்த நிலையில் உருவாக்க வேண்டும் என்பது தான், நகைக் கடையில் கூலிக்கு வேலை செய்யும் அவளின் தந்தையின் சம்பளப் பணம் அவருடைய மதுபானச் செலவுக்கு மட்டுந்தான் போதுமானதாக இருக்கின்றது. அவளுடைய தாய் தான் மட்பாண்டங்கள் செய்து, அவற்றை விற்று பணத்தைக் கொண்டு தான் தங்கள் அன்றாடச் சீவனோபாயத்தைக் கவனித்து வருகின்றாள். ஒரு எதிர்காலத்தின் ஒளி தேடி, இருள் நிறைந்த பாதையின் ஊடாக, அந்த ஜீவன்கள் பயணித்துக் கொண்ருக்கின்றன.

இன்டைக்கு அரிசி வாங்க வைச்சிருந்த காசைத்தான் என் பஸ் செலவுக்குத் தந்திட்டா; இன்றைக்கு அம்மா என்ன செய்யப் போறாவோ தெரியாது.... அப்பாவின் சண்டித்தனங்கள் இன்டைக்கும் தொடருமோ....? அப்பாவின் நிலையை மாற்ற முடியாதா...? எனக்கு இந்த வேலை மட்டும் கிடைச்சிட்டா....."

"நானும் கனநேரமா பார்த்துக்கொண்டிருக்கிறன் என்ன பிள்ள யோசிக்கிற" மீனாவின் அருகிலிருந்து வந்த ஓர் பெண்ணின் குரல் அவள் சிந்தனையைக் குழப்பிற்று.

ஆ.... அன்ரி நீங்களா....? நான் கவனிக்கவேயில்லை. என்ன மகள் வேலைக்கே போற...?

இல்ல அன்ரி வேலைக்கான இன்ரவியூக்குத் தான் போறன் என்ன வேலைக்கு மகள்...?

"கிளார்க் வேலைக்கு அன்ரி!"

உன்ற அம்மா எவ்வளவு கஷ்டப்பட்டு உன்னப் படிப்பிச்சா. அதுக்காகவாவது, உனக்கு இந்த வேலை கிடைக்கனும். உன்ற அப்பா இனியாவது திருந்தி, ரெண்டு குமர்ப் புள்ளைகள கரை சேர்க்கிற பொறுப்ப உணர வேணும்.

"இந்தச் சமூகம், பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வாக கரைசேர்ப்பது பற்றித் தான் கனவு காண்கின்றது ஒழிய நடைமுறையில் அவர்களுடைய திறமைகளைப் பயன்படுத்தி, சமூகஜீவிகளாக வாழவிட மறுக்கின்றது. மீனாவின் சிந்தனை இவ்வாறு ஓடியது.

பிள்ள செக்கிங் பொயின்ற் வந்திட்டுது. கையில ஐடன்ரிக் காட்டை எடுத்துக் கொள். அன்ரி எச்சரித்தாள்.

ஐயோ அன்ரி, சரியா நேரம் போகுது, எத்தனை மணிக்கு நான் போய்ச் சேருவனோ தெரியாது. இவ்வளவு சனத்தையும் செக் பண்ணுரதென்டா, 30 நிமிடமாவது எடுக்கும்.... கடவுளே என்ற இன்ரவியூ....! வாய்விட்டுச் சொன்னாள் மீனா.

"அம்மா... பிச்சை போடுங்க" என்றாவறு ஓர் ஏழைச் சிறுவன் பிச்சைப் பாத்திரத்தை முன்னே நீட்டினான். அந்தப் பிச்சைப்பாத் திரத்தில் உள்ள சில்லரைக் காசுகளை தன் கலங்கிக்கொண்டிருந்த கண்களால் கூர்ந்து பார்த்தாறே; தன்னிடம் மிஞ்சியிருந்த பத்து ரூபாவினைத் தனது பேசுக்குள் மறைத்துக்கொண்டாள் மீனா.

பஸ் புறப்பட்டது. நேரமும் நெருங்கிவிட்டது. கலோ மீனா என்றவாறு, அவளின் பழைய நண்பியான கலா நவநாகரீக நங்கையாக அருகில் நின்றிருந்தாள். முன்பு எளிமையான பண்புடன் காணப்பட்ட நண்பி கலா நல்ல இதயத்தை அள்ளி வீசுகின்ற வியாபாரியாய் மாறியிருப்பதை எண்ணி மீனா துயர் கொண்டாள்.

"எங்க பயணம் கலா....?" மீனா விசாரித்தாள்.

"மட்டக்களப்பில் ஒரு இன்டர்வியூக்குப் போறன்"

அட, நானும் அங்கதான். அது சரி நீ வேலை செய்து கொண்டு தானே இருக்கிறாய். அது நல்ல வேலையே! இது ஏன் உனக்கு? மீனாவின் கண்களில் ஆச்சரியமான நிலையே தெரிந்தது. கலா பரிகாசமாக, அதவிடு மீனா, எல்லாம் பொழுது போக்குத்தான்..... கொஞ்சக்காலம் அந்தவேலை..... இப்ப! கூறினாள்.

"பொழுது போக்குக்காக....? மீனாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. இவர்களைப் போன்றவர்களால் தானே, எங்களைப் போன்றவர்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் எல்லாம் தட்டுப்பட்டுப் போகுது..."

"பிள்ளை மீனா, எந்த இடத்தில் இறங்கப் போற...."

"பஸ்டிப்போவடியில அன்றி"

"இந்தா பஸ்டிப்போ கழிஞ்சிட்டுது...."

"ஐயோ வெல்லடியுங்கோ...." என்று கூறியவாறே பஸ்ஸின் வேகம் குறைந்ததும் இறங்கிக்கொண்டாள். அவளது இடதுகால் செருப்பு அறுந்துவிடவே, பொருட்படுத்தாது, இம் முறையாவது வேலை கிடைக்கவேண்டும் என்ற நம்பிக்கையுடன் நடக்கிறாள் மீனா; எதிர்பார்ப்புக்கள் யாவும் நடைமுறையாவதில்லையே!

**S. சுதாகரி**

# வடக்கு கிழக்கு இன்றைய நோக்கு

**பரமேஸ்வரி**

வடக்கில் யாழ்ப்பாண குடாநாட்டில் ஒரு சில தினங்களுக்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் 3ன் 12ம் கட்டம் முடிவடைந்து சங்கே முழங்கு யுத்த நடவடிக்கை ஆரம்பித்து விட்டது.

ஆணையிறவு படைத்தளத்தின் பாரிய வீழ்ச்சியின் பின்பு ஆணையிறவை அண்டிய பகுதிகளையும் படையினர் புலிகளிடம் இழந்தனர். தொடர்ச்சியாக பல பிரதேசங்களை புலிகளிடம் படிப்படியாக இழந்தபடையினர் தென்மராட்சியின் பிரதான நகரான சாவகச்சேரியையும் இழந்து, மறுபக்கம் நாவற்குழி கைத்தடிப்பகுதிகளின் பெரும்பகுதியையும் இழந்து மீசாலை, சரசாலைப்பகுதிகளை தக்கவைப்பதற்கு போராடுகின்றனர். இன்னொரு பக்கம் யாழ் நகரின் கரையோரமாக கொழும்புத்துறை மணியந்தோட்டம், பாசையூர் அரியாலையின் ஒரு பகுதி என்பனவும் படையினரிடம் இருந்து பறிக்கப்பட்டு விட்டன.

1995களின் பிற்பகுதியில் படையினரிடம் இழந்த யாழ்பாணத்தை எப்படியாவது மீட்க வேண்டும் என்பதில் புலிகளும் பல இழப்புகளின் பின்பு புலிகளிடம் இருந்து கைப்பற்றிய யாழ்குடாவை அங்கு நாட்டிய கொடியை என்ன விலை கொடுத்தாவது தக்கவைப்பது என்பதில் அரசும் விடாப்பிடியாக உள்ளன. இரண்டு தசாப்பதங்களுக்கு மேற்பட்ட கால யுத்தத்தில் ஈடுபட்டுள்ள படையினரதும் புலிகளினதும் கௌரவ சின்னமாக யாழ்பாணமே விளங்குகின்றது. இலங்கைத் தமிழர் பிரச்சினை என்றால் உலகின் கண்களும் யாழ்ப்பாணத்தின் மீதே வீழ்த்தப்படுகிறது.

யாழ்பாணத்தை தக்கவைப்பதற்காக இருபகுதியினராலும் மேற கொள்ளப்படும் உக்கிர மோதலில் மக்களின் நிலைதான் வேதனைக்கு உரியது.

1995ல் படையினர் யாழ்ப்பாணத்தை கைப்பறிய போது குடாநாட்டு மக்கள் இடம் பெயர்ந்தனர் என்று கூறுவதை விட குடாநாடே குடிபெயர்ந்தது எனக் கூறுபது தான் பொருத்தமானது.

இரண்டு தசாப்த்தத்திற்கு மேற்பட்ட யுத்தத்தில் முன் முறையாக பிரதேசம் விட்டு பிரதேசம் மக்கள் பெட்டி படுக்கையுடன் புறப்பட்டனர். அது அவர்களது முதல் அனுபவம். அதனால் அவர்கள் அடைந்த துயரங்கள் அளவு கடந்தவை.

அன்று அவ்வாறுமக்கள் குடிபெயர்ந்து சென்ற போதும் படையினர் யாழ்பாணத்தைதைக் கைப்பற்றிய போதும் ஏற்பட்ட விளைவுகளே செம்மணி புதைகுழிகளும் துரையப்பா விளையாட்டு அரங்கில் கண்டெடுத்த எலும்புக் கூடுகளும், மேலும் பலரது காணாமல் போதலும் கிருஷாந்தி குமாரசுவாமி றாஜினி போன்ற பெண்கள் மீதான பாலியல் பலாத்காரத்துடன் கூடிய கொலைகளும் ஆகும்.

இவ்வாறு துயரங்களின் உச்சியைத் தொட்ட மக்கள் 8 வருடங்களின் பின் மீண்டும் துயர விழிம்பிற்கே தள்ளப்பட்டு உள்ளனர். அன்று புலிகள் பின்வாங்கிச் சென்றதனாலும் மக்களின் குடிப்பெயர்வினாலும் இழப்புகள் இரந்தாலும் அவற்றை கட்டுப்படுத்த முடிந்தது. ஆனால் இன்று மக்கள் இடம் பெயரக் கூட முடியாமல் தடுக்கப்பட்டு மனித கேடயங்கள் ஆக்கப்படுகின்றனர்.

யுத்தத்தில் ஈடுபட்டு உள்ள ஒரு பகுதியினர் மக்களை வெளியேறும் படி கேட்கிறார்கள். ஒரு பகுதியினர் வெளியேற வேண்டாம் என்கிறார்கள். வெளியேறினால் தாக்குவோம் என்கின்றனர். ஒரு பகுதியினர் வெளியேறாவிட்டால் தாக்குவோம் என்கின்றனர். மறு பகுதியினர் மொத்தத்தில் குடாநாட்டு மக்களுக்கு மிஞ்சியது இருபகுதி தாக்கமே. யுத்தத்தில் ஈடுபட்டுள்ளள இருபகுதியினராலும் ஏற்படும் எறிணைகளாலும் ஆகாயமார்க்க தாக்குதல்களாலும், துப்பாக்கி வேட்டுகளாலும் ஒவ்வொரு கணமும் தமது வாழ்வின் மீதான நம்பிக்கையை மீளாய்வு செய்த வண்ணமே மக்கள் உள்ளனர்.

இதுவரையிலான யுத்தத்தால் தென்மராட்சியில் மட்டும் 87 போர் கொல்லப்பட்டு 246 போர் காயம் அடைந்து உள்ளதாக யாழ்ப்பாண செய்திகள் தெரிவிக்கின்றன. காயம் அடைந்தவர்கள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தெல்லிப்பனை, மல்லாவி, வவுனியா வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். தவிரவும் ஏனையபகுதி தாக்குதல்களிலும் இன்னும் பலர் கொல்லப்பட்டும் பலர் காயம் அடைந்தும் உள்ளனர். யாழ் நகரில் பிறப்பிக்கப்படும் திடீர் ஊரடங்கு சட்டங்களாலும் காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை மட்டுமே தளர்த்தப்படும் ஊரடங்கு சட்டத்தாலும் குடாநாட்டின் உயிர்நாடியான யாழ் வைத்தியசாலையும் சீராக இயங்க முடியாது உள்ளது. இந்த யுத்த வேதனைகளில் ஒன்று தான் கைதடி வயோதிபர் இல்ல வயோதிபர்களின் மரணங்கள். அவை பலரது மனங்களை உருக்கிய மரணங்கள்.

அன்று கைதடியை நோக்கி முன்னேறிய புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் கடும் சண்டை வெளியேறக் கூடியமக்கள் அனைவரும் கைதடியை விட்டு இடம்பெயர்ந்து விட்டனர். பற்றற்ற துறவற வாழ்வை கடக்க முயலும் வயோதிபரால் ஓடவா முடியும் அவன் செயலாலே அவன் தாழ் வணங்கி என சும்மாய் இருந்து விட்டனர். யுத்தத்தின் ஒருவர் அகப்பட்ட வயோதிபர்களுக்கு நடந்தது என்ன என்பத ஒருவருக்கும் புரியாததாயிற்று.

அதனால் திகில் அடைந்த மனிதநேய அமைப்புகள் வயோதிபர் இல்ல வயோதிபர்களை காயவில்லை என சர்வதேச மனிதாபிமான அமைப்புகளுக்கு முறையிட்டு அவர்களை மீட்டுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர். ஆனால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதில் 15 போர் கொல்லப்பட்டு 35 பேர் காயம் அடைந்தனர் என்பதே ஆகும்.

பற்றற்ற துறவற வாழ்வு வாழ்ந்த அந்த வயோதிபர்கள் மண்மீதோ அன்றி பொன் பொருள் மீதோ ஆசை கொண்டு இருக்க நியாயம் இல்லை. முற்றும் துறந்த துறவற வாழ்வை வாழ்ந்த அவர்களுக்கு யுத்தம், விடுதலை துப்பாக்கி, ஏறிகணை, வானூர்தி, விமானங்கள் பற்றியோ அவற்றின் பிரதி விளைவுகள் பற்றியோ தெரிந்து இருக்க நியாயம் இல்லை. ஆனால் அந்த ஏறிகணைகள் அவர்களையும் பலி கொண்டது. இப்படி எத்தனை எத்தனை ஆயிரம் மக்களின் உயிர்களை யுத்தம் பலி கொள்கிறது.

இவ்வாறே கிழக்கிலும் புத்த பெருமானின் வெசாக் தினத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பும் பலரை பலி கொண்டும காயப்படுத்தியும் இருந்தது. அன்றும் ஒன்றுமே அறியாத அயித்திய மலை சிறுவர் இல்ல சிறார்கள் சிலர் கொல்லப்பட்டு பலர் காயம் அடைந்தனர். தாயை இழந்த அல்லது தந்தையை இழந்த அனாதை சிறுவர்கள் வெசாக் பந்தல்களை பார்வையிட வந்தபோது ஏற்பட்ட குண்டு வெடிப்பும் அதன் பின் ஏற்பட்ட துப்பாக்கிச் சூடுகளும் அவர்களை பலி எடுத்தன. இவை வடகிழக்கின் யுத்தக் கொடுமைகள் சேபுறம் பொருளாதார நெருக்குதல்களினால் மக்கள் படும் இன்னல்களை எழுத்தில் அடக்க முடியாது. யுத்ததின் பின்பு ஏற்பட்ட ஆகாய கடல்மார்க்க போக்குவரத்துகளின் தடங்களினால் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. எரிபொருட்கள கூட்டுறவு சங்கங்களினூடாகவே பங்கிட்டு அடிப்படையில் வழங்கப்படுகிறது. நிவாரணப் பொருட்கள் மக்களை விரைவாக சென்றடைவதில்லை. ஒரு மணித்தியாலத்திற்கு மட்டுமே மின் இணைப்பு வழங்கப்படுகிறது. எரிபொருள் மின்சாரம் இன்மையால் விவசாயிகள் விவசாயத்தை மேற கொள்ள முடியாது உள்ளனர்.

வங்கிகள் மட்டுப்படுத்திய சேவையினையே வழங்குகின்றன. ஒரே தடவையில் 5000 ரூபாவுக்கு மேல் பணத்தைமீள பெற முடியாது குடா நாட்டில் இருந்து முன்பு போல் தொலைத்தொடர்பு பரிவர்த்தனை வசதி இன்மையால் தென்பகுதி வங்கிகளில் இருந்து தொலைநகல் பண பரிமாற்றமும் தடைபட்டு உள்ளது. தபால் சேவையும் சீர்குலைந்து உள்ளன.

பாடசாலைகள் பல இடம பெயர்ந்த பகுதி பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டு இயங்குகின்றன. கடந்த வார இறுதியில் யாழ் நகர பாடசாலைகளில் 18 வீதவரவே காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. யாழ்பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ற பிற மாவட்ட மாணவர்கள் குடா நாட்டை விட்டு வெளியேறி விட்டனர். யாழ்பல்கலைக் கழகம் பெயரளவிலேயே செயற படுகிறது. யுத்த பீதியிலும் பொருளாதார நெருக்கடியிலும் மாணவர்களுக்கு கல்விகறகும் சிந்தனை இருப்பதற்கு சாத்தியம் உண்டா? மொத்தத்தில் யாழ்பாண மக்கள் இன்றைய பொழுது இப்படிக் கழிந்தது என்ற நோக்கத்துடன் மட்டுமே நித்திரைக்கு செல்கின்றனர். இடிந்த கட்டிடங்களும் உயிர்களும் சூறையாடப்பட்ட உடமைகளும் தொலைந்து போன மனிதர்களும் யுத்தத்தின் ஓயாத சத்தங்களுமே அவர்களது நினைவுகளை நாளாந்தம் மீட்டுவனவாக உள்ளன.


அனைத்து வழிகளிலும் வெளித் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட யாழ் குடாநாட்டு மக்களின் உடல் உள பாதிப்புகளின் வடுக்களே. இன்றைய வடகிழக்கு நிலமைகளுக்கு சாட்சி அளிப்பனவாக இருக்க முடியும்.



> படையினர் யாழ்பாணத்தைதைக் கைப்பற்றிய போதும் ஏற்பட்ட விளைவுகளே செம்மணி புதைகுழிகளும் துரையப்பா விளையாட்டு அரங்கில் கண்டெடுத்த எலும்புக் கூடுகளும், மேலும் பலரது காணாமல் போதலும் கிருஷாந்தி குமாரசுவாமி றாஜினி போன்ற பெண்கள் மீதான பாலியல் பலாத்காரத்துடன் கூடிய கொலைகளும் ஆகும்.

# குடா நாட்டில் தொடரும் போரும் இந்திய வெளியுறவு அமைச்சரின்வருகையும்





இலங்கையின் நீண்டகால போர் நடவடிக்கையில் முன்னொரு போது மில்லாதளவிற்கு மிகவும் உக்கிரமான போர் நடவடிக்கைகளை எட்டியிருந்தும் யாழ்குடா நாட்டின் இன்றைய நிலைமையில் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான போக்குகளில் இலங்கையின் அரசியல் நிகழ்வுகளில் பல்வேறு திடீர்மாற்றங்களும் தேசிய நலன் என்ற போர்வையில் வெளிக் கொணர ப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் தொடரும் போர் நடவடிக்கை மற்றும் தலைநகர் கொழும்பில் ஆளும்கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான சி.வி. குணரத்னா மீதான தற்கொலை தாக்குதல் சம்பவம் போன்ற நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் வெளியுறவு அமைச்சர் ஐஸ்வந்த்சிங்கின் இலங்கைக்கான இரு நாள் விஜயம் பல்வேறு ஊடகங்களை வெளிக்காட்டி நிற்கிறது.

அயல் நாடான இந்திய இலங்கையின் உள்விவகாரங்களில் வரலாற்றுக்காலம் தொட்டே தனது சமூக கலாசார படைபல ஆதிக்க ஆளுமையை வெளிக்காட்டி வந்துள்ளது.

பிரிட்டிஷ்காரர்கள் இலங்கையை விட்டு வெளியேறியதற்கு பின்னரான காலம் தொட்டு பேரினவாதப் போக்குகளால் கூர்மையடைந்த முரண்பாடுகளையடுத்து தோன்றிய இனநெருக்கடி விவகாரங்களில் இந்தியா பல்வேறு வகையான போக்குக ளையும் மேலாதிக்க மனோநிலையையும் வெளிக்காட்டி வருவதை சகலரும் அறிவர்.

1987 இல் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் கைச்சாத்திட்ட இலங்கை இந்திய ஒப்பந்தமும் அதற்கு பின்னரான இருவருடங்கள் இலங்கையில் நிலை கொண்டிருந்த இந்தியப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமி டையிலான மோதல்களின் கசப்புணர்வுகள், ராஜீவ்காந்தி மீதான தற்கொலைத் தாக்குதல் என்பன இலங்கைத் தமிழர்கள் மீதான நிலைப்பாட்டில் இந்தியாவும் தமிழக மக்களும் வெறுப்பான ஒரு நிலைப்பாட்டையே கையாண்டு வந்தனர்.

ஆனர் அண்மைக்காலமாக குடாநாட்டை நோக்கி விடுதலைப்புலிகளால் மேற கொள்ளப்பட்ட ஓயாத அலைகள் 3 தாக்குதல் நடவடிக்கைகளையடுத்து இலங்கையின் இர ாணுவ வல்லமை பொருந்திய முக்கியத்துவம் வாய்ந்த குடா நாட்டின் பிரதான நுழைவாயிலின் கேடயமான ஆனையிறவு படைமுகாம் மீதான வீழ்ச்சி, அதற்கு பின்னர ான குடாநாட்டை நோக்கிய புலிகளின் நகர்வு இலங்கையின் இன்றைய நெருக்கடி நிலைவர ம் என்பன கடந்த10 ஆண்டுகளாக தமிழகத்தில் தொடர்ந்து இலங்கைத் தமிழர்கள் மீதான கசப்புணர்வை பெரும்பாலும் மாற்றியமைந்துள்ளது குற ிப்பிடத்தக்கது.

அதே நேரம் இந்திய மத்திய அரசின் பங்காளிக் கட்சிகளான வைகோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம். ராமதாசின் பாட்டாளி மக்கள் கட்சி என்பன இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தீவிர ஈடுபாடுள்ள கட்சிகளாகும். இதற்கு அப்பால் தமிழகத்தின் பெரும்பாலான கட்சிகள் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தமது முன்னைய அரசியல் நிலைப்பாட்டிலிருந்து வேறுபட்ட போக்கையே இன்று எடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதற்கெல்லாம் அப்பால் இலங்கையின் இன்றைய நெருக்கடிக்கு இந்தியா இர ாணுவரீதியான எந்த நடவடிக்கையினையும் மேற்கொள்ளாது என்ற இந்தியாவின் நிலைப்பாடும், இந்திய வெறியுறவு அமைச்சர் ஐஸ்வர்சிங்கின் இலங்கைக்கான திடீர் விஜயமும் இன்றைய இனநெருக்கடி விவகார த்தில் ஏதேனும் மாற்றங்களை, அரசியல் நகர்த்தல்களை தோற்றுவிக்கலாமென்ற போதிலும் அதுவே இலங்கைத் தமிழர்களுக்கான முடிவான முடிவாக ஒரு போதும் இருக்கப் போவதில்லை என்ற உண்மை நிலைவரம் பலருக்கு கசப்பாகவுமிருக்கலாம்.

இந்தியா எப்போதும் தன்னுடைய பிர ாந்திய மேலாதிக்க நலன்களிலிருந்து விடுபட்டு இலங்கைத் தமிழர்களின் துயரங்களிலோ அல்லது இலங்கையின் இன்றைய நெருக்கடிமிக்க நிலைமைக்கோ தன்னை ஒரு போதும் தாரைவார்க்காது. ஏனெனில் இலங்கைத் தமிழர்களின் மிதவாத அரசியல் நடவடிக்கைகளை முற்றிலும் மாற்றியமைந்த ஆயுதப் போராட்டத்திற்கு களம் அமைத்துக் கொடுத்த அதே இந்தியா 1987 இல் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் இயக்கங்களின் ஆயுதங்களைக் களைந்து இலங்கை இந்திய ஒப்பந்தத்தை உருவாக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்கு அப்பால் ஜே. ஆர். அரசுக்கு ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழ் இயக்கங்களின் நெருக்கடிகளை முடிவுக்கு கொண்டு வந்ததுடன் இந்தியப்படைகளுக்கு எதிராகவே மோதல்களையும் உருவாக்கத் தூண்டியதெனலாம்.

முன்னைய கசப்புயர்வுகளுக்கு அப்பால் மீண்டும் இந்தியா இலங்கையின் இன நெருக்கடிப் போக்குகளில் உள் நுழைந்திருப்பது எதிர் வரும் நாட்களில் அர சியல் நிலைவரங்களில் பல்வேறு மாற்ற ங்களுக்கு வழிவகுக்கலாமென்றே கருதப்படுகிறது.

அதேவேளை இலங்கையின் பிரதான பேரினவாதக்கட்சிககளான ஆளும் பொதஜன இந்திய முன்னணியும் எதிர்க்கட்சியான ஐ.தே கட்சியும் இனநெருக்கடி தொடர்பான விடயங்களில் சாடிக்குலாவி பேசிய போதிலும் ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியாத நிலையிலேயே காலம் கடத்துகின்றன. இது தொடர்பாகவும் இந்தியா வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கா, ரணில் விக்ரம சிங்கா ஆகியோருடனான சந்தப்புகளின் போது எடுத்துரைத்தாலும் அரசியல் வட்டார ங்களிலிருந்து தெரியவருகிறது.

இதே வேளை குடாநாட்டில் போர் முன்னெடுப்புகள் மேலும் உக்கிரமடையும் போர் முன்னெடுப்புகள் மேலும் உக்கிர மடையும் அறிகுறிகளே தென்படுவதாகவும் அங்கு சிக்குண்டிருக்கும் 5 இலட்சம் பொதுமக்களின் நிலமை மிகமோசமாகிக் கொண்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர் நடவடிக்கைகள் உக்கிரமானால் குடாநாட்டில் பெரும் மனித அவலங்கள் தோன்றலாமென்றும் முன்னொரு போதும் இடம்பெற்றிராத அழிவுகள் ஏற படலாமென்றும் தெரியவருகின்றது. இர ாணுவ வலிமைகளுக்கு அப்பால் போரில் ஈடுபடும் இருதரப்பினரும் குடாநாட்டில் சிக்குண்டிருக்கும் மக்கள் தொடர்பாக அக்கறை செலுத்துவார்களா என்பது கேள்விக்குரியதே ஏனெனில் அங்குள்ள மக்கள் மனிதக்கேடயங்களாக பயன்படுத்தப்பட்ட பல சம்பவங்கள் வெளிக்கொள்ளப்பட்ட உண்மை நிலைவரமாகும்.

போர் நடவடிக்கைகள் ஒரு போதும் விடிவைத்தரப் போவதில்லை. அரசியல் தீர்வுகளுக்கான நகர்த்தல்களை நோக்கி நகர த் தாமதிக்க தவறும் ஒவ்வொரு கணங்களும் இந்த நாட்டின் எதிர்கால சமூகத்தின் அழிவுகளுக்கே வழிவகுக்கும்.

**செந்தணல்**

ICM ENGLAND

## 2000ம் ஆண்டில் அணைவருக்கும்

இந்த நூற்றாண்டில் வாளும் யாவருக்கம் வயது வித்தியாசமினறி கணனி அறிவு அவசியம் கொழும்பு Asian Computer Systems நிறுவனமும் Asial ICM (Institute of Commercial Management) உயர் கல்வி நிலையமும் இணைந்து

எமது கணனி. கணக்கியல் பாடநெறிகள் யாவும் இங்கிலாந்து ICM U.K நிறுவனத்தால் நேரடியாக அங்கீகாரம் அளிக்கப்பட்டதுடன் பல பல்கலைக்கழகஙகளில் உயர் கல்வி அனுமதி தராதரமாகவும் ஏறறுக்கொள்ளப்படுகிறது

# U.K.DIPLOMA COURSES

Approved Training and Examination Center for ICM, ACP United

SPECIAL OFFER

NO !
U.K.Registration
U.K.Exam Fee

தீர்மானம் ⟷ உங்களது

Free
Study Packs, Training,
Guide + Projects
One Storage Media on Enrolment

*MS OFFICE 2000*
*with INTERNET & E-MAIL*
*(Diploma in Computer Applications)*

Information Technology
Microsoft Windows 98
Microsoft DOS 6.22
Microsoft Word 2000
Microsoft Excel 2000
Microsoft P.Point 2000
Microsoft Access 2000

Rs.4,750 only

Internet, E-mail Training

7 Years of dedicated coaching

*Are You Working ?*

*Night Session All Courses*

*Batch 1 6.30 - 8.00 p.m*
*Batch 2 8.00 - 9.00 p.m*
*Monday to Saturday*

*Suitable Time Table Could be Arranged*

| | |
|---|---|
| Diploma in Desktop publishing (Typesetting) | Free Study Pack |
| Diploma in Programming Visual Basic 6 | Free Course Manual |
| Diploma in JAVA Programming with HTML | Free Study Pack |
| Internet & E-mail Training Programming | Free Course Manual |
| Diploma in Web Technology with HTML | Free Study Pack |
| Diploma in Computerised Accounting | Free Course Manual |
| Diploma in Hardware Engineering | Free Study Pack |
| Diploma in Business English | Free Study Pack |
| Diploma in Information Technology | Free Study Pack |
| Diploma in Software Engineering | Free Course Manual |

புலமைப்பரிசில்கள் போட்டிப்பரீட்சைக்காக காத்திருக்க வேண்டியதில்லை. மாணவர்கள் நேரடியாக எமது கீழ்குறிப்பிட்ட நிலையங்களில் 40% பாடக்கட்டணக் கழிவை உடன் பெற்றுக் கொள்ளலாம்

# ASIAN COMPUTER SYSTEMS

Registered with Tertiary & Vocational Education Commission - Sri Lanka

கொட்டாஞ்சேனை
250,First Floor,
George R. De Silva Ma,
Colombo 13.
Tel : 075-338726

பம்பலப்பிட்டி
SHAKTHI INSTITUTE
( Computer Division),
333,Galle Road,
Tel : 587099

வெள்ளவத்தை
HORROW
( Computer Division),
11,Rajasinghe Rd,Co-06
Tel : 075-518608

## பிஜி சொலமன் தீவுகள்...

# பசுபிக் பிராந்தியத்தை கொந்தளிப்புக்கு உள்ளாக்கியுள்ள இரண்டுப் புரட்சிகள்

தெற்கு பசுபிக் கடற்பகுதியான மெல்லனேஷ்யா என அறியப்படும் தீவுக் கட்டத்திலுள்ள இரண்டு முக்கிய தீவுகளான பிஜி மற்றும் சொலமன் தீவுகளில் இடம்பெற்றுள்ள திடீர்ப் புரட்சிகள் அந்தப் பிராந்தியத்திலேயே நெருக்கடி நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது. பழங்குடியினரையே அதிகமாகக் கொண்டுள்ள இத்தீவுகளிலல் இடம்பெற்றள்ள இந்தப் புரட்சிகள் சர்வதேச சமூகத்தின் கவனத்தை இந்தப் பிராந்தியத்தின் பால் திருப்பவிட்டுள்ள அதே வேளையில், இன அடிப்படையில் பழங்குடியினரிடையே ஏற பட்டுவரும் எழுச்சியையும் வெளிப்படுத்தியுள்ளது.

காலனித்துவ நாடுகளால் இப்பிராந்தியத்தில் புகுத்தப்பட்ட ஜனநாயகத்தை இந்த இரண்டு புரட்சிகளுமே கேள்விக்குறியாக்கியுள்ளன. இரு நாடுகளிலும் இடம்பெற்றுள்ள புரட்சியில் காணப்படுகின்ற ஒற றுமையின் அடிப்படையிலேயே இந்தக் கருத்து முன்வைக்கப்படுகின்றது. மெல்லனேஷியப் பிராந்தியத்திலேயே ஒரு கொந்தளிப்பான நிலை தோன்றுவதற்கு இந்த ஒற்றுமை தான் காரணம்!

இரண்டு புரட்சிகளுமே ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆட்சியாளர்கள் பணய கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அதே போல, இரண்டு புரட்சிகளிலுமே, அதன் நோக்கம்த. இன அடிப்படையில் தோன்றியுள்ள குறைகளைத் தீர்ப்பது தான் எனக் கூறப்பட்டிருக்கின்றது. "ஜனநாயகம்" என்ற பெயரில் தாம் ஒடுக்கப்படுவதாக ஒரு பகுதியினர் கருதுகின்றார்கள் என்பது தான் இந்தப் புரட்சியின் பின்னணியிலுள்ள முக்கிய அம்சம். மற்றொரு புறத்தில் தற்போதுள்ள அரசியலமைப்பு காரணமாக அல்லது அதனை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி தாம் ஒடுக்கப்படுவதாக வளர்ச்சியாளர்கள் சார்ந்த சமூகங்கள் கருதுகின்றன.

இந்திய சமூகத்தைச் சார்ந்த பிஜியின் பிரதமரான மகேந்திர சௌத்திரியையும் அவருடைய சகாக்களையும் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருப்பதை நியாயப்படுத்துவதற்காக கிளர்ச்சியாளர்கள் சொல்கின்ற காரணமும் ஜோர்ஜ் ஸ்பெயிட் தலைமையிலான இந்தக் குழுவினருக்கும், பிஜியின் அதிகாரத்தில் எப்போதுமே கண்வைத்துள்ள இராணுவத்தினருக்கும் இடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலை, பிஜியில் ஒரு ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. இது பிஜியை சர்வதேச சமூகம் ஒதுக்கிவைக்கும் நிலையையும் உருவாக்கியுள்ளது.

ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலாக பிஜியின் பூர்வீக குடியினர் அனுபவித்து வரும் அவலங்களுக்கு முடிவுகட்டப் போவதாக ஸ்பெயிட் தனது அதிரடிப் புரட்சியை நியாயப்படுத்த முனைகின்ற போதிலும், மற்றொரு பிரிவினர் அவருடைய குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு ஆதாரங்கள் எதுவும் இல்லை என அடித்துக் கூறுகின்றார்கள்.

பிஜியின் "மண்ணின் மைந்தர்கள்" குடித் தொகையில் பெரும்பான்மையினராகக் காணப்பட்டதில்லை. இந்திய வம்சாவழியினரதும், சீன ஐரோப்பிய குடியேற்ற வாசிகளினதும் எண்ணிக்கையைக் கணக்கிலெடுக்கும் போது, பூர்வீகக் குடிகள் சிறுபான்மையினராகவே காணப்படுகின்றார்கள். தேர்தலில் பிரதிபலிக்கும் போது, இது



இனக் குழுக்களிடையே அதிகரிக்கும் அதிருப்தி 19ம் நூற்றாண்டின் மோதல் நிலைக்கு பசுபிக் தீவுகளைக் கொண்டு செல்லும் ஆபத்து உருவாகிறது.

நாம். ஒதுக்கப்படுகின்றோம் என்ற உணர்வு பிஜியின் பூர்வீகக் குடிமக்கள் மனதில் பதிந்து விடுகின்றது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் 1970களில் பிஜியிலிருந்து வெளியேறும் முன்னதாகவே இந்த உணர்வு பூர்வீகக் குடியினரை ஆக்கிரமிக்கத் தொடங்கியிருந்தது. பிஜியின் பொருளாதாரத்தில் இந்திய வம்சாவழியினரின் ஆதிக்கம் அதிகளவில் இருந்தமை தான் இந்த முரண்பாடுகள் வளர்வதற்குக் காரணமாக இருந்தன என்பதையும் மறுக்க முடியாது!

இந்த முரண்பாடுகள் கூர்மையடைந்து வந்த ஒரு நிலையில் தான் 1987ம் ஆண்டில் இராணுவப் புரட்சி ஒன்றின் மூலம் இந்திய சார்பு அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது. இதன் பின்னர் 1997ம் ஆண்டு புதிய அரசியலமைப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்திய சமூகத்தினருக்கும் பிஜியின் பூர்வீகக் குடியினருக்கும் இடையே தொடர்ந்து வந்த முறுகல் நிலையை முடிவுக்குக் கொண்டு வந்து, ஜனநாயக சமூகமொன்றை உருவாக்கும் நோக்கத்துடனேயே இந்த அரசியலமைப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் பூமிபுத்திரர்களின் மனக்குறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. பூர்வீகக் குடியினருக்கும் தேசத்தின் அரசியலில் ஈடுபாட்டை அதிகப்படுத்தினால், அவர்களுடைய அதிருப்தியைப் போக்கிக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்பட்டது.

இருந்த போதிலும், புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்பட்ட மூன்று வருட காலப் பகுதியிலேயே ஆயுதம் தாங்கிய பூர்வீக குடியினர் அதிரடிப்புரட்சியை மேற்கொண்டு பிரதமரையும் அவருடைய சகாக்களையும் பணையக் கைதிகளாக்கியுள்ளார்கள். இந்தப் பின்னணியில் இராணுவத்தினர் எடுத்த முடிவு இந்த நிலைமைகளை மேலும் மோசமாக்கியுள்ளது. இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டு, கிளர்ச்சியாளர்களுடன் பேரம் பேசுவதற்கு இராணுவத் தலைமை முற்பட்டுள்ளமை, ஆயுதந்தாங்கிய இரு குழுக்களின் கைகளுக்குள் பிஜி சிக்கித் திண்டாடுவதைக் காட்டுகிறது.

பாராளுமன்றக் கட்டடத்தில் பிரதமர் சௌத்திரியையும் ஏனைய முப்பது பேரையும் பணயக் கைதிகளாகத் தொடர்ந்தும் வைத்துள்ள கிளர்ச்சியாளர்கள், அரசியல் அதிகாரத்திலிருந்து இந்தியர்களை வெளியேற்றிவிட்டு, பிஜியின் பூர்விக மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பதைத் தான் வலியுறுத்துகின்றார்கள். இருந்த போதிலும் நாட்டின் ஆட்சி அதிகாரத்தைத் தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ள இராணுவத்தினரால், பணயக் கைதிகளை மீட்கவோ அல்லது அவர்களது விடுதலை தொடர்பாக கிளர்ச்சியாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவோ முடியவில்லை!

பிஜியில் ஏற்பட்டுள்ள இந்த ஸ்திரமற்ற நிலைமை, அந்நாட்டின் சனத்தொகையில் 44 வீதத்தைக் கொண்டுள்ள இந்தியர்களுக்கும் பெரும் அச்சத்தைக் கொடுத்திருக்கின்றது. பிஜியின் முக்கிய பொருளாதார வளமான கரும்புத் தோட்டங்களில் அதிகளவுக்குக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள இந்தியர்கள் மீது இடம்பெற்றுள்ள தாக்குதல்களைத் தொடர்ந்து அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றப்பட்டுள்ளார்கள். பிஜியில் ஏற்பட்டுள்ள இந்தக் கொந்தழிப்பு நிலைக்கு அந்நாட்டைப் பிளவுபடுத்துவது தான் தீர்வா என்ற கேள்வி இப்போது எழுப்பப்பட்டிருக்கின்றது!

பிஜியைப் போலவே சொலமன் தீவுகளில் ஏற்பட்டுள்ள புரட்சி கூட பூர்விக இன மக்களின் மனக் குமுறல்களின் அடிப்படையிலானதே. அதாவது, மலாட்டா தீவு மக்களுக்கும் தலைநகர் பகுதியான கோடங்கனல் பகுதி மக்களுக்கும் இடையேயான முரண்பாடுகளின் அடிப்படையிலேயே இந்தப் புரட்சியும் இடம் பெற்றிருக்கின்றது. இப்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை ஐம்பது வருடகாலமாக கொந்தளித்துக் கொண்டிருக்கும் ஒன்று.

சொலமன் தீவுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியானது அதன் தலைநகரைச் சுற்றியதாகவே இருந்துள்ளது. மலாட்டா ஒரு சிறு தீவாக இருந்தாலும் கூட மக்கள் தொகை அங்கு தான் அதிகம். ஆனால் தலைநகர் கோடங்கனல் தான் வளர்ச்சியடைந்த ஒரு பகுதியாகவுள்ளது. இந்த இரு பிரிவினருக்கும் இடையேயான முரண்பாடுகளின் விளைவு தான் தற்பேர்து அங்கு ஏற்பட்டுள்ள புரட்சி ! பிரதமர் பத்தலோமியு உறுபறு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இரண்டு இனக் குழுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மோதலில் இறங்கி சொலமன் தீவுகளின் ஜனநாயகமும் கேள்விக் குறியாக்கப்பட்டிருக்கின்றது.

இந்த இரண்டு புரட்சிகளும் சர்வதேச கவனத்தை பசுபிக் தீவுகள் மீது குவியச் செய்துள்ளது. இந்தப் பிராந்தியம் ஸ்திரத் தன்மையை இழந்து வருவதைத்தான் இவை வெளிப்படுத்துகின்றன. பிராந்திய வல்லரசாக உள்ள அவுஸ்திரேலியா இவற்றில் தலையிட்டு சமாதானத்தை நிலைநாட்ட முன்வரவேண்டும் எனவும் குரல் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இரு நாடுகளிலும் ஏற்பட்டுள்ள புரட்சி மெல்லனேஷியா முழுவதும் ஒரு வித பதற்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது. தேசத்தின் கோட்பாடுகள் பூர்விகக் குடிமக்கள் மீது வெளிநாடுகளால் திணிக்கப்பட்டுள்ளன என்ற உணர்வைத்தான் இது ஏற்படுத்தியிருக்கின்றது!

இந்தப் பிராந்தியத்திலுள்ள மற்றொரு நாடான பாப்புவா நியூகினியிலும் இதே போன்று பிரச்சினைகள் காணப்பட்டன. பிரெஞ்சு மற்றும் ஆங்கிலம் பேசும் மக்களிடையே இந்த முரண்பாடுகள் காணப்பட்டன.

"19ம் நூற்றாண்டில் ஐரோப்பிய காலனித்துவ ஆதிக்கம் ஏற்படுவதற்கு முன்னர் பல்வேறு தீவுகளுக்கும், வெவ்வேறு இனக்குழுக்களுக்கும் இடையே நடைபெற்ற ஆயுதப் போராட்ட நிலைக்குத்தான் இந்தப் பிராந்தியம் திரும்பிக் கொண்டிருக்கின்றது என்று தற்போது இடம்பெற்றுள்ள கிளர்ச்சி பற்றி விமர்சிக்கிறார் ஆய்வாளர் ஒருவர்.

ஒவ்வொரு இனக் குழுக்களிலும் தனித்துவமான அடையாளங்கள் உறுதிப்படுத்தப்படாவிட்டால் இந்த நிலைக்கு மீண்டும் செல்வது தவிர்க்க முடியாததாகி விடும் என்பது தான் உண்மை நிலை!

ஞானரதன்

## இடைக்கால நிர்வாக சபை

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக சபையொன்றை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதியும் எதிர்கட்சி தலைவரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங் உடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக இந்திய செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங் கடந்த வாரம் கொழும்பு வந்திருந்தபோது இந்த பேச்சுவார்த்தை இடம்பெற்றது. தமிழர்களுக்கு சம உரிமைகளை வழங்கும் வகையில் புதிய அரசியலமைப்பு சாசனத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு இலங்கை தலைவர்கள் இந்த பேச்சுவார்த்தையின் போது இந்திய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மாகாணங்களுக்கு பிராந்திய சுய நிர்ணயம் என்பது அரசியலமைப்பு சீர்திருத்தத்தில் இடம் பெறுவதைஉறுதிப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாகவேஇலங்கைஇந்திய தலைவர்களுக்கிடையிலான இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது என்றும் இந்திய செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

## மதகுகள் தகர்ப்பு

கடந்த 13ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தின் கொம்மாந்துறை வீதியில் உள்ள மதகு நேற்றுக் காலை இனம் தெரியாதவர்களால் குண்டு வைத்து தகர்த்தப்பட்டுள்ளது. இதனால் இப்பாதையினூடாக மேற்கொள்ளப்பட்ட விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்கான போக்குவரத்துக்கள் யாவும் தடைப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த10ம் திகதியும் வந்தாறுமூலை உப்போடை மதகும் இதே பாணியில் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. உண்மையில் மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதிகளில் நடைபெறும் வாகன கடத்தல் சம்பவங்களை தடுக்கவே மேற்படி மதகுகள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதாக மட்டக்களப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.■

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் (THE EDITORS GUILD OF SRI LANKA) 1999ம் ஆண்டிற்கான விருதுகள் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்ற போது ஆதவனின் சகோதர பத்திரிகையான "ராவய" விற்கு மூன்று விருதுகள் வழங்கப்பட்டன.




ராவய பத்திரிகையின் பிரதம ஆசிரியர் விக்டர் ஐவன் அவர்கள் சேபால் குணசேன அவர்களின் மகளான குணசேனவிடம் சிறந்த பத்திரிகையாளருக்கான விருதினை பெற்றார்.




ராவய பத்திரிகையின் பக்க வடிவமைப்பாளர் அசோக பத்மசிறி அவர்கள் சிறந்த வடிவமைப்பாளருக்கான விருதினை பேராசிரியர் ஜே. பி. திசாநாயக்கா விடமிருந்து பெற்றுக் கொண்டார்.




ராவய பத்திரிகையின் புகைப்படப் பிடிப்பாளர் அஜித் செனவிரத்ன அவர்கள் யுக்திய பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரிடம் இருந்து விருதினை பெற்றார்.

# நல்லுறவு எப்போது வளரும்

புதியதோர் பத்திரிகை... ராவய இல்லத்திலிருந்து தமிழ் மொழியில் வெளிவரும் பத்திரிகைக்கு ஆரம்பத்தில் ஒருவர் வந்தார் அவர் பத்திரிகை துறையில் ஈடுபட்டவர். அவர் தான் பத்திரிகையின் பிரதம ஆசிரியர். பத்திரிகையின் பெயர் ஆதவன். அதன் பின்பு இன்னும் இருவர் வந்தனர். அது நடராசாவும், சுகந்தியுமாகும். பத்திரிகையின் வேலைகள் தொடங்க ஆரம்பித்தது. பின்பு இன்னும் சிலபேர் வந்தனர். நாங்கள் அனைவரும் சகோதரர் போல் இப்போது பழகுகின்றோம். தமிழ் மொழி தெரியாவிட்டாலும் அசோக், இந்திரஜித், நந்தே பக்க வடிவமைப்பிற்கு உதவி செய்கின்றார்கள். ஆசிரியரில் இருந்து நிறுவனத்தின் அனைவருடைய உதவியும் ஆதவன் பத்திரிகைக்கு கிடைக்கின்றது. ஜூன் 18ம் திகதி இப்பத்திரிகை வெளிவருகின்றது. அது எவ்வளவு தூரம் ஆச்சரியமானது. எனக்கு இலங்கையின் வசந்தமிகு அழகான கடந்த காலம் நினைவில் வருகின்றது. எமது தாய், தந்தை, சகோதர சகோதரிகள் தமிழ் மக்களுடன் ஒன்றிணைந்து வாழ்ந்த காலம் நினைவில் வருகின்றது. 30 வருடத்திற்கு பின்பு இலங்கையில் பரந்த தமிழ் சிங்களவருக்கு இந்த ஒன்றிணைப்ப பற்றி தெரியாது. பிரபாகரனும் அந்த காலத்தில் வயது முதிர்ந்தவர் அல்ல, அவருடைய தாய் தந்தையருக்கு இது தெரியும். நாம் மேல் மட்டத்தவர் அல்ல, நாம் தமிழ் மக்களுடன் நல்லெண்ணத்துடனேயே இருந்தோம். நாம் அவர்களின் ஊரான யாழ்ப்பாணம் மட்டக்களப்பிற்கு சென்ற போது எம்மை அன்பாக வரவேற்றனர். அந்த நாள் அனுபவங்களை நாம் எண்ணும் போது கவலை மேலிடுகிறது. நான் அறிந்து கொண்ட சுவிசேச செய்தி யொன்றினை இதில் குறிப்பிட வேண்டும். என் தந்தை அந்த நாட்கள் அரச உத்தியோகத்தர். மட்டக்களப்பு புகையிரதத்தில் பயணம் செய்த தமிழ் குடும்பத்திற்கு உரித்தான தங்க ஆபரணங்கள் அடங்கிய பேழை களவு போய் விட்டதை அவர் அறிந்து கொண்டார். அவர் அதை மிகவும் கஷ்டப்பட்டு தேடிப்பிடித்து உரிமையாளர்களிடம் ஒப்படைத்தார். அந்நேரத்தில் தான் நான் பிறந்திருந்தேன். இந்த தமிழ் குடும்பம் நன்றிக் கடனாக அந்த தங்க நகைகளில் சில வற்றை எனது தந்தைக்கு பரிசாக கொடுத்துள்ளனர். எனது பெயர் ரன்பண்டாவாகும். எங்களுக்கு அவர்களுடன் மேலும் நல்லெண்ணத்துடன் வாழக் கூடிய சூழ்நிலை எப்போது உருவாகும். ஆதவன் பத்திரிகை ஊடாக பிளவு பட்டிருக்கும் இவ் நல்லெண்ணம் மீண்டும் கட்டியெழுப்ப குறைந்தளவேனும் உதவிபுரியுமானால் அது நமக்கு மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

■ R.B. திசாநாயக்கா

# தோட்டத் தொழிலாளர் பிரார்த்தனை இயக்கத்தின் போராட்டம் பயனளிக்குமா?

கடந்த ஞாயிறு முதல் 4 லட்சத்திற்கும் அதிகமான தோட்டத்துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் நாட்டிற்கு சமாதானம் வேண்டியும் சம்பள உயர்வு கோரியும் பிராத்தனை இயக்க போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இப் போராட்டத்துக்கு விரைவில் பலன் கிடைப்பது நிச்சயம் மனம் தளர்ச்சியடையாது. தொடர்ந்தும் பிராத்தனையில் ஈடுபட வேண்டும் என்று இ. தொ. க. தோட்டத் தொழிலாளர்களை கேட்டுள்ளது.

நாட்டில் இருக்கும் அவசரகால சட்டவிதிகளையும் மீறி இம் மக்கள் பிராத்தனை இயக்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாளாந்தம் பெருகிவரும் அத்தியாவசிய பொருட்களின் விலையுயர்வு வாழ்க்கை செலவு அதிகரிப்பு காரணமாகத் தொழிலாளர்கள் தமது அன்றாட வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத நிலையிலே தோட்டத்தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி போராடுகின்றனர்.

தொழில் சங்கங்கள் சம்பள உயர்வு கோரி முதலாளிமார் சம்மேளனத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்ததை அடுத்தே இப்பிரார்த்தனை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இவ் விவகாரம் தொடர்பாக அடுத்து, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து 10க்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஞாயிற்றுக் கிழமை கூடி ஆராயவுள்ளனர்.

## தீர்வுத் திட்ட யோசனை விடுதலைப் புலிகளுக்கு கையளிக்க மறுப்பு

இனப்பிரச்சினை தீர்வுக்கான அரசியல் தீர்வுத் திட்டம பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க மேலும் கால தாமதமாகும் என அரசியல் வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றது.

அரசியலமைப்பு திருத்த யோசனையிலுள்ள பல பகுதிகள் தொடர்பாக அரசிற்கும் ஐ. தே. கட்சி அதிகாரம் அதிகாரப்பகிர்வு அலகு குறித்து இதுவரை இனக்கப்பாடு ஏற்படவில்லை.

ஆரம்பத்தில் அரசியல் தீர்வுத் திட்டம் நகலை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதென அரசு முடிவெடுத்திருந்த போதிலும் புதன் கிழமை நடைபெற்ற எதிர்கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்கள் சந்திப்பில் ஜனாதிபதி அவர்கள் மறுத்துள்ளார். தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க போவதாக தெரிவித்தார்.

# மர்மப் பொருள் வெடித்து இருவர் பலி

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தில் மர்மப் பொருள் வெடித்த சம்பவமொன்றில் தாயும் மகனும் பலியாக்கப்பட்டுள்ளனர். நேற்று இடம் பெற்ற சம்பவத்தில் பலியானவர்கள் 47 வயதான ஈ.கே.சின்னம்மா அவரது மகன் 27 வயதான கே. ரவி என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

3ம் வாய்க்கால் பிரதேசத்தில் வீதியில் கிடந்த உண்டியல் போன்ற பொருளொன்றை எடுத்து வந்து வீட்டில் வைத்த போது அப் பொருள் வெடித்து சிதறியதாக கூறப்படுகிறது.

## மானிப்பாயில் மோதல்

யாழ்பாணம் மானிப்பாய் பகுதியில் 06.15 இடம் பெற்ற மோதலில் 38- 40 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலத்தை சுன்னாகம் பொலிசார் யாழ் வைத்திய சாலையில் ஒப்படைத்து உள்ளனர்.

உடுவிலில் இரு பகுதியினருக்குமிடையிலான மோதலில் புலிகள் இயக்கத்தை சேர்ந்த பெண் ஒருவர், சைனைட் அருந்தி தற்கொலைசெய்து கொண்டதாகவும் மற்றயவர் குண்டை வெடிக்கவைத்து தற்கொலை செய்து கொண்டதாகவும் யாழ்பாண விசேட செய்தி தொடர்பாளர் அறிவித்து உள்ளார்.

# பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கவில்லை

தேசிய கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் படிப்பின் கல்வி டிப்ளோமா நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள கல்முனை பிரதேச பட்டதாரி ஆசிரியர்களுக்கு இது வரை அனுமதி அட்டை கிடைக்கவில்லை என முறைபாடு தெரிவிக்கப்படுகிறது.

எதிர் வரும் 18ம் திகதி நடைபெறவிருக்கும் இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைக்குப் பதிலாக கல்வி மானி தேர்வுப் பரீட்சைக்கான அனுமதி அட்டை மேற்படி பரீட்சார்த்திகளுக்கு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் 18ம் திகதி நடைபெறவிருக்கும் கல்வி மானி தேர்வுப் பரீட்சை விண்ணப்பதாரிகளுக்கு இதுவரை பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லை என முறைபாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.


## துப்பாக்கிச் சூட்டுக்கு பலி

கடந்த 12ம் திகதி திருகோணமலையில் ஈச்சிலம்பத்தை வம்மியடியில் சீருடையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான இனம் தெரியாத சடலம் பின்பு வைத்திய சாலையில் அடையாளம் காணப்பட்டுள்ளது. மேற்படி சீருடையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு உள்ளாகி மரணமானவர் காளி எனப்படும் 34 வயதுடைய காளிராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் இரண்டு குழந்தைகளின் தந்தை ஆவார்.

# ஓ... கவிஞனே!

வானமரத்தின்
வடிவான நட்சத்திர
இலைகளுக்கு மத்தியில்
அணில் கடித்த
மாம்பழமாய்
பிறை நிலா...
ஓ டி ப் ப ி டி த் ` ` து
விளையாடும்
சிறுபிள்ளைகளாய்
வெண் பஞ்சு மேகம்.....
கண்ணுக்கு தெரியாமல்
கல கலத்துக் கொட்டும்
குளிர் நீராய்....!!
கொஞ்சும் பனி....
கன்னிப் பெண்ணின்
காந்தச் சிரிப்பாய்
காதல் பேசும்
தென்றல் காற்று.....
சோகத்தை சொந்தமாக்கி
சோடியைத் தேடி
வா.....வென்று கூவியழும்
கருப்புக் குயில்....
அணு அணுவாய்
இயற்கையின்.....
நிர்வான அழகை
வர்ணித்து மகிழும்
வரம் பெற்றவனாய்
கவிஞன்..... !

**கறுவாக்கேணி
முத்துமாதவன்**



# யாருடைய வீடு?

*இந்தவீடு உன்னுடையதென்று
சொல்வதற்கில்லை
ஆனாலும்
நீ சொல்லுகிறாய் இது உன்னுடையதென்று
பல்லிகள், கரப்பான் பூச்சிகள்
எல்லாமே உன் வீட்டிலுள்ளன.
நீ வளர்க்கும் நாயும் உன் பூமரங்களும்
உள்ளன இந்தவீட்டில்
நீ சொல்லிக் கொண்டிருக்கிறாய் இன்னும்
இந்தவீடு உன்னுடையதென்று
உன் நாய் அதன் இன்னொன்றை
அழைத்துவருமே
இதைத்தன் வீடென்று சொல்லி
உன் வேலைக்காரன் சொல்வானே
தன் சகாவிடம் இது தன் வீடென்று
கரப்பான் பூச்சி நினைக்கும்
இது தன் வீடென்று
பல்லி யோசிக்கும்
இது தானிருக்கும் வீடென்று சிலந்தி
நினைக்கும்
இது தன் விடிருக்கும் வீடென்று
உன்னுடைய பிள்ளை எண்ணுகிறான்
இது தன்னுடைய வீடென்று
இன்னும் நீ சொல்லிக்கொண்டிருக்கிறாய்
இந்த வீடு உன்னுடையதென்று.*

நன்றி இன்னுமொரு காலடி






# வாழ்க்கையைத் தேடி

என் இறுதி மூச்சாக
நான்
வெளியேற நினைத்துக் கொண்டிருக்கையில்
வந்து நிற்கிறாயே என் சிட்டுக் குருவியே......

இதுவரை காலமும் நீ எதுவுமே
என்னிடம் எதிர்பார்த்ததில்லை.....
ஆனால்-
உன்னிடம் நான்
எதிர்பார்த்ததோ ஏராளம்..... ஏராளம்......

ஒரு மனிதன் இறந்து போவதற்கும்
ஒரு மனிதன் இறந்து கொண்டிருப்பதற்கும்
உள்ள வித்தியாசத்தை
ஒரு யுக மேலான காலத்தால்
புரிந்து கொண்டேன் கண்மணியே.....

சினேகிதியான நீயும்
உன்னுடைய நீண்டகால வரலாறும்
சூழ்ந்து நிற்க
இறந்து கொண்டிருப்பது என்பது கூட வேதனையே....

உன் வார்த்தைகளில்
வாழ்கை பற்றி
எவ்வளவோ கேட்டிருக்கிறேன்....

நான் வெளியேறிய பின்னர்
ஜென்மம் நீங்கிய ஒரு கவிஞன்
மறைந்து விட்டான் என்பதெல்லாம்
நீ அறிந்தது தானே என் சிட்டே.....

இனி ஒரு சிறு உதவி....
உன் வாழ்க்கை பற்றிய வார்த்தைகளில் எல்லாம்
என் கடைசி வரிகளையும்
சேர்த்திணைத்துப் பாடு......

என் சிட்டுக் குருவி....
மன்னித்து விடு என்னை...
இறுதி வரை நான் முயன்ற ஒரு சாதனை
அழகான
வாழ்க்கை ஒன்றைக் காண நினைத்தது தான்....
அழகான வாழ்க்கை ஒன்றைக் காண......

■ பரீல்

# மறுதலிப்பு

*காலை மாலை
இரவு
இயந்திரமாகி
உறவின் பிணைப்பில்
அமைதியாகி
தியாகமே
வாழ்க்கையாகி
தாய்மையே
அடையாளமாகி
அடக்கமே
உருவமாகி
இன்னும்....*

*ஓ! இல்லை!
உடலை உலுப்பு
உன்னுடன் பேசு
தயாராகு பகிஸ்கரிப்பிற்கு*

■ *FRANKFURTU* ரஞ்சினி




# பொல்லைக் கொடுத்து அடிவாங்காதையுங்கோ

நான் ஒரு முட்டாளுங்க - நல்லா
படிச்சவங்க நாலு பேரு சொன்னானுங்க
நான் ஒரு முட்டாளுங்க!
சாவகாசமாக பாடியபடி வாழைச்சேனை
அண்ணாவியார் குஷியாக
போய்க் கொண்டிருந்தார்.
பின்னால் சைக்கிளில் வந்த பொன்னர் சைக்கிளை
நிறுத்தியபடி
அண்ணாவியார் எங்கே இந்தப்பக்கம் என்று கேட்க
வயல் பக்கம் பொயித்திட்டு வாரன்,
ஆற்றங்கரைக்குப் போயி குண்டி கழுவப் போனாலும்
பத்தக் காட்டுக்கில இருந்து கொண்டு
"கோ ஐடண்டி என்று கேட்குராங்கள்
என்று விசயத்துடன் புலம்பினாார் அண்ணாவியார்.
அதுசரி அண்ணாவியார், சித்தாண்டிப் பக்கம் என்ன
புதினம்,
சித்தாண்டி கோவிலுக்கு இழுபறியாமே
அதோட சின்னப்புவின் மூத்தவளை நேற்றையில
இருந்து காணல்லயாமே
என்ன? அண்ணாவியார்
உனக்குத் தெரிஞ்சிருக்குமே
என்று பொன்னர் வினாவினார்.
அண்ணாவியார் ஹி, என இளித்துக்கொண்டு
ஊர் கிடக்கிற கிடையில
ஊமையன் விசிலடிச்சானாம்.
பொன்னர் நீர் ஊர் புதினம் அல்ல கேட்கிறது
ஊர்வம்பு
இந்தா பொன்னர் ஊர் பெட்டையளைப் பற்றி
கதைக்காத
உனக்கும் குமருகள் இருக்கு என்றார் அண்ணாவியார்
வாயில் வெற்றிலையை சப்பியபடி
அதுசரி பொன்னர் என்ன இது சைக்கிளுக்குப்
பின்னால் பெரிய மூடை
கூப்பன் கடைக்குப் போய்
சமுர்த்தி சாமான் வாங்கி வாரன்
அண்ணாவியாருக்கு தூக்கிவாரிப் போட்டது.
என்ன சமுர்த்தியோ?
இது வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்பவருக்கல்லவோ
கொடுக்கிறது.
உனக்கு எப்ப பொன்னர் இந்த நிலை வந்தது.
அடேய் இப்பவல்லோ விளங்குது.
மனிசியின்ட தம்பி சமுர்த்தி உத்தியோகத்தர்
சொந்த மருமகன் அது தான் உண்ட
மக்ளை கூட்டிக் கொண்டு ஓடினானே
அவன் கூப்பன் கடை மனேஜர்
அப்ப வறுமை கோட்டிற்கு கீழத்தானே இருப்பீர்.
இங்க இன்றைய சூழலில்
எத்தனையோ பேர் கஞ்சிக்கும்
வழியில்லாமல் ஏங்குதுகள்
அவையளுக்கு சமுர்த்தி முத்திரை இல்லை.
வாகரையில் மக்கள் அகதியாகி
அகதி நிவாரணமின்றி வாடுதுகள்.
உன்ர மருமகள் கூப்பன் கடை மனேஜர்
மச்சான் சமுர்த்தி உத்தியோகத்தர்.
அப்ப என்ன குறை
உமக்கு சமுர்த்தி, வரும்
அகதி நிவாரணம், வரும்
வெள்ள நிவாரணம், வரும்
வரட்சி நிவாரணம், வரும்
பொன்னர் ஊரைச்சுற்றி உலையில போடாத
பொன்னர்ர தலை சுற்றியது......
இது தான் பொன்னர் சொல்றது
பொல்லக் கொடுத்து அடி வாங்காதையுங்கோ
என்று அண்ணாவியார் கூறிக் கொண்டு
மீண்டும்
நான் ஒரு முட்டாளுங்க
நல்லா படிச்சவங்க நாலுபேரு சொன்னாங்க....
போய்க் கொண்டே இருக்கின்றார்.....

■ விகடகவி

**அமெரிக்கா, பங்களாதேஷில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாக்களில் விருதுகள் பெற்றுள்ள இத்திரைப்படம் இலங்கைத் திரைப்பட ரசிகர்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.**



# இருளும் ஒளியும்

கொழும்புத் திரைகளில் இப்போது 75ம் நாளையும் தாண்டி சரோஜா திரைப்படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. திரு சோமரத்ன திசாநாயக்கா இத்திரைப் படத்தை நெறியாள்கை செய்து தயாரித்துள்ளார்.

சரோஜா திரைப்படக் கதை எல்லைக்கிராமம் ஒன்றில் இடம்பெறுகிறது. அதாவது வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிக்குளத்தை பின் புலமாக வைத்தே இத் திரைப்படம் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகள் சுந்தரத்தின் மகனை கட்டாயமாக தமது இராணுவத்தில் சேர்க்கின்றனர். பின் அவன் இறந்து போகவே சுந்தரமும் கட்டாயமாக விடுதலைப் புலிகளின் இராணுவத்தில் சேர்க்கப்படுகின்றான். சுந்தரம் விடுதலைப்புலிகளின் கட்டளையை நிறைவேற்றத்தவறியதால் அவனின் மனைவி விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்படுகின்றாள். சுந்தரம் தனது 7 வயது மகள் சரோஜாவுடன் காலில் ஏற்பட்ட சூட்டுக்காயத்துடன் நிர்க்கதியாய் காட்டில் அலைந்து திரிகின்ற வேளை ஆற்றிற்கு தண்ணீர் எடுக்கச் சென்ற சரோஜாவிற்கு அயல் சிங்கள கிராமத்தில் வாழும் புஞ்சி பண்டா ஆசிரியரின் மகளான வருணியின் நட்பு கிடைக்கின்றது. பின்பு இது வளர்ந்து சுந்தரத்தை புஞ்சி பண்டா வீட்டிற்கு அழைத்து வந்து வைத்தியசாலையில் அனுமதித்து சுந்தரம் குணமாகின்றான். சுந்தரத்தை வைத்தியசாலையில் அனுமதித்து வைத்தியம் செய்ய உதவி செய்த காரணத்திற்காகவும் புஞ்சிபண்டாவும், விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்திருந்த குற்றத்திற்காக சுந்தரமும் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு பின்னர் நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்படுகின்றனர். சுந்தரத்திற்கு அடைக்கலம் கொடுத்த குற்றத்திற்காக முழுக்கிராமமுமே புஞ்சிபண்டா ஆசிரியரை எதிர்க்கின்றது.



இறுதியில் சுந்தரம் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்படுகின்றார். இது திரைக்கதையின் ஓட்டமே தவிர முழுக்கதையுமல்ல.

இயக்குனர் சோமரத்ன திசாநாயக்கா இன்றைய இனப்பிரச்சினையின் தன்மையை புரிந்து கொண்டுள்ளாரோ அல்லது புரிந்தும் அதிலிருந்து நழுவிப்போகப் பார்க்கின்றாரோ தெரியவில்லை. இலங்கை இராணுவத்தை மிக உயர்ந்த நிலையிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மனிதத் தன்மையற்ற கொடூர இயக்கமாக சித்திரித்துக் காட்டுகின்றார். இலங்கை இராணுவத்திற்கு நற்சான்றிதழ் வழங்க சோமரத்ன அவர்கள் தவறவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாக ஏன் உருவெடுத்தது எனும் காரணத்தை மக்களுக்கு தெளிவு படுத்தாமல் விட்டு விடுகின்றார். சரோஜாவின் தாயையும் தந்தையையும் எல்.டி.டி.ஈ இயக்கதினர் கொலை செய்வதின் ஊடாக அவர்களின் கொடூரத்தை சுட்டிக்காட்டி அவர்களின் அரசியலை முழுமையாக மறுதலிக்கின்றார். விடுதலைப் புலிகளினால் சில வேளைகளில் இவ்வாறான படுகொலைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது உண்மையானதாகும். விடுதலைப்புலிகளின் அரசியல் வியூகத்தில் சில பாசிசத் தன்மை உண்டு என்பதையும் ஏற்றுக் கொண்டு இதனை நாம் நிச்சயமாக எதிர்வாதத்தின் மூலம் யதார்த்த நிலையில் நின்று எதிர்க்க வேண்டும்.

இதுவரை இன முரண்பாடு சம்பந்தமாக எடுக்கப்பட்ட திரைப் படங்களில் இத்திரைப் படம் முன்னணியில் நிற்கின்றது. வெளிப்படையாகவே இந்த நாடு தமிழருக்கும் சொந்தம் என்றும் தமிழ் மக்கள் எல்லோரையும் துட்டகைமுனு அழிக்க நினைத்திருந்தால் அவன் ஒரு தேசிய வீரன் அல்ல என்றும் புஞ்சி பண்டா ஆசிரியர் பாத்திரத்தின் ஊடாக கூறுகின்றது.

அன்பு எல்லா எல்லைகளையும் கடந்து நிற்கும். புஞ்சி பண்டாவும் அவரது மகள் வருணியும், மனைவியும் ஒரு வேலிக்குள் இருந்தே இந்த அன்பை காட்டுகின்றார். அதையும் தாண்டி அவளுக்கு அந்த சமூகத்தால் கிடைக்கும் அன்பாக இதனை சித்தரித்திருந்தால் இன்னும் மேலானதாக இருக்கும். இனப்பிரச்சினை தொடர்பாக மேலோட்டமாக தடவியுள்ள இயக்குனர் இதனை இன்னும் தெளிவுபடுத்தி இருக்கலாம். அரசியல் எல்லைக்கு மேலாக நின்று பார்ப்போமேயானால் இன்றைய காலகட்டத்தில் ஒரு பெறுமதியான திரைப்படமாக சரோஜா இருக்கின்றது.

## ஆதவன் சினிமா

# பிரித்தானிய திரைப்பட விழாவுக்கு முகவுரை







தேசியதிரைப்படக் கூட்டுத்தாபனமும் பிரித்தானிய கவுன்சிலும் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்ட பிரித்தானிய திரைப்பட விழா கடந்த மே மாதம் 22ம் திகதி முதல் 28ம் திகதி வரை கொழும்பு எல்பிஸ்டன் அரங்கில் நடைபெற்றது. இங்கு Women in Love, The Remains of the Day, Sense and sensibility, Notting Hill, My name is joe, With or Without you, Topsy Turvy ஆகிய திரைப்படங்கள் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டது. இத் திரைப்படங்கள் பிரித்தானிய திரைப் படத்துறையில் எழுந்துள்ள புதிய திரைப் பட கலாச்சாரத்தை எடுத்துக் காட்டுகின்றது.

உலகத்தில் சினிமாவும், தொலைக்காட்சியும் ஆரம்பத்தில் வெறும் பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்ட ஊடகமாகவே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இன்று இத்திரைப் படத்துறை வளர்ச்சியடைந்த வாழ்வியலின் பல பாகங்களைத் தொட்டுக் காட்டும் அம்சமாக மாறியுள்ளது. இன்று திரைப்படத்துறை வெறும் பொழுது போக்கு அம்சங்களைக் கொண் ஊடகமல்ல, மனித உணர்வுகளை, மனித நேயத்தை, எடுத்துக் காட்டும் சித்திரங்களாக பரிணமித்துள்ளது. 1969ம் ஆண்டு வெளிவந்த Women in Love திரைப் படமும் திரையிடப்பட்டது. குறிப்பிட்ட ஒரு வட்டத்திற்குள் வாழும் மனிதர்களின் நிதானமின்மையை எடுத்துக்காட்டும் இத்திரைப்படம் காதலுக்கும், திருமணத்திற்கும் அப்பால் சுதந்திர முடையவர்களாக வாழவேண்டும் என்கின்ற கருத்தினை வலியுறுத்துவதுடன் திருமணம் தாம்பத்திய உறவு மட்டத்தில் மட்டும் அடிப்படையான கருத்துக்களை இத்திரைப் படம் கொண்டுள்ளது. அதே போல் சினிமாவின் மொழியான கமராவும், மிகைப்படுத்தப்படாத இயற்கையான நடிப்பும் இத்திரைப்படத்தை உயர்த்தி நிற்கின்றது. மிக கலை நுணுக்கத்துடன் கூடிய படைப்பு ஆசையால் இத்திரைப் படத்தில் உரையாடல் பற்றிய அவதானிப்பு எமக்கு தேவையற்றதாகி விடுகின்றது.

இத் திரைப்பட விழா திரையிடப்பட்ட ஏழு திரைப்படங்களில் Rechard Curtis நெறியாள்கை செய்த Notting Hill எனும் திரைப்படம் மிகவும் சிறந்த படைப்பாக இருக்கின்றது. சினிமா நடிகை ஒருத்திக்கும் புத்தகக் கடையொன்றினை நடாத்தும் இளைஞன் ஒருவனுக்கும் மத்தியில் ஏற்படும் காதலைப் பற்றி இத் திரைப்படம் கூறி நிற்கின்றது. திரைப் படத்தில் காண்பிக்கப்படும் காட்சிகள் எமக்கு புதியதாக இல்லாவிட்டாலும் இயற்கையான நடிப்பும் சினிமா நுட்பமும் இதில் மேலோங்கி இருக்கின்றது. இவ் நடிகை Anna Scout எனும் பாத்திரத்தில் நடிக்கும் திரைப் படமொன்றின் காட்சிக்கு



இவளது காதலன் வருகை தந்ததையடுத்து அவள் கோபம் கொள்கின்றாள். அதன் பின்பு அவள் புத்தக கடைக்கு வந்து தன்னால் ஏற்பட்ட தவறுக்கு மன்னிப்பு கோருகின்றாள். இவர்களில் காதல் மிகவும் உண்ணதமாக சித்திரிக்கப்பட்டிருக்கின்து.

With orWith out You திரைப்படத்தின் மூலமாக குழந்தை இல்லாத இளம் தம்பதிகள் இருவரின் மனோ நிலையை இத் திரைப்படம் எடுத்துக் காட்டுகிறது. இந்த இளம் தம்பதிகள் இருவரும் வாழ்க்கையை மிகவும் இன்பகரமாக சுவைக்கின்றனர். பின்னடைவில் குழந்தை இல்லாத காரணத்தினால் குடும்பத்தில் சிக்கல்கள் எழுகின்றன. தாம்பத்திய உறவில் கூட உடல் இச்சைக்கு மேலாக அவர்கள் பிள்ளைப் பேறையே அதிகமாக ஆவலுடன் விரும்புகின்றார்கள். குடும்ப உறவில் குழந்தை இல்லாவிட்டால் குடும்பத்திற்குள் எவ்வகையான நெருக்கடிகள் ஏற்படும் என்பதை இத்திரைப்படம் நன்கு உணர்த்துகின்றது. திரைப்பட விழாவில் காண்பிக்கப்பட்ட திரைப் படங்கள் அனைத்தும் கதையம்சத்தில் மிகவும் கனதியாகவே இருந்தது. தமிழ் சினிமாக்காரர்கள் இவற்றை முன் உதாரணமாகக் கொள்ள வேண்டும்.

■ விமலநாத் வீரரத்ன

இப் பத்திரிகை ராவய பப்லிஷன் (கரன்ட்) லிமிட்டெட்டாரால் மஹரகம பிலியந்தல வீதி 83ம் இலக்க ராவய அச்சகத்தினால் 2000ம் ஆண்டு ஜூன் மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.